bible educational services

# ஆசிரியருக்கான வழிமுறைகள்

## பைபிள் டைம் நிலை 3 & 4

### தொடர் A

பாடம் 1-6

INDIA
bible educational services
WWW.besweb.com

# ஆசிரியருக்கான வழிமுறைகள்

பைபிள் டைம் பாடங்கள் முதன் முதலில் அஞ்சல் வழி கல்வியாகவே அறிமுகம் செய்யப்பட்டாலும், அஞ்சல் வசதியல்லாத பகுதிகளில் இந்த பாடங்கள் அதிகமாய் பயன்படுத்தப்படுவதால் அஞ்சல் வழியிலேயே இப்பாடங்களை கற்றுத்தருவதில் அநேக சிக்கல்கள் உள்ளன. விசே'மாக ஆப்பிரிக்கா மட்டும் இந்தியா போன்ற நாடுகளில் உள்ள சபைகளில் மற்றும் பள்ளிகளில் இந்த சிரமம் உள்ளது. எனவே இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் பயன்படுத்துவதற்காக இந்த ஆசிரியருக்கான வழிமுறைகள் உருவாக்கப்படுகிறது. இந்த புத்தகத்தில் உள்ள ஆசிரியருக்கான வழிமுறைகள் முதல் நிலை மற்றும் இரண்டாம் நிலை பாடங்களுக்கானவை, அதாவது வயது 5-10 வரை உள்ள பிள்ளைகளுக்கானவை.

பைபிள் டைம் பாடங்களில் உபயோகப்படுத்தப்படும் அதே வேதாகம பகுதியே இந்த ஆசிரியர் கையேட்டிலும் பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்த பாடங்கள் வாராந்திர அடிப்படையில் பயன்படுத்தப்பட வேண்டியவை. ஏப்ரல் மாத பாடங்கள் ஈஸ்டரை பற்றியும், டிசம்பர் மாத பாடங்கள் கிறிஸ்துமஸ் பற்றியும் இருக்கும்.

சில பகுதிகளில் வாராந்திர பாடங்கள் யு 4 லும் சில பகுதிகளில் யு5 புத்தகத்தில் 24 பாடங்களும் கொடுக்கப்படும். பொதுவாக ஆசிரியர் சபையிலோ அல்லது பள்ளியிலோ வைத்து ஒரு பாடத்தைக் கொடுப்பார், அது வீட்டுக்கு எடுத்து செல்லப்பட்டு மறுவாரம் திரும்ப கொடுக்கப்படும். அந்த மாத முடிவில் எல்லா பாடங்களும் திரும்ப பெறப்பட்டு ஆசிரியரால் திருத்தப்பட்டு மதிப்பெண் கொடுக்கப்படும், பின்னர் திரும்ப மாணவர்களிடம் கொடுக்கப்படும்.

புத்தகங்கள் சரியாக பயன்படுத்தப்பட்டால், ஒவ்வொரு வகுப்பு நேரம் முடிந்தவுடன், புத்தகங்கள் திரும்ப பெறப்பட்டு மதிப்பெண் கொடுக்கப்படும். பல நேரங்களில் அது சாத்தியப்படாது, எனவே அப்படிப்பட்ட நேரங்களில் மாணவர்களிடம் புத்தகங்கள் மாற்றி கொடுக்கப்பட்டு ஒவ்வொருவரும் தங்கள் நண்பனின் புத்தகத்தை திருத்தி மதிப்பெண் இடுவதற்கான இடம் உண்டு, மற்றும் மாணவரின் முன்னேற்றத்தைப் பற்றி குறிப்பு எழுதும் இடமும் உண்டு, புத்தகத்தின் கடைசியிலே 6 மாத கால மதிப்பெண் சதவீதத்தைக் குறிக்கவும் மாணவருக்குக் கொடுக்கும் படியான ஒரு சான்றிதழும் உண்டு.

## ஆசிரியருக்கான ஆயத்தம்

ஆசிரியருக்கு எந்த ஒரு சுதந்திரமுமில்லாமல் அவர்களுடைய கருத்துக்களுக்கு மதிப்பளிக்காமல் இருக்க எங்களுக்கு மனதில்லை. கீழ்க்காணும் குறிப்புகள் பைபிள் டைம் புத்தகங்களை அதிக ஆக்கப்பூர்வமாக பயன்படுத்த உதவும்.

கதையை நன்றாக தெரிந்து வைத்துக் கொள்ள வேண்டும்: வேதாகம கதையையும் பைபிள் டைம் பாடத்தையும் ஆசிரியர்கள் நன்றாக அறிந்திருக்க வேண்டும். பாடங்களை கற்றுக்கொடுக்கும் முன்னரே பாடங்களை ஆசிரியர்கள் செய்து முடித்திருக்க வேண்டும், பாடங்களை ஆயத்தம் செய்யும் போது வழிமுறைகளையும் கருத்தில் கொள்ளுதல் அவசியம்.

கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்களை புரிந்து கொள்ள வேண்டும்: ஒவ்வொரு பாடத்திட்டத்தின் ஆரம்பத்தில் “நாம் கற்றுக்கொள்வது” என்கிற ஒரு பகுதி உண்டு அதன் கீழ் 2 குறிப்புகள் உண்டு. இவைகள் தான் பிள்ளைகள் அன்றைய நாளில் ஆசிரியர் பாடத்தை எடுத்து முடித்த பின்பும், பாடப்புத்தக வேலையை செய்து முடித்த பின்பும் மாணவர்கள் கற்றுக்கொள்ள போகிற வி'யங்கள். முதல் குறிப்பு பிள்ளைகள் பாடத்தை புரிந்துகொள்ள உதவும், இரண்டாம் குறிப்போ பிள்ளைகளை சிந்திக்கச்செய்வதும், பின்னர் அதை கடைபிடிக்கவும் தீர்மானம் எடுக்கவும் உதவும். இந்த குறிப்புகள் அன்றைய நாளில் கற்றுக்கொடுக்கும் முக்கிய சத்தியத்தின் சிறு குறிப்புகளேயாகும். ஆசிரியர்களும் இந்த குறிப்புகளை தங்கள் தனிப்பட்ட வாழ்வில் ஒப்பிட்டு சிந்தித்துப் பார்க்கலாம்.

அறிமுகப்படுத்தவும்: ஒவ்வொரு பாடத்திலும் பிள்ளைகள் அந்த சூழ்நிலையில் இருக்கும் போது அவர்களின் அனுபவங்கள் எப்படியிருக்குமோ அதை வைத்தே பாடங்கள் துவக்கப்படும். பாடங்களை துவக்க பிள்ளைகளோடு கலந்து ஆலோசிக்க சில கருத்துக்களை நாங்கள் கொடுத்துள்ளோம்.

கற்றுக்கொடுக்கவும்: ஒவ்வொரு கதையிலும் முக்கிய புள்ளிகள் கொடுக்கப்பட்டுள்ளன. இந்த கதைகளை கற்றுக்கொடுக்கும் போது அதை ரசிக்கும் விதமாகவும், ஆக்கப்பூர்வமாகவும் கற்றுக்கொடுக்கவும் மற்றும் இந்த புத்தகத்தை பிள்ளைகள் முன்பாக திறந்து பார்க்காமல் முன்னதாகவே கதையை நன்கு அறிந்து போதிக்கவும் வேண்டும் என நாங்கள் எதிர்ப்பார்க்கிறோம். பிள்ளைகள் கதையின் முக்கிய பாடத்தை நன்கு கற்றுக்கொண்டு தாங்கள் எடுக்க வேண்டிய தீர்மானத்தை நன்கு புரிந்து எடுக்க ஆசிரியர்கள் வாஞ்சிக்க வேண்டும். தேவைக்கு ஏற்றார் போல சில விளக்கங்களை நாங்கள் கொடுக்க முயற்சித்திருக்கிறோம். அவை இட்டாலிக்ஸ் வடிவிலே இருக்கும்.

கற்றுக்கொள்ளவும்: ஒவ்வொரு கதைக்கும் ஒரு முக்கிய வசனம் உண்டு. சில சமயங்களில் இரண்டு வசனங்களும் இருக்கும். மற்றொரு வசனம் கொடுக்கப்பட்டிருக்கிறபடியால் அவை எப்பொழுதும் எளிமையாக கற்றுக்கொள்ளுகிற அளவிற்கே இருக்கும். வேதாகம முக்கிய வசனங்களை பிள்ளைகள் கற்றுக்கொள்ளும் அறிவிலே வளர்வதற்கு முக்கிய வசனங்களை அடிக்கடி ஞாபகப்படுத்துதல் அவசியம் என நாங்கள் நம்புகிறோம்.

செய்து முடிக்கவும்: ஒரு பள்ளியாக இருக்கும் பட்சத்தில், பிள்ளைகளுக்கு பாடத்தாள்களை செய்துமுடிக்கும் திறன் எவ்வளவு உண்டு என்பதையும், ஆசிரியர்களுடைய ஒத்துழைப்பு எவ்வளவு தேவை என்பதையும் நன்கு அறிந்து கொள்ள முடியும். ஆனால், சில இடங்களில் ஆசிரியர் பாடப்பகுதியை சத்தமாக வாசிக்க வேண்டிய அவசியம் ஏற்படலாம். சில பிள்ளைகள் தாங்களாகவே வாசித்துக்கொள்வார்கள். எவ்வித சூழ்நிலையானாலும் சரி, பிள்ளைகளின் கவனத்தை கட்டுக்குள் வைக்கவும், கேள்விகளை பற்றியக் குறிப்புகளை கவனிக்கவும் இதை செய்யலாம். பள்ளிக்கூடம் அல்லாத சூழ்நிலையிலே நீங்கள் பைபிள் டைமை பயன்படுத்துபவராயிருந்தால், நீங்கள் பிள்ளைகளோடிருந்து அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும், மற்றும் பாடங்களை செய்து முடிக்கும் போது மாணவர்களுக்கு அது சுமையாக இல்லாமல், தேர்வு போல இல்லாமல் சுவாரஸ்யமாக இருக்கும்படி செய்ய வேண்டும்.

நினைவில் கொள்ளவும்: எங்கெல்லாம் முடிகிறதோ அங்கெல்லாம், கேள்வி பதில்கள் மூலமாகவும், நடித்து காட்டுதல் மூலமாகவும், பாடங்களை நன்கு கற்றுக்கொள்ளவும், நினைவில் கொள்ளவும் உதவி செய்ய முயற்சி செய்திருக்கிறோம்.

## முக்கிய வசனங்களைக் கற்றுக்கொடுத்தல்:

கற்றுக்கொடுக்கப்படும் வசனத்தை ஒரு தாளிலோ அல்லது போர்டிலோ சில வார்த்தைகளை தவிர்த்து எழுத வேண்டும். பிள்ளைகள் வசனத்தை மீண்டும் மீண்டும் வாசிக்க செய்ய வேண்டும். அவர்கள் சொல்ல சொல்ல மீதி வார்த்தைகளை அழிக்க வேண்டும். கடைசியிலே எல்லா வார்த்தைகளையும் அழித்து முடிவதற்குள் பிள்ளைகள் முழு வசனத்தையும் கற்றுக்கொள்வார்கள்.

முக்கிய வசனத்தைக் கற்றுக்கொடுக்க,

ய) ஹெங்க்மேன் விளையாட்டை போல, வசனங்களின் எழுத்துக்களுக்கு பதிலாக கோடிட்ட இடம் இட வேண்டும். அந்த வசனத்தில் எழுத்துக்களை கீழே எழுத வேண்டும். பிள்ளைகள் கோடிட்ட இடத்திற்கு பொருத்தமான வார்த்தைகளை கவனித்து எழுத வேண்டும்.

டி) வேதாகமத்தை பிள்ளைகள் கையில் கொடுத்து சொல்லும் வசனத்தை அவர்கள் கண்டுபிடித்து வாசிக்க செய்ய வேண்டும்.

## காலத்திட்டம்:

பாட ஒழுங்கு: ஒவ்வொரு பாடத்திற்கும் பாடம் நடத்தும் ஒழுங்கை நாங்கள் தீர்மானித்துள்ளோம், ஆனாலும் ஆசிரியர்கள் தங்கள் சூழ்நிலைக்கு ஏற்றார்போல் அதை மாற்றிக்கொள்ளலாம்.

முன்னுரையும், கதை கூறுதலும் - ஏறக்குறைய 15 நிமிடங்கள் முக்கிய வசனம் கற்றுக்கொடுத்தல் - 5-10 நிமிடங்கள் பாடத்தாள் வேலையை முடித்தல் - 20 நிமிடங்கள் வினா விடை மற்றும் இதர வேலைகள் - 5-10 நிமிடங்கள்

இந்த முக்கிய வாசகத்தை ஞாபகம் வைக்கவும்.

“சொல்லுங்கள் ஒருவேளை மறந்துவிடுவேன்
காட்டுங்கள் அதை நான் ஞாபகம் கொள்வேன்
செய்ய வையுங்கள் நான் புரிந்துகொள்வேன்”

| | நிலை 0 (ப்ரீ-ஸ்கூல்)<br>நிலை 1 (5-7 வயது)<br>நிலை 2 (8-10 வயது) | நிலை 3 (11-13 வயது) | நிலை 4 (14+ வயது) |
|---|---|---|---|
| தொடக்கநிலை தொடர்பாடங்கள் | 1. தொடக்கப்பாடம் - அறிமுகம்<br>2. U1 - லூக்காவின் சுவிசேஷம்<br>3. U2 - லூக்காவின் சுவிசேஷம்<br>4. U2 - லூக்காவின் சுவிசேஷம் | 1. தொடக்கப்பாடம் - அறிமுகம்<br>2. U1 - லூக்காவின் சுவிசேஷம்<br>3. U2 - லூக்காவின் சுவிசேஷம்<br>4. U2 - லூக்காவின் சுவிசேஷம் | 1. தொடக்கப்பாடம் - அறிமுகம்<br>2. U1 - லூக்காவின் சுவிசேஷம்<br>3. U2 - லூக்காவின் சுவிசேஷம்<br>4. U2 - லூக்காவின் சுவிசேஷம் |
| தொடர் A | 1. சிருஷ்டித்தல்<br>2. நோவா<br>3. பேதுரு<br>4. பேதுரு - சிலுவை<br>5. ஆபிரகாம்<br>6. ஆபிரகாம்<br>7. பேதுரு<br>8. பேதுரு<br>9. யாக்கோபு<br>10. ஆதி கிறிஸ்தவர்கள்<br>11. பவுல்<br>12. கிறிஸ்துமஸ் கதை | 1. சிருஷ்டித்தல்<br>2. நோவா<br>3. பேதுரு<br>4. பேதுரு - சிலுவை<br>5. பேதுரு<br>6. ஆபிரகாம்<br>7. யாக்கோபு<br>8. ஜெபம்<br>9. பவுல்<br>10. பவுல்<br>11. பவுல்<br>12. கிறிஸ்துமஸ் கதை | 1. சிருஷ்டித்தல் & வீழ்ச்சி<br>2. ஆரம்பகால முன்னேற்றங்கள் - ஆதியாகமம்<br>3. பேதுரு<br>4. பேதுரு - சிலுவை<br>5. பேதுரு<br>6. ஆபிரகாம்<br>7. யாக்கோபு<br>8. கிறிஸ்தவ வாழ்க்கை<br>9. பவுல்<br>10. பவுல்<br>11. பவுல்<br>12. கிறிஸ்துமஸ் கதை |
| தொடர் B | 1. கிறிஸ்துவின் ஆரம்ப வாழ்க்கை<br>2. அற்புதங்கள்<br>3. பெத்தானியா<br>4. சிலுவை<br>5. உவமைகள்<br>6. யோசேப்பு<br>7. யோசேப்பு<br>8. இயேசு சந்தித்த மக்கள்<br>9. மோசே<br>10. மோசே<br>11. மோசே<br>12. கிறிஸ்துமஸ் கதை | 1. உவமைகள்<br>2. அற்புதங்கள்<br>3. பெத்தானியா<br>4. சிலுவை<br>5. ஆதி கிறிஸ்தவர்கள்<br>6. யோசேப்பு<br>7. யோசேப்பு<br>8. சுவிசேஷம் எழுதிய ஆசிரியர்கள்<br>9. மோசே<br>10. மோசே<br>11. மோசே<br>12. கிறிஸ்துமஸ் கதை | 1. உவமைகள்<br>2. அற்புதங்கள்<br>3. பெத்தானியா<br>4. சிலுவை<br>5. ஆதி கிறிஸ்தவர்கள்<br>6. யாக்கோபும் அவருடைய குடும்பமும்<br>7. யோசேப்பு<br>8. அப்போஸ்தலர். 2:42 - முன்னே இருக்கும் வழி<br>9. மோசே<br>10. மோசே<br>11. நியாயப்பிரமாணம்<br>12. கிறிஸ்துமஸ் கதை |
| தொடர் C | 1. தானியேல்<br>2. அதிக அற்புதங்கள்<br>3. இயேசு சந்தித்த மக்கள்<br>4. கிறிஸ்துவின் மரணம்<br>5. ரூத் & சாமுவேல்<br>6. தாவீது<br>7. தாவீது<br>8. யோசுவா<br>9. எலியா<br>10. எலிசா<br>11. யோனா<br>12. கிறிஸ்துமஸ் கதை | 1. தானியேல்<br>2. இயேசு சந்தித்த மக்கள்<br>3. அதிக அற்புதங்கள்<br>4. கிறிஸ்துவின் மரணம்<br>5. ரூத்<br>6. சாமுவேல்<br>7. தாவீது<br>8. யோசுவா<br>9. எலியா<br>10. எலிசா<br>11. தேவன் பயன்படுத்திய மனிதர்கள் - ப.ஏ.<br>12. கிறிஸ்துமஸ் கதை | 1. தானியேல்<br>2. இயேசு சொன்னவை<br>3. கர்த்தருடைய வல்லமை<br>4. கிறிஸ்துவின் மரணம்<br>5. ரூத்<br>6. சாமுவேல்<br>7. தாவீது<br>8. யோசுவா<br>9. எலியா<br>10. எலிசா<br>11. அதிக ப.ஏ. கதாபாத்திரங்கள்<br>12. கிறிஸ்துமஸ் கதை |

| | A 1 - நிலை 3<br>பாடம் 1 - ஆதியில்<br>தலைப்பு - தேவன் உலகத்தை உண்டாக்குதல் | A1 - நிலை 4<br>ஆராய்ச்சி 1 - சிருஷ்டி<br>தலைப்பு - ஆதியில் |
|---|---|---|
| | **வேதப் பகுதி - ஆதியாகமம் 1.1-19**<br>**முக்கிய வசனம் - ஆதியாகமம் 1.1**<br>**நாம் கற்றுக்கொள்வது:**<br>1. தேவன் பிரபஞ்சத்தையும் அதிலுள்ள அனைத்தையும் படைத்தார்.<br>2. ஒவ்வொரு நபரையும் தேவன் சிருஷ்டித்தார், அவர்களை அறிகிறார், நேசிக்கிறார். | **வேதப் பகுதி - ஆதியாகமம் 1.1-31**<br>**முக்கிய வசனம் - எபிரேயர் 1:10; ஏசாயா 45:18**<br>**நாம் கற்றுக்கொள்வது:**<br>1. தேவன் இப்பிரஞ்சத்தை சிருஷ்டித்தார்.<br>2. தேவன் சர்வ வல்லமையுள்ளவர்.<br>3. தேவன் தமது சாயலில் மனிதனை உண்டாக்கினார். |
| **அறிமுகப்படுத்துங்கள்** | ஒவ்வொரு மாணவரையும் இந்தக் கேள்விகளுக்கு ஒரு பதிலை எழுதும்படி சொல்லுங்கள்.<br>யூகிப்பது நல்லது! பின்னர் மாணவர்கள் தங்களுடைய பதிலை தங்களுடைய கூட்டாளிகளோடு பகிர்ந்துகொள்ளலாம்.<br>1. இந்தப் பிரபஞ்சத்தில் எத்தனை நட்சத்திரங்கள் உள்ளன?<br>2. இந்த உலகத்தில் எத்தனை மனிதர்கள் இருக்கிறார்கள்?<br>சில நிமிடங்கள் கழித்து, கீழ்காணும் பதிலை வெளிப்படுத்துங்கள்: எத்தனை நட்சத்திரங்கள் இருக்கின்றன என்று சரியாக சொல்ல இயலாது என ஐரோப்பிய விண்வெளி ஏஜன்ஸி கூறுகிறது. மில்க்கி வே என்றழைக்கப்படும் நமது நட்சத்திர மண்டலத்தில் மட்டும் 1 லட்சம் மில்லியன் நட்சத்திரங்கள் இருப்பதாக தோராயமாக கணிக்கப்படுகிறது. ஆனால் இன்னும் கோடான கோடி நட்சத்திர மண்டலங்கள் இருக்கின்றன! பெருமளவிலான நட்சத்திரங்கள் உள்ளன!<br>தற்போது உலகில் ஏறக்குறைய 700 கோடி மக்கள் வசிப்பதாக கணக்கிடப்பட்டுள்ளது. | முதலில் இருவர் இருவராகவும் பின்னர் மொத்தமாக சேர்ந்து ஒரு குழுவாகவும் கலந்து விவாதியுங்கள்.<br>1. ஏதேனும் ஒன்றை படைப்புத்திறனோடு நீங்கள் கடைசியாக எப்பொழுது செய்தீர்கள்?<br>2. அதன் விளைவுகள் உங்களுக்கு சந்தோஷமாய் இருந்ததா? |
| **முடியுங்கள்** | **பைபிள் கதைக் கூறுங்கள்:**<br>**கருத்துப்பரிமாறிக்கொண்டு விவரியுங்கள்:**<br>1. ஒன்றும் தோன்றியிராதபோதே தேவன் இருந்தார். 2. ஆறு நாட்களில் தேவன் உலகத்தைப் படைத்தார். 3. முதலாம் நாளில் வெளிச்சத்தைப் படைத்து, அதை இருளிலிருந்து வேறுபிரித்தார். இரண்டாம் நாள் தேவன் ஆகாயவிரிவை உண்டுபண்ணி, அதை கீழே இருக்கும் தண்ணீரிலிருந்து வேறுபிரித்தார். மூன்றாம் நாள் தேவன் தண்ணீர்களை ஒன்று சேர்த்து, உலர்ந்த தரையை பூமி என்று அழைத்தார். பூமி பயிர்வகைகளையும் தாவரங்களையும் முளைப்பித்தது. நான்காம் நாள் தேவன் ஆகாயவிரிவில் சூரியனையும் சந்திரனையும் நிலைநாட்டினார். ஐந்தாம் நாள் தேவன் கடல்வாழ் உயிரினங்களையும் பறவைகளையும் உண்டாக்கினார், ஆறாம் நாள் மிருகங்களை உண்டாக்கினார்.<br>4. தேவன் தமது சாயலில் மனிதனை ஆணும் பெண்ணுமாக உண்டாக்கி, பூமியை நிரப்பவும், அதையும் அதிலுள்ள உயிரினங்களை ஆண்டுகொள்ளவும் கட்டளையிட்டார்.<br>5. தேவன் மனிதனுக்கும் தாம் சிருஷ்டித்த எல்லா உயிரினங்களுக்கும் உணவை ஏற்பாடு செய்தார். 6. தேவன் தாம் சிருஷ்டியை எல்லாம் பார்த்தார், அவைகள் மிகவும் நல்லவையென்று நினைத்தார்.<br>**முக்கியமான வசனத்தை விளக்கிக்காட்டி, மாணவர்கள் அவற்றை கற்றுக்கொள்ள ஊக்குவியுங்கள்.**<br>**முதல் பாடத்தை முடியுங்கள்.**<br>**காண்பியுங்கள்:** FBI - **தேவன் வானத்தையும் பூமியையும் படைக்கிறார். (மி)** | **பைபிள் கதைக் கூறுங்கள்:**<br>**கருத்துப்பரிமாறிக்கொண்டு விவரியுங்கள்:**<br>1. தேவன் உலகத்தை ஆறு நாட்களில் சிருஷ்டித்தார்.<br>2. முதலாம் நாளில் வெளிச்சத்தைப் படைத்து, அதை இருளிலிருந்து வேறுபிரித்தார். இரண்டாம் நாள் தேவன் ஆகாயவிரிவை உண்டுபண்ணி, அதை கீழே இருக்கும் தண்ணீரிலிருந்து வேறுபிரித்தார். மூன்றாம் நாள் தேவன் தண்ணீர்களை ஒன்று சேர்த்து, உலர்ந்த தரையை பூமி என்று அழைத்தார். பூமி பயிர்வகைகளையும் தாவரங்களையும் முளைப்பித்தது. நான்காம் நாள் தேவன் ஆகாயவிரிவில் சூரியனையும் சந்திரனையும் நிலைநாட்டினார். ஐந்தாம் நாள் தேவன் கடல்வாழ் உயிரினங்களையும் பறவைகளையும் உண்டாக்கினார், ஆறாம் நாள் மிருகங்களை உண்டாக்கினார். 3. தேவனுடைய வல்லமை ஆச்சரியமானது: தேவன் பேசி தமது வார்த்தைகளால் உலகத்தை உண்டாக்கினார், அதை உண்டாக்க ஆறுநாட்கள் மாத்திரமே பிடித்தது!<br>4. தேவன் மனிதர்களை தமது சாயலில் சிருஷ்டித்தார்; அவர்களை ஆணும் பெண்ணுமாக சிருஷ்டித்தார்.<br>5. தேவன் தாம் சிருஷ்டித்த எல்லாவற்றையும் பார்த்தபோது, அவைகள் மிகவும் நன்றாயிருந்தது என்பதுதான் அவருடைய தீர்ப்பு.<br>**முதல் பாடத்தை முடியுங்கள்.**<br>**காண்பியுங்கள்:** FBI - **தேவன் வானத்தையும் பூமியையும் படைக்கிறார். (மி)** |
| **மீள்பார்வை** | 4 பேர்கள் கொண்ட குழுவை அமைத்து, தேவன் ஆறு நாளும் படைத்தவற்றை காண்பிக்கும் விதமாக, ஒவ்வொரு நாளிலும் படைக்கப்பட்டவற்றை தனித்தனி போஸ்டர்களாக உருவாக்குங்கள். | தேவனுடைய குணாதிசயத்தைக் குறித்து இந்தப் பாடத்தில் நீங்கள் என்ன கற்றீர்கள்? இதை பிரதிபலிக்கும் விதத்தில் ஒரு சிறு கவிதையை எழுதுங்கள், குறுக்கெழுத்து விளையாட்டு கட்டத்தை தயாரியுங்கள், அல்லது ஒரு பத்தியில் எழுதுங்கள். |
| **வாழ்ந்துகாட்டுங்கள்** | **இந்தப் பாடம் நமக்குவிடும் சவால் என்ன?**<br>1. தேவன் சர்வவல்லமையுள்ளவர், அவர் எல்லாவற்றையும் படைத்திருக்கிறார். அவருடைய படைப்பு மிகவும் விசாலமானதாக இருந்தாலுங்கூட, தேவன் படைத்திருக்கிறார், நம் ஒவ்வொருவரையும் அறிந்திருக்கிறார், நேசிக்கிறார். இது எவ்வாறு தேவனைப் பற்றியும், அவரது சிருஷ்டியைப் பற்றியும் எனது மனப்பான்மையை பாதிக்கிறது? | **இந்தப் பாடம் நமக்குவிடும் சவால் என்ன?**<br>1. தேவன் நமது உலகத்தையும், நம்மையும் படைத்தார். இது நமது வாழ்வில் எத்தகைய மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும்?<br>2. **ஆதியாகமம் 1:26-27** மற்றும் **ஏசாயா 45:18**ஐ வாசியுங்கள். மனிதனைக் குறித்த தேவனுடைய தரிசனம் என்ன? இன்று இது எவ்வாறு நமது வாழ்க்கைமுறையை பாதிக்கிறது? |

| | A 1 - நிலை 3<br>பாடம் 2 - தொடக்கம்<br>தலைப்பு - தேவன் மனிதனை சிருஷ்டிக்கிறார் | A 1 - நிலை 4<br>பாடம் 2 - சிருஷ்டிப்பு<br>தலைப்பு - நிறைவடைந்தது |
|---|---|---|
| | **வேதப்பகுதி: ஆதியாகமம் 1:20-31**<br>**முக்கிய வசனம்: ஆதியாகமம் 1:27**<br>**நாம் கற்றுக்கொள்வது:**<br>1. தேவன் மிருங்களை சிருஷ்டித்தார், ஆனால் மனிதனை வித்தியாசமானவாக சிருஷ்டித்தார். 2. தன்னைப்போல இருக்கவும், சிருஷ்டியை ஆண்டுகொள்வதற்காகவும் தேவன் மனிதனை தனது சாயலில் சிருஷ்டித்தார். 3. மக்கள் தன்னோடும், ஒவ்வொருவரும் மற்றவர்களோடும் ஐக்கியம் கொள்வதற்காகவும் அவர்களை உருவாக்கினார். 4. தேவன் மனிதனுக்கு பொறுப்பைக் கொடுத்தார். | **வேதப்பகுதி: ஆதியாகமம் 1:27-31; 2:1-9**<br>**முக்கிய வசனம்: யோவான் 1:1-3**<br>**நாம் கற்றுக்கொள்வது:**<br>1. தேவன் ஏழாம்நாளில் ஓய்ந்திருந்தார்.<br>2. தேவன் ஓய்வுநாளை ஓய்வெடுப்பதற்காக உண்டாக்கினார்.<br>3. தேவன் மனிதனுக்கு ஜீவனைக் கொடுத்தார்.<br>4. மனிதனுடைய ஜீவன் விலையைப்பெற்றதும் தனித்தன்மை வாய்ந்ததுமாகும். |
| **அறிமுகப்படுத்துங்கள்** | படங்களின் அகராதி என்ற விளையாட்டை விளையாடுங்கள். நன்நான்குபேர் கொண்ட குழுக்களை ஏற்படுத்துங்கள். ஒவ்வொரு குழுவிற்கும் ஒரு தாளையும் ஒரு மார்க்கர் பேனாவையும் கொடுங்கள். ஒவ்வொரு குழுவிலிருந்தும் ஒரு நபர் ஒரு விலங்கின் படத்தை வரையவேண்டும், குழுவிலுள்ள மற்றவர்கள் என்ன விலங்கு என்று ஊகிக்கவேண்டும். | நடந்துபோகும் விவாதம். 'சம்மதிக்கிறேன்', 'சம்மதமில்லை', 'நிச்சமில்லை' என்று மூன்று பெயர் அட்டைகளை எழுதுங்கள். அது அறையின் மூன்று இடங்களை குறிப்பதாக இருக்கட்டும். கீழ்க்காணும் கூற்றுக்களை மாணவர்கள் வாசிக்கும்படிசெய்து, ஒவ்வொரு கூற்றைக்குறித்தும் அவர்களுடைய கருத்தை பிரதிபலிக்கும் இடத்திற்கு போய்நிற்கும்படி சொல்லுங்கள்.<br>• ஞாயிற்றுக்கிழமையை விசேஷித்த நாளாக கருதுவது இக்காலத்திற்குப் பொருத்தமற்றது.<br>• ஞாயிற்றுக்கிழமை வீட்டுப்பாடம் முடிப்பதற்கும், கடையில் பொருட்கள் வாங்கி வருவதற்கும் ஏற்ற நாளாகும்.<br>• ஞாயிற்றுக்கிழமைகளில் விளையாடுவதைத் தவிர்க்க வேண்டும்.<br>• மனித கருமுட்டையைப்பற்றிய மருத்துவ ஆராய்ச்சி ஏற்றுக்கொள்ளக்கூடியது.<br>• கிறிஸ்தவர்கள் போரில் பங்கெடுக்கக்கூடாது. |
| **முடியுங்கள்** | **பைபிள் கதையைக் கூறுங்கள்**<br>**கருத்துப்பரிமாறிக்கொண்டு விளக்குங்கள்:**<br>1. பலன்மிக்கதாயும் பலுகிப்பெருகும் விதத்தில் இருக்கும்படியாகவும் தேவன் விலங்குகளை படைத்தார். 2. தம்மைப்போல இருக்கவும், மீன்களையும், பறவைகளையும், விலங்குகளையும் ஆண்டுகொள்வற்காகவும் தேவன் மனிதரைத் தமது சாயலில் சிருஷ்டித்தார். 3. தேவன் மனிதரை சிருஷ்டித்தார். ஆணும் பெண்ணுமாக அவர்களை சிருஷ்டித்தார். 4. தேவன் மனிதரை ஆசீர்வதித்து, சிறப்பான வேலைகளையும் (பலனுள்ளவர்களாய் பலுகிப்பெருகவும், பூமியை நிரப்பவும், தேவனுடைய சிருஷ்டிகளை ஆண்டுகொள்ளும்) பொறுப்புகளையும் ஒப்படைத்தார். 5. நமது வாழ்விற்குத் தேவையான அனைத்து உணவுக்கான ஆதாரவளங்களை தேவன் ஏற்படுத்தினார். 6. தாம் உண்டாக்கின எல்லாவற்றிலும் தேவன் சந்தோஷப்பட்டார். அவை நல்லதென்று சொன்னார்!<br>**முக்கியமான வசனத்தை விளக்கிக்காட்டி, மாணவர்கள் அவற்றை கற்றுக்கொள்ள ஊக்குவியுங்கள்.**<br>**பாடம் 2ஐ முடியுங்கள்.**<br>**காண்பியுங்கள்: FBI - தேவன் வானத்தையும் பூமியையும் படைக்கிறார். (மி)** | **பைபிள் கதையைக் கூறுங்கள்**<br>**கருத்துப்பரிமாறிக்கொண்டு விளக்குங்கள்:**<br>1.ஆதியில், ஒன்றும் தோன்றியிராததற்கு முன்பே தேவன் இருந்தார். வார்த்தையானவர் (இயேசு கிறிஸ்து) தேவனாவார், அவர் ஆதியில் தேவனோடிருந்தார். படைக்கப்பட்ட அனைத்தையும் அவர்தான் படைத்தார்; அவராலேயன்றி எதுவும் படைக்கப்படவில்லை. தேவன் சிருஷ்டிகர்த்தர், அவர் ஆரம்பங்களின் தேவனாயிருக்கிறார். 2. தேவன் மனிதனை ஏதேன் தோட்டத்தில் வைத்தார். 3. தேவன் ஏதேனில் இரண்டு விசேஷ மரங்களையும் வைத்தார்; ஜீவவிருட்சத்தையும், நன்மைத் தீமைகளை அறியத்தக்க மரத்தையும் வைத்தார். 4. ஏழாம் நாளில் தேவன் ஓய்ந்திருந்தார், மனிதன் ஓய்வெடுப்பதற்காக விசேஷநாளையும் ஏற்பாடுசெய்தார். 5. மனிதனுக்குள் தேவன் தமது ஜீவசுவாசத்தை ஊதினார். இதுதான் மனிதர்களை விலங்களிலிருந்து விசேஷமானவனாக ஆக்கியது. மனித வாழக்கை தனித்தன்மை வாய்ந்ததும், தனிச்சிறப்புடையதுமாகும்.<br>**முக்கியமான வசனத்தை விளக்கிக்காட்டி, மாணவர்கள் அவற்றை கற்றுக்கொள்ள ஊக்குவியுங்கள்.**<br>**வேத ஆராய்ச்சி 2ஐ முடியுங்கள்.**<br>**காண்பியுங்கள்: FBI - தேவன் வானத்தையும் பூமியையும் படைக்கிறார். (மி)** |
| **மீள்பார்வை** | சிறு குழுக்களாகப் பிரிந்து விவாதித்து, பின்னர் ஒட்டுமொத்த குழுவில் உங்களுடைய கருத்துக்களை பகிர்ந்துகொள்ளுங்கள்: மீன்களையும், பறவைகளையும் மற்றும் விலங்குகளையும் ஆண்டுகொள்வதற்காக தேவன் மனிதர்களை தமது சாயலில் சிருஷ்டித்தார். நாம் அவைகளை எவ்வாறு நடத்தவேண்டும்? நாம் அவரோடும், மற்றும் ஒவ்வொருவரோடும் ஐக்கியம்கொள்வதற்காகவே தேவன் நம்மை உருவாக்கியிருக்கிறார். நாம் எந்த வழிகளில் தேவன்மீதுள்ள அன்பை வெளிப்படுத்தலாம்? மற்றவர்மீதுள்ள அன்பை எவ்வாறு 1) வீட்டில், 2) பள்ளிக்கூடத்தில், 3) சபையில் வெளிப்படுத்தலாம்? | சிறு குழுக்களாகப் பிரிந்து விவாதித்து, பின்னர் ஒட்டுமொத்த குழுவில் உங்களுடைய கருத்துக்களை பகிர்ந்துகொள்ளுங்கள்: **யாத்திராகமம் 20:8** மற்றும் **மாற்கு 2:27**ஐ வாசிக்கவும். இன்று இந்த வசனங்கள் நமக்கு எந்தவிதத்தில் பொருத்தமுள்ளதாயிருக்கிறது?<br>மனித வாழ்க்கை தனித்தன்மையும் சிறப்பும் வாய்ந்தது என்று நாம் படித்திருக்கிறோம். இது எவ்வாறு அறிவியல், மருத்துவம், சட்டம் மற்றும் முதியோர் பராமரிப்பு போன்ற விசயங்களில் எடுக்கும் தீர்மானங்களை பாதிக்கக்கூடும்? |
| **வாழ்ந்துகாட்டுங்கள்** | **இந்தப் பாடம் நமக்குவிடும் சவால் என்ன?**<br>1. நாம் அவரோடும், மற்றும் ஒவ்வொருவரோடும் ஐக்கியம்கொள்வதற்காகவே தேவன் நம்மை உருவாக்கியிருக்கிறார். நாம் மனந்திருந்தி அவரை நம்பும்போது, ஒவ்வொரு நாளும் அது எப்படிப்பட்ட மாற்றத்தை நம்முடைய வாழ்க்கையில் ஏற்படுத்தும்? 2. இந்த வாரம் நம்முடைய குடும்பங்களிலும், பள்ளிக்கூடங்களிலும் சபைக் குழுக்களிலும் நமது பொறுப்புகளை நிறைவேற்றவும், தேவனுடைய நல்லகுணத்தில் (உதாரணமாக –அவருடைய அன்பு, இரக்கம், நீதி) ஏதாவதொன்றை காண்பிக்கவும் தேவன் உதவிசெய்யும்படி ஜெபியுங்கள். | **இந்தப் பாடம் நமக்குவிடும் சவால் என்ன?**<br>1. இன்று நமது வாழ்வில், ஓய்வுநாளை நாம் எவ்வாறு கடைபிடிக்கிறோம் அல்லது கடைபிடிக்கத் தவறிவிடுகிறோம்? ஓய்வுநாளில் ஓய்ந்திருப்பது முக்கியமானதா? ஏன்? 2. மனித வாழ்வை தேவன் கொடுத்திருக்கிறார் என்பதையும் அது தனிச்சிறப்புள்ளது என்பதையும், நமது நம்பிக்கையையும், நமது வாழ்க்கை பிரதிபலிக்கிறது என்பதை எவ்வாறு உறுதிசெய்வது? |

| | A1 - நிலை 3<br>பாடம் 3 - ஆதியில்<br>தலைப்பு - காரியங்கள் எல்லாம் தவறுகிறது | A1 - நிலை 4<br>ஆராய்ச்சி 3 - சிருஷ்டிப்பு<br>தலைப்பு - பாவம் பிரவேசிக்கிறது |
|---|---|---|
| | **வேதப்பகுதி: ஆதியாகமம் 2:15-17; ஆதியாகமம் 3:1-13**<br>**முக்கிய வசனம்: ஆதியாகமம் 3:3**<br>**நாம் கற்றுக்கொள்வது:**<br>1. ஆதாமும் ஏவாளும் தேவனுக்குக் கீழ்ப்படியவில்லை. 2. ஆதாமும் ஏவாளும் வெட்கப்பட்டு, அவர்களுடைய பாவத்தின் விளைவுகளை சந்தித்தார்கள். | **வேதப்பகுதி: ஆதியாகமம் 2:14-19; ஆதியாகமம் 3:1-17**<br>**முக்கிய வசனம்:ரோமர் 3:23; ரோமர் 6:23**<br>**நாம் கற்றுக்கொள்வது:**<br>1. நன்மை தீமை அறியும் மரத்தின் கனியைப் புசிக்கக் கூடாது என்று தேவன் மனிதனுக்கு கட்டளையிட்டார். 2. சர்ப்பம் ஏவாளையும் ஆதாம் ஏவாளையும் ஏமாற்றியது, ஏவாள் தேவனின் கட்டளைக்கு கீழ்ப்படியாமற்போனாள். 3. ஆதாமும் ஏவாளும் வெட்கப்பட்டார்கள். |
| **அறிமுகப்படுத்துங்கள்** | பள்ளியில் விதிகள் இருக்கின்றனவா என குழுவினரிடம் கேளுங்கள். ஏன் அவை<br>முக்கியமானவை? மக்கள் அவைகளை புறக்கணித்தால் என்ன நடக்கும்? | பின்வரும் ஜோடிகளை விவாதிக்க மாணவர்கள் கேளுங்கள்:<br>அவர்களுக்குப் பள்ளியில் / வேலையில் / வீட்டில் பொறுப்புகள் இருக்கலாம்.<br>அவர்கள் பின்பற்ற வேண்டிய விதிமுறைகள் அல்லது வழிகாட்டுதல்கள் இருக்கும்.<br>இந்த விதிகள் புறக்கணிக்கப்பட்டால் அல்லது மீறப்பட்டால் என்ன நடக்கும்? |
| **முடியுங்கள்** | **பைபிள் கதையைக் கூறுங்கள்**<br>**கருத்துப்பரிமாறிக்கொண்டு விளக்குங்கள்:**<br>1. தேவன் மனிதனை ஏதேன் தோட்டத்தில் வைத்து அதைக் காக்கும் வேலையை அவனுக்குக் கொடுத்தார். மனிதனுக்குத் தேவையான அனைத்தையும் கொடுத்தார், ஆனால் அவன் கீழ்ப்படியவேண்டிய ஒரே ஒரு நிபந்தனை மாத்திரம் இருந்தது. நன்மைத் தீமை அறியும் மரத்தின் கனியை சாப்பிட அவன் அனுமதிக்கப்படவில்லை. மீறி சாப்பிட்டால், அவன் இறந்துவிடுவான் என்று தேவன் சொன்னார். 2. பின்னர் விலங்குகள் மற்றும் பறவைகளுக்குப் பெயரிடும் வேலை மனிதனுக்கு வழங்கப்பட்டது. 3. மனிதன் தன் பொறுப்புகளை நிறைவேற்றுவதில் அவனுக்கு உதவிசெய்ய தேவன் ஒரு பெண்ணை உண்டாக்கினார். திருமணத்தில், ஒரு ஆணும் பெண்ணும் சேர்ந்து ஒரு புதிய குடும்பமாக மாறி, ஒன்றாக ஒரு குழுவாக செயல்படுகிறார்கள். 4. தேவனுடைய எதிரி, மாறுவேடத்தில் வஞ்சகமுள்ள பாம்பாக வந்து தேவனுடைய கட்டளைமீது சந்தேகப்படும்படி செய்தான். தேவனுடைய கட்டளையை மீறினாலும் இறக்க மாட்டீர்கள் என அவன் ஆதாம் மற்றும் ஏவாளிடம் சொன்னான். சர்ப்பம் அந்தப் பெண்ணை ஏமாற்றியதால், தேவன் சாப்பிட வேண்டாம் என்று தடைசெய்த பழத்தை ஏவாள் சாப்பிட்டாள். அவள் சிறிது தன் புருஷனுக்கும் கொடுத்தாள், அவனும் அதைச் சாப்பிட்டேன். 5. இதை செய்த பின்பு அந்த மனிதனும் பெண்ணும் சந்தோஷத்தை இழந்தார்கள். அவர்கள் அத்தி இலைகளை ஒன்றாக இணைத்து தங்களை மறைத்துக்கொள்ள ஆடையை உண்டாக்கி, மரங்களின் நடுவே ஒளிந்துகொண்டார்கள். தேவன் அவர்களை வெளியே வரும்படி அழைத்தபோது, அவர்கள் தாங்கள் செய்ததை சொன்னார்கள். ஆதாம் ஏவாள்மீது குற்றம்சாட்டினான், ஏவாள் பாம்பின்மீது குற்றம் சாட்டினாள். 6. தேவன் சர்ப்பத்தை சபித்தார். ஆதாமும் ஏவாளும் தங்கள் பாவத்தின் விளைவுகளை சந்திக்க வேண்டியதாயிற்று. அவர்கள் வேதனையை அனுபவித்தனர், மேலும் மிகவும் கடினமாக பாடுபட்டு உழைக்க வேண்டியிருந்தது. வாழ்க்கை கடினமானதாக இருந்தது, மேலும் அவர்கள் ஒரு நாள் இறக்க வேண்டியதாயிற்று. 7. கடவுள் ஆதாமுக்கும் ஏவாளுக்கும் விலங்கின் தோலால் ஆடைகளை செய்துகொடுத்தார், பிறகு ஜீவ விருட்சத்தை தொடாதிருக்க ஏதேன் தோட்டத்தைவிட்டு அவர்களை வெளியேற்றினார்.<br>**முக்கியமான வசனத்தை விளக்கிக்காட்டி, மாணவர்கள் அவற்றை கற்றுக்கொள்ள ஊக்குவியுங்கள்.**<br>பாடம் 3ஐ முடியுங்கள்.<br>**காண்பியுங்கள்: FBI - ஆதாமும் ஏவாளும் தேவனுக்குப் கீழ்ப்படியவில்லை, அதன் விளைவுகளை சந்திக்கிறார்கள். (மி)** | **பைபிள் கதையைக் கூறுங்கள்**<br>**கருத்துப்பரிமாறிக்கொண்டு விளக்குங்கள்:**<br>1. ஏதேன் தோட்டத்தைப் பராமரித்தல், பறவைகள் மற்றும் விலங்குகளுக்குப் பெயரிடுதல் ஆகிய பொறுப்புகளை தேவன் ஆதாமுக்குத் தந்தார். 2. நன்மை தீமை அறியும் மரத்தின் கனியைத் தவிர, மற்ற எந்த மரத்தின் கனியையும் சாப்பிடலாம் என்று மனிதனிடம் தேவன் சொன்னார். இந்த மரத்திலிருந்து சாப்பிட்டால், அதன் விளைவாக நிச்சயம் மரணம் நேரிடும் என்று தேவன் சொன்னார். 3. மனிதனுக்கு உதவிசெய்வதற்காக தேவன் பெண்ணை உருவாக்கினார். அவர்கள் ஒன்றாக பணிபுரிய வேண்டும். திருமணத்தில், ஒரு ஆணும் பெண்ணும் ஒரு புதிய குடும்பத்தை உருவாக்குகிறார்கள், மேலும் அவர்கள் ஒன்றாக ஒரு அணியாக வேலை செய்கிறார்கள். 4. தந்திரமான பாம்பு ஏவாளை ஏமாற்றியதால், அவள் கீழ்ப்படியாமல்போனாள்,<br>தேவன் விலக்கிய பழத்தை சாப்பிட்டு, அதை புருஷனுக்கும் கொடுத்தாள். மனிதனும் அதை சாப்பிட்டதால் தேவனுக்குக் கீழ்ப்படியாமற் போனான். பழத்தை சாப்பிட்டதன் மூலம் ஆதாம் ஏவாள் இருவருமே தேவனுடைய பரிபூரண நிலைமையிலிருந்து குறைந்துவிட்டார்கள். 5. ஆதாமும் ஏவாளும் தாங்கள் தேவனுக்குக் கீழ்ப்படியாமல் போனதை அறிந்து வெட்கப்பட்டனர். தேவனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படியாமல் போனதின் விளவுகளை அவர்கள் சந்திக்க வேண்டியிருந்தது. 6. அவர்கள் தேவனின் தண்டனையை எதிர்கொண்டனர்.<br>**முக்கியமான வசனத்தை விளக்கிக்காட்டி, மாணவர்கள் அவற்றை கற்றுக்கொள்ள ஊக்குவியுங்கள்.**<br>**வேத ஆராய்ச்சி 3ஐ முடியுங்கள்.**<br>**காண்பியுங்கள்: FBI - ஆதாமும் ஏவாளையும் தேவனுக்குப் கீழ்ப்படியவில்லை, அதன் விளைவுகளை சந்திக்கிறார்கள். (மி)** |
| **மீள்பார்வை** | **ரோமர் 5:12**-னோடு இப்பாடத்தை ஒப்பிட்டுப்பாருங்கள். ஆதாமும் ஏவாளும் கீழ்ப்படியாத காரணத்தால் நாம் எல்லோரும் பாவிகளாய் பிறந்திருக்கிறோம். நமது வாழ்க்கையில் தேவனுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படியாமற்போகிறோம் என்பதற்கான உதாரணங்களை யோசித்துப் பார்க்கும்படி மாணவர்களைக் கேட்டுக்கொள்ளுங்கள். இது எவ்வாறு 1) நம்மையும் 2) மற்றவர்களையும் பாதிக்கிறது? | ஆதாம் ஏவாள் கீழ்ப்படியாததினால் ஏற்பட்ட விளைவுகள் யாவை? **ரோமர் 5:12-14ம் 18-19ம்** வாசியுங்கள். ஆதாமின் கீழ்ப்படியாமை நம்மை இன்று எவ்வாறு பாதித்திருக்கிறது? |
| **வாழ்ந்துகாட்டுங்கள்** | **இந்தப் பாடம் நமக்குவிடும் சவால் என்ன?**<br>1. தேவன் நம்மை மன்னித்து, நம்மை புதிதாக்க வேண்டுமானால் நாம் அவரிடத்தில் வருத்தம் தெரிவிக்கவேண்டியது அவசியமாகும். அப்பொழுது நாம் அவரைப் பிரியப்படுத்தி வாழவும் அவரது கட்டளைகளைப் பின்பற்றவும் முடியும். | **இந்தப் பாடம் நமக்குவிடும் சவால் என்ன?**<br>1. கிறிஸ்தவர்களாகிய நாம் தேவனுக்குக் கீழ்ப்படியவேண்டியது முக்கியமாகும். ஏன்?<br>2. இன்று நடைமுறையில் நமது வாழ்வில் எவ்வாறு தேவனுக்குக் கீழ்ப்படிய முடியும்? |

| | A1 - நிலை 3<br>பாடம் 4 - சிருஷ்டிப்பு<br>தலைப்பு - தேவனுடைய வழியில் காரியங்களை செய்தல் | A1 - நிலை 4<br>ஆராய்ச்சி 4 - சிருஷ்டிப்பு<br>தலைப்பு - பாவத்தின் விளைவு |
|---|---|---|
| | **வேதப்பகுதி: ஆதியாகமம் 4:1-16**<br>**முக்கிய வசனம்: யோவான் 14:6**<br>**நாம் கற்றுக்கொள்வது:**<br>1. ஆபேல் தேவனுடைய வழியைப் பின்பற்றினான், ஆனால் காயீன் தன் சொந்த வழியைப் பின்பற்றினான். தேவன் ஆபேலின் பலியை ஏற்றுக்கொண்டார், ஆனால் காயீனின் பலியை நிராகரித்தார். 2. காயீன் ஆபேலைக் கொலைசெய்தான். தேவன் அவனை தேசத்தை விட்டு வெளியே அனுப்பி, அவனை அலைந்துதிரியும்படி செய்தார். காயீன் தேவனுடைய சமுகத்தை விட்டுச் சென்றான். 3. தேவனிடத்தில் செல்ல ஒரே ஒரு வழியே இருக்கிறது, அதுவே அவருடைய வழி ! | **வேதப்பகுதி: ஆதியாகமம் 3:7-24**<br>**முக்கிய வசனம்: 1 கொரிந்தியர் 15:22; ரோமர் 6:23**<br>**நாம் கற்றுக்கொள்வது:**<br>1. ஆதாமும் ஏவாளும் தேவனிடமிருந்து ஒளிந்திருக்க முயன்றார்கள். 2. வஞ்சிக்கும் சர்ப்பத்தை தேவன் சபித்தார். 3. ஆதாமும் ஏவாளும் தங்களின் பாவத்தின் விளைவாக வேதனையையும் கஷ்டத்தையும் சந்திக்க வேண்டும் என்று தேவன் சொன்னார். 4. ஆதாம் மற்றும் ஏவாளின் நிர்வாணத்தை மூடிமறைக்க தேவன் ஆடைகளை கொடுத்தார். 5. ஆதாமும் ஏவாளும் ஏதோன் தோட்டத்தில் நுழைவதை தேவன் தடை செய்தார். |
| **அறிமுகப்படுத்துங்கள்** | நீங்கள் ஒரு வரைபடம் அல்லது திசைகளை பார்க்காமல் பயணம் செய்வீர்கள் என்றால் என்ன நடக்கும்? திசைகளை புறக்கணித்ததால் நீங்கள் எப்போதாவது வழிதவறிப் போயிருக்கிறீர்களா? காயீன் தேவனுடைய கட்டளைகளுக்குக் கவனம் செலுத்தவில்லை, அதனால் தொலைந்துபோன நாடோடியாக ஆனான். | குழந்தைப்பருவத்தில் எப்பொழுதாவது வீட்டிலோ அல்லது பள்ளியிலோ கீழ்ப்படியாதவர்களாய் இருந்த ஒரு சந்தர்ப்பத்தை யோசித்துப் பார்க்கும்படி மாணவர்களிடம் கேளுங்கள். இது அவர்களுக்கு எப்படிப்பட்ட உணர்வை ஏற்படுத்தியது? |
| **முடியுங்கள்** | **பைபிள் கதையைக் கூறுங்கள்**<br>**கருத்துப்பரிமாறிக்கொண்டு விளக்குங்கள்:**<br>1. ஆதாமுக்கும் ஏவாளுக்கும் இரண்டு மகன்கள் இருந்தனர். ஆபேல் ஒரு மேய்ப்பனாக இருந்தான், காயீனோ பயிர்களை வளர்த்து வந்தான். 2. தனது மந்தையில் முதற்பேறான சிறந்த ஆட்டுக் குட்டிகளை ஆபேல் பலிசெலுத்தினான், அந்த மிருக பலியை தேவன் ஏற்றுக்கொண்டார். காயீன் சில பயிர்கள் பலன்களை பலியாக செலுத்தினான், தேவன் காயீனின் பலியை நிராகரித்தார். காயீன் கோபமடைந்து, மனச்சோர்வடைந்தவனாக ஆனான்.<br>3. தேவன் பாவத்தைக் குறித்தும் தேவனுடைய சரியான வழியைப் பின்பற்றுவதின் முக்கியத்துவத்தைக் குறித்து காயீனை எச்சரித்தார். காயீன் மன்னிப்பு கேட்கவுமில்லை, தேவனுக்கு செவிசாய்க்கவுமில்லை. 4. காயீன் தன் தம்பி ஆபேலைக் கொலை செய்தான். தேவன் அவனை அந்த நாட்டிலிருந்து வெளியேற்றினார், அவன் தேவ பிரசன்னமில்லாத தொலைதூர பகுதியில் ஒரு நாடோடியாய் அலைபவனான். 5. தேவனுக்கு ஒரு ஆட்டுக்குட்டியை பலியாக செலுத்தவேண்டும் என்று ஆபேல் புரிந்துகொண்டான். தேவனின் வழியில் காயீன் வரவில்லை, அவன் தண்டிக்கப்பட்டான். 6. கர்த்தராகிய இயேசு சிலுவையில் செய்யப்போவதை சித்தரிக்கும் படமாக ஆபேலின் பலி விளங்கியது.<br>**முக்கியமான வசனத்தை விளக்கிக்காட்டி, மாணவர்கள் அவற்றை கற்றுக்கொள்ள ஊக்குவியுங்கள்.**<br>**பாடம் 4ஐ முடியுங்கள்.**<br>**காண்பியுங்கள்: FBI - காயீனும் ஆபேலும் (மி)** | **பைபிள் கதையைக் கூறுங்கள்**<br>**கருத்துப்பரிமாறிக்கொண்டு விளக்குங்கள்:**<br>1. ஆதாம் ஏவாளின் கீழ்ப்படியாமையானது நன்மை தீமையைப் பற்றிய ஒரு புதிய விழிப்புணர்வையும், அதோடு அவர்களின் நிர்வாணத்தைப் பற்றிய விழிப்புணர்வையும் ஏற்படுத்தியது. அவர்கள் பயந்தனர், தேவனிடத்திலிருந்து தங்களை மறைத்துக்கொள்ள விரும்பினர். 2. ஆதாமையும் ஏவாளையும் தேவன் கேள்விகள் கேட்டார். தாங்கள் செய்த தவறை அவர்கள் ஒப்புக்கொள்ளவேண்டும் என அவர் விரும்பினார். இருப்பினும், ஆதாம் ஏவாள் இருவருமே ஒருவர்மேல் ஒருவர் குற்றம் சாட்டினர். ஏவாளும் ஏவாளும் சர்ப்பத்தை குற்றம் சாட்டினர். 3. ஆதாமும் ஏவாளும் அவர்களுடைய கீழ்ப்படியாமையின் விளைவுகளை சந்தித்தார்கள். அவர்கள் வேதனையையும், போராட்டத்தையும் வாழ்க்கையில் அனுபவித்தனர், தேவனுடைய பிரசன்னமிருந்த ஏதேன் தோட்டத்திலிருந்து வெளியேற்றப்பட்டனர். 4. அவர்களுடைய பாவத்தின் விளைவு நாமும் சந்திக்கிறோம் – ஆதாம் பாவம் செய்ததால், நாம் அவருடன் அடையாளம் காணப்பட்டோம், நாம் எல்லாரும் மரிக்கிறோம். 5. தேவன் எல்லாம் கிருபையாய் வழங்கும் தேவனாவார். அவர் ஆதாமுக்கும் ஏவாளுக்கும் நிர்வாணத்தை மறைக்க விலங்கின் தோல் ஆடைகளை கொடுத்தார்.<br>இயேசுவை நமது இரட்சகராக ஏற்றுக்கொள்ளும்போது, அவர் நமக்கு கர்த்தராகிய இயேசுவின் மூலம் நித்திய ஜீவனை இலவச ஈவாக கொடுக்கிறார் என்று **ரோமர் 6:23** கற்பிக்கிறது.<br>**முக்கியமான வசனத்தை விளக்கிக்காட்டி, மாணவர்கள் அவற்றை கற்றுக்கொள்ள ஊக்குவியுங்கள்.**<br>**வேத ஆராய்ச்சி 4ஐ முடியுங்கள்.**<br>**காண்பியுங்கள்: FBI - ஆதாமும் ஏவாளும் கீழ்ப்படியவில்லை. (மி)** |
| **மீள்பார்வை** | முக்கிய வசனத்தில், தான் மட்டுமே தேவனிடத்தில் செல்வதற்கான ஒரே வழி என்று இயேசு சொன்னார். தேவனைப் பிரியப்படுத்த மக்கள் முயற்சிசெய்யும் மற்ற வழிகள் எவை?<br>ஒரு புக்மார்க் அல்லது அஞ்சல் அட்டையை உருவாக்கி, அதில் முக்கிய வசனத்தை தெளிவாக எழுதுங்கள். | தேவனுடைய குணாதிசயத்தைப் பற்றி இந்தப் பாடத்திலிருந்து நாம் என்ன கற்கிறோம்?<br>ரோமர் 5:12-உடன் இந்த பாடத்தை தொடர்புபடுத்துங்கள். ஆதாமும் ஏவாளும் கீழ்ப்படியாமற் போனபடியால் நாம் அனைவரும் பாவிகளாய்ப் பிறந்திருக்கிறோம். நம்முடைய வாழ்க்கையில் தேவனுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படியாமல் இருப்பதற்காக உதாரணங்களை சிந்திப்பார்க்கும்படி மாணவர்களைக் கேட்டுக்கொள்ளுங்கள். இவைகள் 1) நம்மையும் 2) மற்றவர்களையும் எவ்வாறு பாதிக்கிறது? |
| **வாழ்ந்துகாட்டுங்கள்** | **இந்தப் பாடம் நமக்குவிடும் சவால் என்ன?**<br>1. முக்கிய வசனத்தை மனப்பாடம் செய்க.<br>2. தேவனிடத்தில் செல்ல ஒரே வழியான இயேசுவை நீங்கள் பின்பற்றுகிறீர்களா? | **இந்தப் பாடம் நமக்குவிடும் சவால் என்ன?**<br>1. நாம் தேவனுக்குக் கீழ்ப்படிவதற்கு அவர் நமக்கு பெலன் தர வேண்டிக்கொள்ளுங்கள், மேலும் நாம் தேவனைக் கைவிட்டு தவறுசெய்யும்போதும் தேவன் கிருபையாய் இருப்பதற்காக நன்றிகூறுங்கள். 2. தேவன் நம்மை மன்னித்து, நம்மை புதிதாக்க வேண்டுமானால் நாம் அவரிடத்தில் வருத்தம் தெரிவிக்கவேண்டியது அவசியமாகும். அப்பொழுது நாம் அவரைப் பிரியப்படுத்தி வாழவும் அவரது கட்டளைகளைப் பின்பற்றவும் முடியும். |

| | | |
|---|---|---|
| | A2 - நிலை 3<br>பாடம் 1 - நோவாவும் ஜலப்பிரளயமும்<br>தலைப்பு - பேழையைக் கட்டுதல் | A2 - நிலை 4<br>ஆராய்ச்சி 1 - காயீனும் ஆபேலும்<br>தலைப்பு - தேவனை ஆராதித்தல் |
| | **வேதப்பகுதி: ஆதியாகமம் 6:5-22**<br>**முக்கிய வசனம்: ஆதியாகமம் 6:8**<br>**நாம் கற்றுக்கொள்வது:**<br>1. தேவன் பரிசுத்தமானவர். ஜனங்களின் பாவம் தேவனுடைய உள்ளத்தை உடைக்கிறது.<br>2. தேவன் நோவாவை காப்பாற்ற தீர்மானித்தார். நோவா, அவருடைய குடும்பம் மேலும் விலங்கு மற்றும் பறவை வகைகளில் இரண்டிரண்டை காப்பாற்றுவதற்காக ஒரு பெரிய படகை கட்டும்படி தேவன் நோவாவிடம் கூறினார்.<br>3. நோவா தேவன் சொன்னபடியே செய்தார். நோவாவுக்கு தேவனிடத்தில் நம்பிக்கை இருந்தது, அவர் தேவனுக்குக் கீழ்ப்படிந்தார். | **வேதப்பகுதி: ஆதியாகமம் 4:1-16**<br>**முக்கிய வசனம்: எபிரேயர் 11:4**<br>**நாம் கற்றுக்கொள்வது:**<br>1. தேவன் விரும்பிய விதத்தில் ஆபேல் தேவனிடம் வந்தான். தேவன் ஆபேலின் காணிக்கையை ஏற்றுக்கொண்டார். 2. காயீன் தனது சொந்த வழியில் தேவனிடத்தில் வந்தான். தேவன் காயீனுடைய காணிக்கையை நிராகரித்தார். |
| அறிமுகப்படுத்துங்கள் | ஒரு மாதிரியை கேக் தயாரிப்பதற்கான வழிகாட்டு நெறிகளை, அல்லது செய்முறையை குழுவினரிடம் காட்டுங்கள். ஏதாவது ஒன்றைக் கட்டும்போதோ அல்லது தயாரிக்கும்போதோ வழிமுறைகளைப் பின்பற்றுவதின் முக்கியத்துவத்தைப் பற்றி அவர்களிடம் பேசுங்கள். தேவன் நோவாவிடம் குறிப்பிட்ட வழிமுறைகளைக் கொடுத்ததையும், நோவா அவைகளை சரியாக பின்பற்றியதையும் விளக்குங்கள். | அறிவுறுத்தல்களை பின்பற்ற வேண்டிய பல்வேறு சூழ்நிலைகளை ஒரு பட்டியலாக உருவாக்கவும். நாம் அவைகளை புறக்கணிக்கும்போது என்ன நடக்கிறது? |
| முடியுங்கள் | **பைபிள் கதையைக் கூறுங்கள்**<br>**கருத்துப்பரிமாறிக்கொண்டு விளக்குங்கள்:**<br>1. பூமியிலுள்ள மக்கள் மிகவும் துன்மார்க்கராகவும் தீயவர்களாகவும் ஆனார்கள்.<br>அவர்களுடைய பாவம் மற்றும் கீழ்ப்படியாமை தேவனுக்கு பெரும் மனஸ்தாபத்தை ஏற்படுத்தியது. 2. தாம் உண்டாக்கின மக்களையும் எல்லா விலங்கினங்களையும் அழிக்க தேவன் முடிவு செய்தார். 3. நோவா வித்தியாசமானவராக இருந்தார். அவர் தேவனைப் பிரியப்படுத்தினார். சரியான காரியத்தை செய்து, தேவனை நேசித்து அவருக்குக் கீழ்ப்படிந்தபடியால், அவர் அனைத்து நபர்களிடமிருந்து வித்தியாசமாக இருந்தார். 4. கடவுள் நோவா எச்சரித்தார் அவர் அனைத்து அழிக்க போகிறேன் ஜனங்கள் பூமியை வன்முறையால் நிரப்பியிருந்த காரணத்தால், தாம் மக்களையும் ஜீவராசிகள் அனைத்தையும் வெள்ளத்தால் அழிக்கப்போவதாக நோவாவை எச்சரிக்கை செய்தார்.<br>5. ஏற்பாடுகள் செய்யவேண்டும் என நோவாவுக்கு விசேஷ கட்டளைகளை தேவன் கொடுத்தார். நோவாவை எவ்வாறு கட்டியெழுப்ப வேண்டும் என்று அவர் சொன்னார் நோவாவையும், அவருடைய குடும்பம் மற்றும் அனைத்து வகையான உயிரினங்களில் ஒவ்வொரு ஜோடியைக் காப்பாற்ற பெரிய படகு ஒன்றை எவ்வாறு கட்டவேண்டும் என்பதைக் குறித்து மிகச் சரியாக நோவாவிடம் தேவன் சொன்னார். வாழும்.<br>6. நோவா தேவன் மீது நம்பிக்கை வைத்திருந்தார், அவருடைய கட்டளைகளை அப்படியே சரியாக நிறைவேற்றினார்.<br>**முக்கியமான வசனத்தை விளக்கிக்காட்டி, மாணவர்கள் அவற்றை கற்றுக்கொள்ள ஊக்குவியுங்கள். பாடம் 1ஐ முடியுங்கள். காண்பியுங்கள்: FBI - நோவாவும் ஜலப்பிரளயமும். (மி)** | **பைபிள் கதையைக் கூறுங்கள்**<br>**கருத்துப்பரிமாறிக்கொண்டு விளக்குங்கள்:**<br>1. ஆதாம் ஏவாளும் இரண்டு மகன்கள் இருந்தனர். ஆபேல் ஒரு மேய்ப்பராண இருந்தான், காயீன் பயிர் வகைகளை வளர்த்துவந்தான். 2. ஆபேல் தனது மந்தையில் முதற்பேறான சிறந்த ஆட்டுக்குட்டிகளை பலிசெலுத்தினான், ஆபேல் செலுத்திய மிருக பலியை தேவன் ஏற்றுக்கொண்டார்: காயீன் சில பயிர்களின் சில பலன்களை பலியாக செலுத்தினான்: தேவன் காயீனின் பலியை நிராகரித்தார். இதனால் காயீன் கோபமும், மனச்சோர்வடைந்தவனாகவும் ஆனான். 3. பாவத்தைப் பற்றியும் தேவனுடைய சரியான வழியைப் பின்பற்றவேண்டியதின் முக்கியத்துவம் பற்றியும் தேவன் காயீனை எச்சரித்தார். காயீன் மன்னிப்பு கேட்கவுமில்லை, தேவனுடைய எச்சரிப்புச் செவிசாய்க்கவுமில்லை. 4. காயீன் தன் தம்பி ஆபேலைக் கொலைசெய்தான். தேவன் அவனை அந்நாட்டிலிருந்து விலக்கினார், அவன் தேவனுடைய பிரசன்னமில்லாத தொலைதூர இடத்தில் நாடோடியாய் அலைந்துதிரிந்தான். 5. தேவனுக்கு ஒரு ஆட்டுக்குட்டியை பலிசெலுத்த வேண்டும் என்று ஆபேல் புரிந்து கொண்டான். தேவனின் வழியில் காயீன் வரவில்லை, அதனால் அவன் தண்டிக்கப்பட்டான்.<br>**முக்கியமான வசனத்தை விளக்கிக்காட்டி, மாணவர்கள் அவற்றை கற்றுக்கொள்ள ஊக்குவியுங்கள். வேத ஆராய்ச்சி 1ஐ முடியுங்கள். காண்பியுங்கள்: FBI - காயீனும் ஆபேலும். (மி)** |
| மீள்பார்வை | இந்தப் பாடத்திலிருந்து நாம் நோவாவைப் பற்றியும், அவருடைய குடும்பத்தையும் தேவனுடைய கட்டளைகளைக் குறித்தும் படித்ததை வைத்து ஒரு வினாடி-வினாவை தயாரித்து அதன் மூலம் இந்தக் கதையை மீள்பார்வை செய்யுங்கள். | முக்கிய வசனமாகிய **எபிரேயர் 11:4**ஐ வாசியுங்கள். இந்த வசனம் ஆபேலுக்கும் காயீனுக்கும் இடையே இருக்கும் வித்தியாசத்தை எவ்வாறு தொகுத்துத் தருகிறது? |
| வாழ்ந்துகாட்டுங்கள் | **இந்தப் பாடம் நமக்குவிடும் சவால் என்ன?**<br>1. நோவா தேவனை நம்பி, அவர் என்ன செய்யச்சொன்னாரோ அதை அப்படியேச் சரியாகச் செய்தார். நாம் எவ்வாறு தேவனில் விசுவாசம் வைக்கமுடியும்? நீங்கள் அவரை நம்புகிறீர்களா? நோவா தேவனிடத்தில் விசுவாசம்கொண்டிருந்தார், தேவன் அவரை காப்பாற்றினார். | **இந்தப் பாடம் நமக்குவிடும் சவால் என்ன?**<br>1. ஆபேல் மற்றும் காயீன் வாழ்க்கையிலிருந்தும் அவர்களுடைய மனப்பான்மையிலிருந்தும் நாம் என்ன பாடத்தைக் கற்றுக்கொள்ள முடியும்?<br>2. இன்று நமது வாழ்வில் இந்தப் பாடங்களை எவ்வாறு நடைமுறைப்படுத்தலாம்? |

| | A2 - நிலை 3<br>பாடம் 2 - நோவாவும் ஜலப்பிரளயமும்<br>தலைப்பு - பேழைக்குள் நுழைதல் | A2 - நிலை 4<br>ஆராய்ச்சி 2 - ஏனோக்கும் நோவாவும்<br>தலைப்பு - தேவனோடு நடத்தல் |
|---|---|---|
| | **வேதப்பகுதி: ஆதியாகமம் 7:1-20**<br>**முக்கிய வசனம்: ஆதியாகமம் 7:5**<br>**நாம் கற்றுக்கொள்வது:**<br>1. நோவாவையும் அவருடைய குடும்பத்தையும் காப்பாற்ற தேவன் ஒரு வழியை ஏற்பாடு செய்தார்.<br>2. நோவா தேவன்மீது விசுவாசம் வைத்திருந்ததினால், தேவன் செய்யச் சொன்னதை அப்படியே செய்தார். | **வேதப்பகுதி: ஆதியாகமம் 5:21-33; ஆதியாகமம் 6:1-15**<br>**முக்கிய வசனம்: எபிரேயர் 11:5**<br>**நாம் கற்றுக்கொள்வது:**<br>1. ஏனோக்கும் அவருடைய பேரனான நோவாவும் தேவனோடு நெருங்கிய ஐக்கியம் வைத்திருந்தார்கள்.<br>2. தேவனோடு கொண்டுள்ள ஐக்கியத்தினால், இவர்கள் இருவரும் மற்றவர்களிடமிருந்து விலகி நின்றார்கள். |
| **அறிமுகப்படுத்துங்கள்** | நீங்கள் எப்போதாவது உங்கள் குடும்பத்துடன் பயணம் அல்லது உல்லாசப் பயணம் செய்திருக்கிறீர்களா? அதற்கு நீங்கள் எப்படித் தயாரானீர்கள்? | தேவனோடு ஐக்கியம் வைத்திருப்பது மக்கள்கூட்டத்தில் இருந்து நம்மை வேறாக எடுத்தக்காண்பிக்க வேண்டும்! கிறிஸ்தவர்கள் எப்படி மற்றவர்களிடம் இருந்து வித்தியாசமானவர்களாக இருக்க வேண்டும்? ஒரு பட்டியலை தயாரிக்கவும். |
| **முடியுங்கள்** | **பைபிள் கதையைக் கூறுங்கள்**<br>**கருத்துப்பரிமாறிக்கொண்டு விளக்குங்கள்:**<br>1. 7 நாட்களுக்குப் பிறகு வெள்ளத்தை அனுப்பப்போவதாக தேவன் நோவாவிடம் கூறினார்.<br>2. வெள்ளத்திற்குப் பிறகும் தப்பிப்பிழைத்திருக்கும்படி பேழையில் விலங்குகளை சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று தேவன் நோவாவுக்கு சொன்னார்.<br>3. நோவாவுக்கு 600 வயதானபோது, 2வது மாதம் 17ம் நாளில் நோவா தன்னுடைய குடும்பத்தையும் விலங்கினங்களையும் தேவன் சொல்லியிருந்தது போல பேழையில் சேர்த்துக்கொண்டார்.<br>4. ஏழு நாட்களுக்குப் பிறகு வெள்ளம் தேவன் சொல்லியிருந்தது போலவே வந்தது. நோவாவும் அவருடைய குடும்பத்தாரும் விலங்குகளும் உள்ளே சென்றபிறகு, பாதுகாப்பாய் இருக்கும்படிக்கு தேவன் பேழையின் கதவை அடைத்தார். நோவாவும் அவருடைய குடும்பத்தாரும் உள்ளே இருந்த விலங்கினங்கள் மட்டுமே அந்த பயங்கரமான பெருவெள்ளத்திற்குத் தப்பிப் பிழைத்தனர். பெருமழை 40 நாள் நீடித்தது! உயர்ந்த மலை சிகரங்களும் மூடி அவைகளுக்கும் மேலே 22 அடி உயரத்திற்கு வெள்ளம் உயர்ந்தது.<br>**முக்கியமான வசனத்தை விளக்கிக்காட்டி, மாணவர்கள் அவற்றை கற்றுக்கொள்ள ஊக்குவியுங்கள்.**<br>**பாடம் 2ஐ முடியுங்கள்.**<br>**காண்பியுங்கள்: FBI - நோவாவும் மகா ஜலப்பிரளயமும் (மி)** | **பைபிள் கதையைக் கூறுங்கள்**<br>**கருத்துப்பரிமாறிக்கொண்டு விளக்குங்கள்:**<br>1. ஏனோக்கு 365 வருடங்கள் தேவனோடு நெருக்கமான ஐக்கியம்கொண்டு வாழ்ந்தார்.<br>2. ஏனோக்கு மற்ற மனிதர்களைப் போல இறக்கவில்லை என்று வேதம் சொல்கிறது. அவருடைய வாழ்நாள் முடிந்தபோது காணப்படாமல் போனார், ஏனென்றால் தேவன் அவரை பரலோகத்திற்கு எடுத்துக்கொண்டார்.<br>3. ஏனோக்குடைய கொள்ளுப்பேரனே நோவா. தன்னை சுற்றி இருந்த துன்மார்க்கரான மனிதர்களைப் போல இராமல், ஏனோக்கைப் போலவே நோவாவும் தேவனோடு நெருங்கிய ஐக்கியம்கொண்டு ஒரு நீதிமானாய் வாழ்ந்தார்.<br>4. நோவாவின் காலத்தில் வாழ்ந்த மக்களின் பாவம்நிறைந்த வாழ்க்கை தேவனுடைய இருதயத்துக்கு வேதனையளித்தது. அவர்களை வெள்ளத்தினால் தண்டிக்க தேவன் விரும்பினார், ஆனால் அவர் நோவாவை காப்பாற்றினார்.<br>5. வெள்ளத்திலிருந்து நோவாவும் அவருடைய குடும்பமும் காக்கப்படும்படி ஒரு பேழையை செய்யும் வழிமுறைகளை தேவன் நோவாவுக்கு கொடுத்தார்.<br>**முக்கியமான வசனத்தை விளக்கிக்காட்டி, மாணவர்கள் அவற்றை கற்றுக்கொள்ள ஊக்குவியுங்கள்.**<br>**வேத ஆராய்ச்சி 2ஐ முடியுங்கள்.**<br>**காண்பியுங்கள்: FBI - நோவாவும் மகா ஜலப்பிரளயமும் . (மி)** |
| **மீள்பார்வை** | படைப்பாற்றலோடு இருங்கள்! நோவா, அவருடைய குடும்பம் மற்றும் மிதக்கும் பெட்டகத்தின் உள்ளே இருக்கும் விலங்குகளின் படத்தை வரையுங்கள். தேவனால் இரட்சிக்கப்பட்டவர்கள் என்று இப்படத்திற்கு தலைப்பு கொடுங்கள். | 2. ஏனோக்கும் நோவாவும் எப்படிப்பட்டவர்களாய் இருந்தார்கள்? மற்ற மக்களிடமிருந்து அவர்களை வித்தியாசப்படுத்தியது எது? |
| **வாழ்ந்துகாட்டுங்கள்** | **இந்தப் பாடம் நமக்குவிடும் சவால் என்ன?**<br>தேவன் நோவாவை நேசித்தார். அவரை ஆயத்தப்படுத்த ஒரு வழியை ஏற்படுத்தினார், அதாவது ஜலப்பிரளயத்திலிருந்து அவரை காப்பாற்ற ஒரு வழியை ஏற்படுத்தினார். நோவா முதலில் தேவனுடைய கட்டளைகளைப் பின்பற்றவேண்டியதாயிற்று. தேவன் நம்மை நியாயத்தீர்ப்புக்கு ஆயத்தமாகும்படி கேட்கிறார். நம்மை இரட்சிக்க சிலுவையில் மரித்த கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை நாம் விசுவாசிக்க வேண்டும் என்று அவர் விரும்புகிறார். நீங்கள் அவர்மீது நம்பிக்கை வைத்திருக்கிறீர்களா? நீங்கள் இரட்சிக்கப்பட ஆயத்தமா? | **இந்தப் பாடம் நமக்குவிடும் சவால் என்ன?**<br>மற்ற மக்களிடமிருந்து கிறிஸ்தவர்களை வேறுபட்டவர்களாக எடுத்துக் காண்பிக்கும் நற்பண்புகளின் பட்டியலை சிந்தித்துப் பாருங்கள். தேவனை நம்பவும் இந்த வாரம் அவருடைய வழிகளில் நடக்கவும், அவரிடத்தில் ஜெபியுங்கள். ஏனோக்கு மற்றும் நோவா தேவனோடு நடந்ததை சிந்தித்துப் பாருங்கள். நீங்கள் விசுவாசமுள்ள ஒரு கிறிஸ்தவரின் ஒரு நல்ல குணத்தை தெரிவுசெய்ய விரும்பலாம், அந்த நல்ல குணத்தில் நீங்கள் வளர உதவிசெய்ய வேண்டும் என்று தேவனிடத்தில் கேளுங்கள். |

| | A2 - நிலை 3<br>பாடம் 3 - நோவாவும் ஜலப்பிரளயமும்<br>தலைப்பு - பேழையால் இரட்சிக்கப்படுதல் | A2 - நிலை 4<br>ஆராய்ச்சி 3 - நோவாவும் ஜலப்பிரளயமும்<br>தலைப்பு - தேவனுக்காக உழைத்தல் |
|---|---|---|
| | **வேதப்பகுதி: ஆதியாகமம் 8:1-22**<br>**முக்கிய வசனம்: ஆதியாகமம் 8:1**<br>**நாம் கற்றுக்கொள்வது:**<br>1. தேவன் நோவாவை நினைவுகூர்ந்து, நோவாவையும் அவருடைய குடும்பம் மற்றும் பேழையில் இருந்த விலங்குகளையும் பராமரித்தார்.<br>2. பேழையில் தன்னைக் காப்பாற்றியதற்காக நோவா தேவனுக்கு நன்றி சொன்னார்,<br>3. இனி ஒருபோதும் எல்லா உயிர்களையும் அழிக்கமாட்டேன் என்ற ஒரு வாக்குறுதியை தேவன் கொடுத்தார். | **வேதப்பகுதி: ஆதியாகமம் 6:14-22; ஆதியாகமம் 7:1-24**<br>**முக்கிய வசனம்: எபிரேயர் 11:7**<br>**நாம் கற்றுக்கொள்வது:**<br>1. ஒரு பேழையைக் கட்டுவதில் தேவன் நோவாவுக்கு விரிவான அறிவுரைகளைக் கொடுத்தார்.<br>2. நோவா தேவனுடைய கட்டளைகளுக்கு சரியாக கீழ்ப்படிந்தார், அதனால் காப்பாற்றப்பட்டார். |
| **அறிமுகப்படுத்துங்கள்** | 1. உங்களை கவனித்துக்கொள்கிற உங்கள் குடும்பத்தினர், நண்பர்கள் அல்லது ஆசிரியர்கள் உங்களைப் பராமரிக்கிற அனைத்து வழிகளையும் பட்டியலிடுங்கள்<br>2. ஒவ்வொரு நாளும் தேவன் நம்மைப் பராமரிக்கும் எல்லா வழிகளையும் வைத்து ஒரு பட்டியல் தயாரியுங்கள்.<br>3. உங்களை கவனித்துக்கொள்கிற குடும்பத்தினர், நண்பர்கள் அல்லது ஆசிரியர்கள் செய்கிற அனைத்து காரியங்களுக்கும் நீங்கள் நன்றிசொல்வது முக்கியத்துவம் வாய்ந்தது என குழுவிலுள்ளவர்களுக்கு நினைவூட்டுங்கள். அதைவிட முக்கியமானது, நாம் தேவனை நம்பும்போது அவர் நம்மை காப்பாற்றுகிறபடியால் அவருக்கு நன்றிசொல்வதாகும். | விமானங்கள் மற்றும் கப்பல்களில் கொடுக்கப்படுகிற பாதுகாப்பு வழிமுறைகளைப் பற்றி குழுவில் கலந்துரையாடுங்கள். மக்கள் அவற்றை அக்கறையோடு எடுத்துக்கொள்வார்களா?<br>ஏன்? ஏன் கூடாது? நோவாவுக்கு ஏன் முக்கியம்? தேவன் கொடுத்த ஒவ்வொரு கட்டளைக்கும் நோவா கீழ்ப்படிந்தது ஏன் முக்கியத்துவம் வாய்ந்தது? |
| **முடியுங்கள்** | **பைபிள் கதையைக் கூறுங்கள்**<br>**கருத்துப்பரிமாறிக்கொண்டு விளக்குங்கள்:**<br>1. தேவன் நோவாவையும் அவருடைய குடும்பத்தையும் பேழையின் உள்ளே இருந்த விலங்குகளையும் நினைவுகூர்ந்தார். அவர் பூமியின்மீது காற்றை வீசச் செய்தார். வெள்ளப்பெருக்கு குறையத் தொடங்கியது.<br>2. 150 நாட்களுக்கு பிறகு (மொத்தம் ஐந்து மாதங்கள்) பேழை அராராத் என்று அழைக்கப்படும் மலைமீது தங்கியிருந்தது. இரண்டரை மாதங்களுக்குப் பிறகு தண்ணீர் மேலும் வற்றத்தொடங்கியது, மற்ற மலைகள் மீண்டும் கண்ணுக்குத் தென்பட்டன. 3. 40 நாட்கள் கழித்து நோவா ஜன்னலைத் திறந்து, ஒரு காகத்தை பேழையிலிருந்து வெளியேவிட்டார், அது திரும்பிவரவில்லை. பின்னர் அவர் ஒரு புறாவை வெளியே விட்டார். புறா உலர்ந்த தரையைக் கண்டுபிடிக்க முடியாமல், பேழைக்குத் திரும்பி வந்தது. 7 நாட்கள் கழித்து நோவா மீண்டும் பேழையிலிருந்து புறாவை வெளியே விட்டார். இந்த முறை அது திரும்பிவந்தபோது, ஒரு ஒலிவமரத்தின் இலையைக் கொண்டுவந்தது. எனவே, வெள்ளம் கிட்டத்தட்ட வற்றியிருக்கிறது என நோவா அறிந்துகொண்டார். அவர் புறாவை மறுபடியும் 7 நாட்கள் கழித்து வெளியே விட்டார், அது பின்னர் திரும்பிவரவில்லை. 4. இறுதியாக, ஜலப்பிரளயம் ஏற்பட்டு பன்னிரண்டு மாதங்களுக்குப் பிறகு, பூமி மீண்டும் வெட்டாந்தரையாக காய்ந்திருந்தது!<br>5. நோவாவின் குடும்பமும் விலங்குகள் அனைத்தும் பேழையிலிருந்து வெளியே வரவேண்டும் என தேவன் நோவாவிடம் சொன்னார்.<br>6. நோவா மிகவும் நன்றியுள்ளவராக இருந்தார். அவர் ஒரு பலிபீடத்தைக் கட்டி தேவனுக்குச் சர்வாங்கத் தகனபலி செலுத்தினார். 7. நோவாவின் பலி தேவனுக்குப் பிரியமாயிருந்து. அவர் இனி ஒருபோதும் எல்லா உயிரினங்களையும் அழிக்கமாட்டேன் என்று வாக்குறுதியளித்தார்.<br>**முக்கியமான வசனத்தை விளக்கிக்காட்டி, மாணவர்கள் அவற்றை கற்றுக்கொள்ள ஊக்குவியுங்கள்.**<br>**பாடம் 3ஐ முடியுங்கள்.**<br>**காண்பியுங்கள்: FBI - நோவாவும் ஜலப்பிரளயமும் . (மி)** | **பைபிள் கதையைக் கூறுங்கள்**<br>**கருத்துப்பரிமாறிக்கொண்டு விளக்குங்கள்:**<br>1. ஒரு பெரிய பேழையை கட்டுவதற்கும், தாம் அனுப்பப்போகும் ஜலப்பிரளயத்திற்கு தயாராவதற்கும் தேவன் நோவாவுக்கு விரிவான கட்டளையைக் கொடுத்தார்<br>2. ஜலப்பிரளயத்தைப் பற்றிய சில விவரங்கள் கூறி தேவன் நோவாவை எச்சரித்தார். 3. நோவாவையும், அவருடைய குடும்பத்தாரையும், விலங்குகளையும் காப்பாற்றுவேன் என தேவன் வாக்குறுதியளித்தார். 4. விலங்குகளை எவ்வாறு காப்பாற்றுவது என்பது பற்றிய விரிவான வழிமுறைகளை தேவன் கொடுத்தார். நோவாவும் அவருடைய குடும்பத்தாரும் விலங்குகளும் பேழைக்குள் நுழைந்தவுடன் தேவன் கதவை உள்ளே அடைத்தார். 5. வெள்ளப்பெருக்கு 40 நாட்கள் நீடித்தது, கடுமையான மழையால் பேழைக்கு வெளியே இருந்த எல்லா உயிரினங்களும் மடிந்தன. நோவாவும் அவருடைய குடும்பத்தாரும், விலங்குகளும் மாத்திரமே பேழையின் உள்ளே தப்பிப் பிழைத்தனர். பேழை வெள்ளத்தின்மீது மிதந்துகொண்டிந்தது, தேவன் அவர்களை பாதுகாப்பாக வைத்திருந்தார்.<br>**முக்கியமான வசனத்தை விளக்கிக்காட்டி, மாணவர்கள் அவற்றை கற்றுக்கொள்ள ஊக்குவியுங்கள்.**<br>**வேத ஆராய்ச்சி 3ஐ முடியுங்கள்.**<br>**காண்பியுங்கள்: FBI - நோவாவும் ஜலப்பிரளயமும் . (மி)** |
| **மீள்பார்வை** | நாம் தேவனுக்கு நன்றிசெலுத்த வேண்டிய காரியங்களை சேர்த்து, விசேஷமாக இரட்சிப்பு, ஒரு சுவரொட்டியை தயாரியுங்கள். | இந்தக் கதையில் நோவா மற்றும் தேவனுடைய குணாதிசயங்களைக் குறித்து நாம் என்ன கற்றுக்கொள்கிறோம்? இவ்விருவரையும் விவரிக்க நீங்கள் பயன்படுத்தும் வார்த்தைகளை ஒரு பட்டியலாக்குங்கள். |
| **வாழ்ந்துகாட்டுங்கள்** | **இந்தப் பாடம் நமக்குவிடும் சவால் என்ன?**<br>தேவன் நோவாவை இரட்சித்து அவரைப் பராமரித்தார். நோவா தேவனிடத்தில் நன்றியுள்ளவராய் இருந்தார். தேவன் நம்மை இரட்சிக்கவும் பராமரிக்கவும் முடியும், அதற்கு அவர் சித்தமுள்ளவராய் இருக்கிறார். நாம் அவர்மீது நம்பிக்கை வைக்கவேண்டும், மேலும் அவருக்கு நன்றிசொல்ல வேண்டும். | **இந்தப் பாடம் நமக்குவிடும் சவால் என்ன?**<br>1. முக்கிய வசனத்தை வாசிக்கவும். நமது வாழ்வில் நாம் எவ்வாறு நோவாவின் முன்மாதிரியை பின்பற்ற முடியும்?<br>2. இது நம்மைச் சுற்றியுள்ள மக்களிடத்தில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தும்? |

| | A2 - நிலை 3<br>பாடம் 4 - நோவாவும் ஜலப்பிரளயமும்<br>தலைப்பு - பேழையிலிருந்து வெளியேறுதல் | A2 - நிலை 4<br>ஆராய்ச்சி 4 - நோவாவும் குடும்பவும்<br>தலைப்பு - தேவனை ஆராதித்தல் |
|---|---|---|
| | **வேதப்பகுதி: ஆதியாகமம் 9:7-17**<br>**முக்கிய வசனம்: ஆதியாகமம் 9:15**<br>**நாம் கற்றுக்கொள்வது:**<br>1. நோவாவுடன் உடன்படிக்கை வாக்குத்தத்தம் ஒன்றை தேவன் செய்தார். இனி ஒருபோதும் ஜலப்பிரளயத்தினால் பூமியின் எல்லா உயிரினங்களையும் கொல்லமாட்டேன் என்று உறுதியளித்தார்.<br>2. தேவன் தமது வாக்குத்தத்தை நினைகூரும்படி வானத்தில் ஒரு வானவில்லை வைத்தார். | **வேதப்பகுதி: ஆதியாகமம் 8:1-22; ஆதியாகமம் 9:11-16**<br>**முக்கிய வசனம்: எபேசியர் 2:8**<br>**நாம் கற்றுக்கொள்வது:**<br>1. தேவன் நோவாவையும், அவரது குடும்பத்தையும் மற்றும் பேழையில் இருந்த மிருகங்களையும் நினைத்தருளினார்.<br>2. நோவா நன்றியுடன் இருந்தார், அவர் பேழையை விட்டு வெளியேறியவுடன் வேறெதையும் செய்வதற்கு முன்பு தேவனை ஆராதித்தார்.<br>3. இனி ஒருபோதும் பூமியின் குடிமக்களை வெள்ளத்தால் அழிப்பதில்லை என தேவன் வாக்குறுதி கொடுத்தார். |
| அறிமுகப்படுத்துங்கள் | மக்கள் கூறும் பல்வேறு வகையான வாக்குறுதிகளைப் பற்றி இருவர் இருவராக விவாதியுங்கள். மக்கள் தங்கள் வாக்குறுதிகளை எப்போதும் காப்பாற்றுகிறார்களா? | நன்றி அட்டைகள் மற்றும் பரிசுகள் - இவற்றைக்குறித்து இரண்டிரண்டு பேராக கலந்து பேசுங்கள். மக்கள் அவைகளை ஏன் அனுப்புகிறார்கள்? நீங்கள் எப்போதாவது ஒன்றை அனுப்பியிருக்கிறீர்களா? ஏன்? |
| முடியுங்கள் | **பைபிள் கதையைக் கூறுங்கள்**<br>**கருத்துப்பரிமாறிக்கொண்டு விளக்குங்கள்:**<br>1. எண்ணிக்கையில் பெருகி பூமியை நிரப்புங்கள் என்று நோவாவிடத்திலும் அவருடைய குடும்பத்தாரிடத்திலும் தேவன் சொன்னார். 2. உடன்படிக்கை என்றழைக்கப்படும் ஒரு சிறப்பு வாக்குறுதியை நோவாவுடனும், அவருடைய குமாரருடனும், சகல மிருகஜீவன்களுடனும், பூமியில் வாழும் உயிரினங்களுடனும் தேவன் செய்தருளினார். 3. பூமியையும் அதன் உயிரினங்கள் அனைத்தையும் இனி ஒருபோதும் வெள்ளத்தால் அழிப்பதில்லை என தேவன் வாக்களித்தார். 4. தேவன் தமது நித்திய உடன்படிக்கையை நினைவுகூருவதற்காக வானத்தில் மேகங்களின்மேல் ஒரு வானவில்லை வைத்தார். அந்த உடன்படிக்கை என்றைக்கும் நீடிக்கும். அவர் தமது வாக்குறுதியை மீறமாட்டார்.<br>**முக்கியமான வசனத்தை விளக்கிக்காட்டி, மாணவர்கள் அவற்றை கற்றுக்கொள்ள ஊக்குவியுங்கள். பாடம் 4ஐ முடியுங்கள்.**<br>**காண்பியுங்கள்: FBI-நோவாவும் ஜலப்பிரளயமும். (மி)** | **பைபிள் கதையைக் கூறுங்கள்**<br>**கருத்துப்பரிமாறிக்கொண்டு விளக்குங்கள்:**<br>1. ஒரு பெரிய பேழையை கட்டவேண்டும் என நோவாவுக்கு தேவன் விரிவான அறிவுரைகளை வழங்கி இருந்தார். அதேபோல தாம் அனுப்பப்போகும் ஜலப்பிரளயத்திற்கு ஆயத்தமாக இருக்கும்படியும் அறிவுரை வழங்கியிருந்தார். 2. பேழைக்குள் இருக்கும் நோவாவையும் அவருடைய குடும்பத்தாரையும் மற்றும் விலங்குகளையும் காப்பாற்றுவேன் என தேவன் நோவாவுக்கு வாக்குறுதி அளித்திருந்தார். 3. ஜலப்பிரளயம் ஏற்பட்டு, அது 40 நாட்கள் நீடித்தது. நோவாவும் அவருடைய குடும்பத்தாரும் அவர்களோடு பேழையில் இருந்த விலங்குகள் மட்டுமே தப்பிப் பிழைத்தனர். 4. வெள்ளம் குறையத் தொடங்கிய, தண்ணீர் படிப்படியாக வற்றத் தொடங்கியது. பேழை அரராத் என்னும் மலையின் மீது தங்கிற்று. 5. 40 நாட்களுக்கு பிறகு நோவா ஒரு காகத்தை அறைக்கு வெளியே விட்டார் அது பூமியின் மீது தண்ணீர் வற்றும்வரை போக்கும் வரவுமாய் இருந்தது. பிறகு ஒரு புறாவை வெளியே விட்டார் அது பூமியின்மீதெங்கும் கால் வைக்க உலர்ந்த நிலம் காணப்படாததால் ஏழு நாட்கள் கழித்து நோவானிடத்தில் திரும்பி வந்தது. மீண்டும் அதை வெளியே விட்டார், இந்த முறை அது ஒரு ஒலிவ இலையுடன் அவரிடத்தில் திரும்பிற்று. மீண்டும் அதை வெளியே விட்டார். இந்த முறை அந்தப் புறா திரும்பி வரவில்லை. பூமி காய்ந்துகொண்டே வந்தது. 6. நோவாவும் அவருடைய குடும்பத்தாரும் பேழையை விட்டு வெளியே வரும்படி தேவன் கூறினார். மேலும் அவர்கள் எண்ணிக்கையில் பெருகி பூமியை நிரப்பும்படி கூறினார். 7. பேழையை விட்டு வெளியே வந்ததும், நோவா முதல் வேலையாக தேவனுக்கு ஒரு பலியை செலுத்தினார். 8. நோவாவோடும் அவரது மகன்களோடும் மற்றும் அனைத்து விலங்குகளோடும் மற்றும் பூமியில் வாழும் உயிரினங்களோடும் தேவன் உடன்படிக்கை என்ற ஒரு சிறப்பு வாக்குறுதியை செய்தார். 9. இனி ஒருபோதும் பூமியையும் அதன் உயிரினங்களையும் வெள்ளத்தால் அழிப்பதில்லை என தேவன் வாக்குறுதி அளித்தார்.<br>10. தேவன் அவருடைய நித்திய உடன்படிக்கையை நினைகூரும்வண்ணம் ஒரு வானவில்லை மேகத்தில் வைத்தார். அது என்றைக்கும் நீடிக்கும். அவர் தனது வாக்குறுதியை மீறமாட்டார்.<br>**முக்கியமான வசனத்தை விளக்கிக்காட்டி, மாணவர்கள் அவற்றை கற்றுக்கொள்ள ஊக்குவியுங்கள். வேத ஆராய்ச்சி 4ஐ முடியுங்கள்.**<br>**காண்பியுங்கள்: FBI - நோவாவும் ஜலப்பிரளயமும். (மி)** |
| மீள்பார்வை | புதிதாக உருவாக்குங்கள்! ஒரு வானவில் போஸ்டரை தயாரிக்கவும். 'தேவன் தமது வாக்குத்தத்தங்களை என்றைக்கும் காக்கிறார்' என்று தலைப்பு கொடுங்கள். | குழுக்களாக கலந்துபேசுங்கள் பின்னர் எல்லாக் குழுக்களும் ஒன்றுகூடி கருத்துக்களை பரிமாறிக்கொள்ளுங்கள்:<br>ஆராதனையைப் பற்றி இந்தப் பாடம் என்ன கற்பிக்கிறது? |
| வாழ்ந்துகாட்டுங்கள் | **இந்தப் பாடம் நமக்குவிடும் சவால் என்ன?**<br>நோவாவினிடத்தில் தேவன் தந்த வாக்குத்தத்தம் நித்தியமானது. தேவன் தமது வாக்குத்தத்தங்களை எப்பொழுதும் நிறைவேற்றுகிறார். இது நமது வாழ்க்கையில் எப்படிப்பட்ட மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும்? | **இந்தப் பாடம் நமக்குவிடும் சவால் என்ன?**<br>நோவா தேவனிடம் நன்றியுள்ளவராக இருந்தார். நமது வாழ்வில் தேவன் தந்த ஆசீர்வாதங்களுக்காக, நடைமுறையில் நாம் எவ்வாறு அவருக்கு நன்றியை வெளிப்படுத்த முடியும்? |

| | A3 - நிலை 3<br>பாடம் 1 - பேதுருவின் வாழ்க்கை<br>தலைப்பு - இயேசு பேதுருவை அழைத்தல் | A3 - நிலை 4<br>ஆராய்ச்சி 1 - பேதுருவின் வாழ்க்கை<br>தலைப்பு - பேதுருவின் அழைப்பு |
|---|---|---|
| | **வேதப்பகுதி: மத்தேயு 4:17-22**<br>**முக்கிய வசனம்: மத்தேயு 4:19**<br>**நாம் கற்றுக்கொள்வது:**<br>1. தன்னைப் பின்பற்றும்படி இயேசு மக்களை அழைக்கிறார்.<br>2. இயேசுவைப் பின்பற்றுவது என்றால் அவரில் விசுவாசம் வைத்து, மனந்திரும்பி, பாவத்தைவிட்டு திரும்புதல் என்று பொருள். | **வேதப்பகுதி: மத்தேயு 4:17-22; யோவான் 1:35-42**<br>**முக்கிய வசனம்:மத்தேயு 4:19**<br>**நாம் கற்றுக்கொள்வது:**<br>1. அந்திரேயாவும் மற்றும் அநேகமாக யோவானும் முதன் முதலில் இயேசுவை சந்தித்தார்கள், பின்னர் அவர்கள் அவருடைய சீடர்களாக ஆனார்கள்.<br>2. இயேசுவே மேசியா, இரட்சகர் என்பதைக் கண்டுகொண்டார்கள். |
| **அறிமுகப்படுத்துங்கள்** | பல விளையாட்டுகளில் அல்லது திட்டங்களில் ஒன்றாக வேலை செய்யும் அணிகள் தேவை. இயேசு தம் ஊழியத்தை ஆரம்பித்தவுடன், அவருக்கு மக்கள் தேவைப்பட்டனர், தாம் சென்றுவிட்ட பிறகும் தனது வேலையைத் தொடர அவர்களை பயிற்றுவித்தார். | மக்கள் எப்படி இருக்க முடியும் என்பது பற்றி பேசுங்கள் ஒரு கால்பந்து அணி, பாப் பாடகர்கள் முதலியோருக்கு மக்கள் எவ்வாறு ரசிகர்களாக ஆக அல்லது அவர்களைப் பின்பற்றுகிறவர்களாக மாறுகிறார்கள் என்பதைப் பற்றிப் பேசுங்கள்.<br>மக்களை ஈர்த்த இயேசுவின் குணாதிசயம் மற்றும் அவரது வார்த்தைகளை விளக்குங்கள்.<br>குறிப்பிட்ட நபர்களை இயேசு தமக்கு சீடர்களாய் இருக்கும்படி அழைத்ததையும் விவரியுங்கள். |
| **முடியுங்கள்** | **பைபிள் கதையைக் கூறுங்கள்**<br>**கருத்துப்பரிமாறிக்கொண்டு விளக்குங்கள்:**<br>1. இயேசு பிரசங்கித்த செய்தி. **(4:17)**<br>2. பேதுருவும் யோவானும் தங்கள் வலைகளை வீசுவதை இயேசு கண்டார்.<br>3. கடினமாக உழைத்துக் கொண்டிருந்த மீனவர்களை இயேசு குழுவாக அழைத்தார், அவர்களை தன்னுடைய ஊழியத்தை செய்யும்படி பயிற்றுவிக்க முடியும் என்று அவர் அறிந்திருந்தார்.<br>4. அவர்கள் உடனடியாக அவருடைய அழைப்புக்கு கீழ்ப்படிதல்.<br>5. இயேசு யாக்கோபையும் யோவானையும் கூட அழைத்தார். அவர்கள் உடனடியாக அவருக்கு கீழ்ப்படிந்தார்கள், இவர்கள்தான் முதல் சீடர்கள்.<br>**முக்கியமான வசனத்தை விளக்கிக்காட்டி, மாணவர்கள் அவற்றை கற்றுக்கொள்ள ஊக்குவியுங்கள்.**<br>**பாடம் 1ஐ முடியுங்கள்.**<br>**காண்பியுங்கள்: பொருத்தமான FBI கதை இல்லை. (மி)** | **பைபிள் கதையைக் கூறுங்கள்**<br>**கருத்துப்பரிமாறிக்கொண்டு விளக்குங்கள்:**<br>1. இயேசுதான் தேவனுடைய ஆட்டுக்குட்டி என்று யோவான் கூறினார். அதைக் கேட்ட அந்திரேயாவும் அவருடைய நண்பர்களும் அவர் மேசியா என்று உணர்ந்துகொண்டார்கள். **(யோவான் 1: 35, 41)**<br>2. அந்திரேயா பேதுருவை இயேசுவுக்கு அறிமுகப்படுத்தியதின் முக்கியத்துவம்.<br>3. பின்னர் அவர்கள் மீன்பிடித்துக் கொண்டிருக்கும்போது இயேசுவை சந்தித்தார்கள் என்பதில் ஆச்சரியமேதுமில்லை. அவர் தன்னைப் பின்பற்றும்படி அவர்களை அழைத்தார், அவர்கள் உடனே அவருக்கு கீழ்ப்படிந்தார்கள்.<br>4. அந்திரேயாவின் தனிப்பட்ட சாட்சியின் உதாரணம்.<br>5. இயேசுவை தனிப்பட்ட விதத்தில் அனுபவத்தில் அறிவதும் மற்றவர்களுக்கு அறிவிப்பதிலும் உள்ள முக்கியத்துவம்.<br>**முக்கியமான வசனத்தை விளக்கிக்காட்டி, மாணவர்கள் அவற்றை கற்றுக்கொள்ள ஊக்குவியுங்கள்.**<br>**வேத ஆராய்ச்சி 1ஐ முடியுங்கள்.**<br>**காண்பியுங்கள்: பொருத்தமான FBI கதை இல்லை.. (மி)** |
| **மீள்பார்வை** | மாணவர்களுக்கான கேள்விகள்:<br>1. இயேசு ஏன் இந்தக் குறிப்பிட்ட மனிதர்களை அழைத்தார்?<br>2. தேவனுடைய அழைப்புக்கு கீழ்ப்படிதல் என்றால் இன்றைக்கு அதன் அர்த்தம் என்ன?<br>3. தேவனுடைய அழைப்புக்குக் கீழ்ப்படியாதபடி கடினமாக்கும் பிரச்சனைகள் எவை?<br>4. இயேசு அவர்களுக்கு என்ன வாக்குத்தத்தம் கொடுத்தார்? **(4:19ஐ பார்க்க)** | மாணவர்களுக்கான கேள்விகள்:<br>1. உங்களுடைய வாழ்க்கையைக் குறித்து தேவன் ஒரு திட்டம் வைத்திருக்கிறார் என்று உங்களுக்கு எப்படித் தெரியும்?<br>2. இந்த புதிய சீடர்களுக்கான இயேசுவின் திட்டம் என்னவாக இருந்தது?<br>3. தேவனுடைய திட்டத்தை அறிந்துகொள்வதால் விளையும் நன்மைகள் என்ன?<br>4. நமது வாழ்விற்கான தேவனுடைய திட்டத்தை எவ்வாறு கண்டுபிடிப்பது? அதற்கு நாம் எவ்வாறு பதிலளிக்க வேண்டும்? |
| **வாழ்ந்துகாட்டுங்கள்** | **இந்தப் பாடம் நமக்குவிடும் சவால் என்ன?**<br>1. இன்று மனந்திரும்புதலின் அர்த்தத்தை விவாதியுங்கள்.<br>2. மனந்திரும்புதலின் ஒரு ஜெபத்தை எழுதி அதை கூடையில் வைக்கவும்.<br>3. புகழ்ப்பெற்ற கிறிஸ்தவர்களின் தேவ அழைப்பைப் பற்றி ஆராய்ச்சி செய்யுங்கள். எ.கா. டேவிட் லிவிங்ஸ்ட்டன். | **இந்தப் பாடம் நமக்குவிடும் சவால் என்ன?**<br>1. இன்று நாம் எப்படியெல்லாம் தேவனுக்கு சாட்சியாக திகழமுடியும் என்பதைக் குறித்து விவாதியுங்கள்.<br>2. இயேசுவின் சில பெயர்களையும் சூட்டப்பட்ட பட்டங்களையும் பட்டியலிடுக. |

| | A3 - நிலை 3<br>பாடம் 2 - பேதுருவின் வாழ்க்கை<br>தலைப்பு - பெரிமளவு மீன்களைப் பிடித்தல் | A3 - நிலை 4<br>ஆராய்ச்சி 2- பேதுருவின் வாழ்க்கை தலைப்பு<br>- பேதுருவின் சவால் |
|---|---|---|
| | **வேதப்பகுதி:** லூக்கா 5:1-11<br>**முக்கிய வசனம்:**ரோமர் 3:23<br>**நாம் கற்றுக்கொள்வது:**<br>1. சீடர்கள் இயேசுவுக்குக் கீழ்ப்படிய கற்றுக்கொண்டார்கள்.<br>2. இயேசு மிகுந்த வல்லமையுள்ளவர், அவர் அற்புதங்களை செய்ய வல்லவர்.<br>3. மனந்திரும்புகிற யாரையும் தேவன் பயன்படுத்த முடியும். | **வேதப்பகுதி:** மத்தேயு 14:22-23<br>**முக்கிய வசனம்:**மத்தேயு 14:33<br>**நாம் கற்றுக்கொள்வது:**<br>1 இயேசு தேவனுடைய குமாரன் என்றும், அவர் நம்முடைய பயங்களை போக்க முடியும் என்றும் சீடர்கள் அறிந்துகொண்டார்கள்.<br>2. இயேசுவை நம்புவது, நமது வாழ்க்கையில் வரும் புயல்களை சமாளிக்க உதவுகிறது |
| **அறிமுகப்படுத்துங்கள்** | கற்றுக்கொடுத்தப் பாடங்களை மாணவர்கள் சரியாக கற்றிருக்கிறார்களா என்பதை பரிசோதிப்பதற்காக பள்ளியில் பெரும்பாலும் பரீட்சைகள் அல்லது தேர்வுகள் உள்ளன என்பதைப் பற்றி பேசுங்கள்.<br>மாணவர்கள் அவர்கள் இருந்த பாடங்கள் கற்று என்றால் பார்க்க<br>கற்பித்தார்.<br>இந்த சம்பவத்தில் இயேசு சீடர்களின் விசுவாசத்தையும் கீழ்ப்படிதலையும் சோதித்துப் பார்க்கிறார். | நமது வாழ்க்கையும் ஒரு பயணத்தைப் போலவே பிறக்கும்போது தொடங்குகிறது மரிக்கும்போது முடிகிறது என்பதை விளக்குங்கள். உள்ளன<br>வாழ்க்கை எளிதானதாக இருக்கும்போது அமைதியும், வாழ்க்கை கடுமையாக இருக்கும் போது புயலைப்போன்றும் இருக்கும் நேரங்கள் இருக்கின்றன. |
| **முடியுங்கள்** | **பைபிள் கதையைக் கூறுங்கள்**<br>**கருத்துப்பரிமாறிக்கொண்டு விளக்குங்கள்:**<br>1. பேதுருவின் படகில் அமர்ந்து கொண்டு இயேசு மக்கள் கூட்டத்தைக் இடம் பேசிக் கொண்டிருந்தார்.<br>2. இயேசு பிரசங்கித்த முடித்த பின்பு சீடர்களை மீண்டும் மீன்பிடிக்க போகும்படி கூறினார். (அவர்கள் ராத்திரி முழுவதும் மீன் பிடிக்க முயற்சித்தும் ஒன்றும் கிடைக்காமல் பசியாக சோர்வாக இருந்தனர்).<br>3. இயேசு கட்டளையிட்டபடியே பேதுரு செய்து ஏராளமான மீன்களைப் பிடித்தார்.<br>4. இயேசு எவ்வளவு பெரியவர் என்பதையும் தான் எவ்வளவு அற்பமான என்பதையும் பேதுரு உணர்ந்து கொண்டார். **(வசனம் 8)**<br>5. சீஷர்கள் எல்லாவற்றையும் விட்டு அவரைப் பின்பற்றினார்கள்.<br>**முக்கியமான வசனத்தை விளக்கிக்காட்டி, மாணவர்கள் அவற்றை கற்றுக்கொள்ள ஊக்குவியுங்கள்.**<br>**பாடம் 2ஐ முடியுங்கள்.**<br>**காண்பியுங்கள்: FBI - இயேசு தமது முதல் சீடர்களை அழைத்தல். (றி)** | **பைபிள் கதையைக் கூறுங்கள்**<br>**கருத்துப்பரிமாறிக்கொண்டு விளக்குங்கள்:**<br>1. இயேசு ஒரு பெரிய அற்புதத்தை செய்த பிறகு கலிலேயா கடலின் அக்கரைக்குப் போகும்படி சீஷர்களை அனுப்பியிருந்தார்.<br>2. அவர் ஜெபம்பண்ண ஒரு மலையின் மேல் ஏறினார்.<br>3. சீஷர்கள் ஒரு புயலில் சிக்கியிருந்தனர்.<br>4. அதை அறிந்திருந்த இயேசு கடல்மீது நடந்து அவர்களிடத்தில் வந்தார்.<br>5. இயேசுவினிடத்தில் வர அனுமதிக்கும்படி பேதுரு கேட்கிறார், கடல்மீது நடக்கிறார்.<br>6. பேதுரு மூழ்கத் தொடங்கி இயேசுவை நோக்கி காப்பாற்றும்படி கதறுகிறார் இயேசு அவரைக் காப்பாற்றுகிறார்.<br>7. இயேசுவில் விசுவாசம் வைக்கவேண்டியதின் முக்கியத்துவத்தை விளக்குங்கள்.<br>8. இயேசுவை நாம் விசுவாசிக்கும் போது அவர் எவ்வாறு நமது வாழ்க்கையில் ஏற்படும் புயல்களில் உதவி செய்கிறார் என்பதை விளக்குங்கள்.<br>**முக்கியமான வசனத்தை விளக்கிக்காட்டி, மாணவர்கள் அவற்றை கற்றுக்கொள்ள ஊக்குவியுங்கள்.**<br>**வேத ஆராய்ச்சி 2ஐ முடியுங்கள்.**<br>**காண்பியுங்கள்: FBI - இயேசு கடல்மீது நடத்தல்.. (மி)** |
| **மீள்பார்வை** | மாணவர்களுக்கான கேள்விகள்:<br>1. **5ம் வசனத்தில்** சீமோன் பேதுரு கூறும் பதில் என்ன?<br>2. பாவ அறிக்கைசெய்த பேதுருவிடமிருந்து நாம் கற்றுக்கொள்வது என்ன?<br>3. மனந்திரும்புதல் என்றால் என்ன என்று விவாதியுங்கள்.<br>4. இயேசுவுக்காக நாம் 'எல்லாவற்றையும் எப்படி விடமுடியும்'? | மாணவர்களுக்கான கேள்விகள்:<br>1. **27ம் வசனத்தில்** இயேசு பேசும் வார்த்தைகள் நம்மை எவ்வாறு ஊக்குவிக்கின்றன?<br>2. இந்தப் பகுதியில் வரும் பேதுருவின் முன்மாதிரியிலிருந்து நாம் என்ன கற்றுக்கொள்ளலாம்?<br>3. நம்முடைய வாழ்க்கையில் வரும் புயல்களை எதிர்கொள்வதினால் நாம் என்ன பாடங்களை கற்றுக்கொள்ளலாம்? |
| **வாழ்ந்துகாட்டுங்கள்** | **இந்தப் பாடம் நமக்குவிடும் சவால் என்ன?**<br>1. வரப்போகும் வாரத்தில் நீங்கள் இயேசுவுக்குக் கீழ்ப்படியப் போகும் மூன்று வழிகளை சொல்லுங்கள்.<br>2. உங்களுக்கு அறிமுகமான கிறிஸ்தவர் (அவன்/அவள்) ஒருவரிடம், அவர் தேவனுடைய மன்னிப்பை நன்கு உணர்ந்த தருணத்தைப் பற்றி உங்களிடம் சொல்லும்படி கேட்டுக்கொள்ளுங்கள். | **இந்தப் பாடம் நமக்குவிடும் சவால் என்ன?**<br>1. ஒரு குழுவாகக் கூடி, நீங்கள் வாழ்க்கையில் சந்தித்த ஒரு பெரும் புயலைக் கூறி, இயேசுவை நம்பும்போது அந்த சூழ்நிலையில் அவர் எவ்வாறு உதவக் கூடும் என்பதை சிந்தித்துப் பார்க்கும்படி அவர்களிடம் சொல்லி கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ளுங்கள்.<br>2. **ஏசாயா 43:2**ஐ வாசியுங்கள். இயேசுவை பின்பற்றுவோர்மீது கரிசனைக் காட்டுங்கள். நாம் இன்று வாசித்த வேதப் பகுதியோடு இந்த வசனம் எவ்வாறு பொத்தமுடையதாயிருக்கிறது? |

| | A1 - நிலை 3<br>பாடம் 3 - பேதுருவின் வாழ்க்கை<br>தலைப்பு - இயேசு பேதுருவை காப்பாற்றுகிறார் | A3 - நிலை 4<br>ஆராய்ச்சி 3 - பேதுருவின் வாழ்க்கை<br>தலைப்பு - பேதுரு அறிக்கைசெய்தல் |
|---|---|---|
| | **வேதப்பகுதி:** **மத்தேயு 14:22-33**<br>**முக்கிய வசனம்:** **மத்தேயு 14:33**<br>**நாம் கற்றுக்கொள்வது:**<br>1. இயேசு தேவனுடைய குமாரன்.<br>2. இயேசுவை நம்புவது வாழ்வின் புயல்களையும், பயங்களையும் கடக்க உதவுகிறது. | **வேதப்பகுதி:** **மத்தேயு 16:23-28**<br>**முக்கிய வசனம்:** **ரோமர் 10:9**<br>**நாம் கற்றுக்கொள்வது:**<br>1. இயேசுதான் “கிறிஸ்து” அல்லது “மேசியா.”<br>2. பேதுருக்கு கர்த்தர் அளித்த பதில் சபைக்கு அஸ்திவாரமாய் அமைகிறது. |
| **அறிமுகப்படுத்துங்கள்** | வாழ்க்கைப் பயணத்தைப் பற்றி பேசுங்கள். வாழ்க்கையும் ஒரு பயணத்தைப் போன்றதுதான் என்பதை விளக்குங்கள். நாம் பிறக்கும் போது அது தொடங்குகிறது, பயணத்தின் முடிவாகிய மரணம் வரை தொடர்ந்து பின் முடிவடைகிறது. | இயேசு உண்மையில் யார் என்பதுதான் மக்கள் எதிர்கொள்ளும் மிகப்பெரிய கேள்விகளில் ஒன்று, இந்த உண்மையைப் பற்றி பேசுங்கள்.<br>அவருடைய காலத்தில் மக்கள், இயேசு யார் என்பதைக் குறித்து விளக்க வித்தியாசமான பதில்களை சொன்னார்கள். பின்னர் இயேசு தன்னை யார் என்று சீஷர்கள் நினைக்கிறார்கள் என்று சீஷர்களிடம் கேட்டார். |
| **முடியுங்கள்** | **பைபிள் கதையைக் கூறுங்கள்**<br>**கருத்துப்பரிமாறிக்கொண்டு விளக்குங்கள்:**<br>1. இயேசு ஒரு பெரிய அற்புதத்தை செய்த பிறகு கலிலேயா கடலின் அக்கரைக்குப் போகும்படி சீஷர்களை அனுப்பியிருந்தார்.<br>2. அவர் ஜெபம்பண்ண ஒரு மலையின் மேல் ஏறினார்.<br>3. சீஷர்கள் ஒரு புயலில் சிக்கியிருந்தனர்.<br>4. அதை அறிந்திருந்த இயேசு கடல்மீது நடந்து அவர்களிடத்தில் வந்தார்.<br>5. இயேசுவினிடத்தில் வர அனுமதிக்கும்படி பேதுரு கேட்கிறார், கடல்மீது நடக்கிறார்.<br>6. பேதுரு மூழ்கத் தொடங்கி இயேசுவை நோக்கி காப்பாற்றும்படி கதறுகிறார் இயேசு அவரைக் காப்பாற்றுகிறார்.<br>7. இயேசுவில் விசுவாசம் வைக்கவேண்டியதின் முக்கியத்துவத்தை விளக்குங்கள்.<br>8. இயேசுவை நாம் விசுவாசிக்கும் போது அவர் எவ்வாறு நமது வாழ்க்கையில் ஏற்படும் புயல்களில் உதவி செய்கிறார் என்பதை விளக்குங்கள்.<br>9. கடினமான காலங்களில் இயேசுவை நம்புவதின் முக்கியத்துவத்தைப் பற்றி சிந்தித்துப்பாருங்கள்.<br>**முக்கியமான வசனத்தை விளக்கிக்காட்டி, மாணவர்கள் அவற்றை கற்றுக்கொள்ள ஊக்குவியுங்கள்.**<br>**பாடம் 3ஐ முடியுங்கள்.**<br>**காண்பியுங்கள்: FBI - இயேசு கடல்மீது நடத்தல். (மி)** | **பைபிள் கதையைக் கூறுங்கள்**<br>**கருத்துப்பரிமாறிக்கொண்டு விளக்குங்கள்:**<br>1. இயேசு தான் சந்தித்த வடகோடி பகுதியில் இருக்கிறார். (இதை வரைபடத்தில் இதைப் பாருங்கள்.)<br>2. ஜனங்கள் என்னை யார் என்று சொல்லுகிறார்கள் என்று கேட்கிறார்- அதற்கு நான்கு விதமான பதில்களை கவனியுங்கள்.<br>3. பிறகு அவர் பேதுருவிடம் நீ என்னை யார் என்று சொல்லுகிறாய் என்று கேட்டதற்கு பேதுரு அளித்த பதிலைப் பாருங்கள். அது விசுவாசிகளுக்கு என்ன அர்த்தத்தைத் தருகிறது<br>4. தன்னை ஜீவனுள்ள தேவனுடைய குமாரன் என்று விசுவாசிக்கிறவர்களே சபையாக மாறுகிறார்கள் என்பதை பின்னர் இயேசு விளக்குகிறார். சபை என்பது ஒரு கட்டிடம் அல்ல, அது விசுவாசிக்கும் மக்களின் கூட்டம்.<br>5. இயேசு தாம் மரிக்கப்போவதையும் பின்னர் உயிரோடு எழுப்பப்பட போவதையும் விவரிக்கிறார்.<br>6. அது ஒருபோதும் சம்பவிக்கக்கூடாது என்று பேதுரு சொல்கிறார். அதற்கு இயேசு தந்த பதிலை சிந்தித்துப் பாருங்கள்.<br>**முக்கியமான வசனத்தை விளக்கிக்காட்டி, மாணவர்கள் அவற்றை கற்றுக்கொள்ள ஊக்குவியுங்கள்.**<br>**வேத ஆராய்ச்சி 3ஐ முடியுங்கள்.**<br>**காண்பியுங்கள்: FBI - பொருத்தமான FBI கதை இல்லை.. (மி)** |
| **மீள்பார்வை** | **மாணவர்களுக்கான கேள்விகள்:**<br>1. நமது பயங்களை மேற்கொள்ள இயேசு எவ்வாறு உதவிசெய்கிறார்?<br>2. இளைஞர்கள் சந்திக்கும் சில பொதுவான பிரச்சனைகளை கூறுக.<br>3. இந்த பகுதி உங்களுக்கு எவ்வாறு உதவக்கூடும்? | **மாணவர்களுக்கான கேள்விகள்:**<br>1. நாம் இயேசுவுக்குரியவர்கள் என்று எவ்வாறு நிச்சயிப்பது?<br>2. நாம் சபையின் ஓர் அங்கமாவது எப்படி?<br>3. சபையின் அங்கமாயிருப்பதின் நன்மைகள் என்ன? |
| **வாழ்ந்துகாட்டுங்கள்** | **இந்தப் பாடம் நமக்குவிடும் சவால் என்ன?**<br>1. அட்டைகளில் பிரச்சனைகளை எழுதிவைத்து, சுவரில் காட்சிக்காக வைத்து, பின்னர் அவைகளை சிலுவையில் அறையுங்கள்.<br>2. ஒரு வானவில்லை வரைந்து அதன் மீது ஒரு பைபிள் வாக்குத்தத்தை எழுதுங்கள். | **இந்தப் பாடம் நமக்குவிடும் சவால் என்ன?**<br>1. உங்களது சபைக்காக நன்றிசெலுத்தும் தனிப்பட்ட ஜெபங்களை எழுதுங்கள்.<br>2. இயேசுவின் சுவிசேஷத்தை நீங்கள் பகிர்ந்துகொள்ளப்போகும் நபர் ஒருவரைப் பற்றி யோசியுங்கள். |

| | A3 - நிலை 3<br>பாடம் 4 – பேதுருவின் வாழ்க்கை<br>தலைப்பு – இயேசு யார்? | A3 - நிலை 4<br>ஆராய்ச்சி 4 – பேதுருவின் வாழ்க்கை<br>தலைப்பு – மலையின்மேல் |
|---|---|---|
| | **வேதப்பகுதி:** **மத்தேயு** 16:13–23<br>**முக்கிய வசனம்:** **ரோமர்** 10:9<br>**நாம் கற்றுக்கொள்வது:**<br>1. தேவனுடைய குமாரனாகிய இயேசுவைப் பற்றி நாம் சாட்சிக் கூற வேண்டும்.<br>2. இயேசு சபைக்குத் தலையாய் இருக்கிறார். | **வேதப்பகுதி:** **மத்தேயு** 17:1–13<br>**முக்கிய வசனம்:** 2 **பேதுரு** 1:16–18<br>**நாம் கற்றுக்கொள்வது:**<br>1. இயேசு தேவனுடைய குமாரனாக இருப்பதால் ஒப்பற்றவராய் இருக்கிறார்.<br>2. இயேசு மோசேயைவிட அல்லது எலியாவைவிட பெரியவர். |
| **அறிமுகப்படுத்துங்கள்** | புகழ்பெற்ற நபர்களைப் பற்றிப் பேசவும். அவர்களை ஏன் புகழ்பெற்றவர்களாகக் மக்கள் கருதுகிறார்கள்? என்பதைக் குறித்தும் பேசுங்கள். இயேசு புகழ்பெற்றவராக இருந்தார், அப்படியிருந்தும், மக்கள் பலருக்கும் உண்மையில் அவர் யார் என்பது தெரியாமல் இருந்தது. | மாணவர்கள் ஒருபோதும் மறக்கமுடியாத அனுபவங்களைப் பற்றி பேசுங்கள்.<br>இயேசுவை அவரது உண்மையான மகிமையோடு மலையில் பார்த்த இந்த அனுபவத்தை அந்த மூன்று சீடர்களும் ஒருபோதும் மறக்கமாட்டார்கள் என்பதை விளக்குங்கள். |
| **முடியுங்கள்** | **பைபிள் கதையைக் கூறுங்கள்**<br>**கருத்துப்பரிமாறிக்கொண்டு விளக்குங்கள்:**<br>1. ஜனங்கள் என்னை யார் என்று சொல்லுகிறார்கள் என்று கேட்கிறார்– அதற்கு நான்கு விதமான பதில்களை கவனியுங்கள்.<br>2. பிறகு அவர் பேதுருவிடம் நீ என்னை யார் என்று சொல்லுகிறாய் என்று கேட்டதற்கு பேதுரு அளித்த பதிலைப் பாருங்கள். அது விசுவாசிகளுக்கு என்ன அர்த்தத்தைத் தருகிறது.<br>3. தன்னை ஜீவனுள்ள தேவனுடைய குமாரன் என்று விசுவாசிக்கிறவர்களே சபையாக மாறுகிறார்கள் என்பதை பின்னர் இயேசு விளக்குகிறார். சபை என்பது ஒரு கட்டிடம் அல்ல, அது விசுவாசிக்கும் மக்களின் கூட்டம்.<br>4. இயேசு தாம் மரிக்கப்போவதையும் பின்னர் உயிரோடு எழுப்பப்பட போவதையும் விவரிக்கிறார்.<br>5. அது ஒருபோதும் சம்பவிக்கக்கூடாது என்று பேதுரு சொல்கிறார். அதற்கு இயேசு தந்த பதிலை சிந்தித்துப் பாருங்கள்.<br>**முக்கியமான வசனத்தை விளக்கிக்காட்டி, மாணவர்கள் அவற்றை கற்றுக்கொள்ள ஊக்குவியுங்கள்.**<br>**பாடம் 4ஐ முடியுங்கள்.**<br>**காண்பியுங்கள்: FBI – பொருத்தமான FBI கதை இல்லை. (மி)** | **பைபிள் கதையைக் கூறுங்கள்**<br>**கருத்துப்பரிமாறிக்கொண்டு விளக்குங்கள்:**<br>1. இயேசு தம்முடன் மலையின்மீது இருக்க மூன்று சீடர்களை தேர்ந்தெடுக்கிறார்.<br>2. இயேசு தமது முழு மகிமையோடும் மாட்சிமையோடும் மோசே மற்றும் எலியாவின்கூட காணப்படுகிறார்.<br>3. பேதுரு அங்கேயே தங்கியிருந்து மூன்று கூடாரங்களை போட விரும்புகிறார். இயேசு எல்லாரையும் விட மிக உன்னதமானவை என்பதை தேவன் பரலோகத்திலிருந்து பேசி ஞாபகப்படுத்துகிறார்.<br>4. சீஷர்கள் பயந்துபோனார்கள், ஆனால் இயேசு என்ன சம்பவித்தது என்பதைக் கூறி அவர்களை தேற்றுகிறார்.<br>5. இயேசு ஒப்பில்லாதவர், அற்புதமானவர் என்பதை விவரிக்க.<br>6. நமது வாழ்வில் அவருக்கு முதலிடம் கொடுக்க வேண்டியதின் முக்கியத்துவத்தை யோசித்துப்பாருங்கள்.<br>**முக்கியமான வசனத்தை விளக்கிக்காட்டி, மாணவர்கள் அவற்றை கற்றுக்கொள்ள ஊக்குவியுங்கள்.**<br>**வேத ஆராய்ச்சி 4ஐ முடியுங்கள்.**<br>**காண்பியுங்கள்: FBI – இயேசு மறுரூபமாதல் . (மி)** |
| **மீள்பார்வை** | **மாணவர்களுக்கான கேள்விகள்:**<br>1. பேதுருவின் வார்த்தைகள் (வசனம் 22) ஏன் மிகவும் தவறானவையாக இருக்கின்றன?<br>2. தேவனை இன்னும் நல்ல முறையில் சேவிக்க சபை நமக்கு எவ்வாறு உதவ முடியும்?<br>3. இயேசு உண்மையில் யார் என்பதை மற்றவர்களுக்கு எடுத்துரைப்பதன் மூலம் நாம் எவ்வாறு சிறந்த சாட்சிகளாகத் திகழமுடியும்? | **மாணவர்களுக்கான கேள்விகள்:**<br>1. இயேசு மறுரூபமானதை பேதுரு கண்டது ஏன் முக்கியத்துவம் வாய்ந்தது?<br>2. இந்த அனுபவத்திலிருந்து சீடர்கள் என்ன கற்றுக்கொண்டார்கள் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?<br>3. நம்முடைய வாழ்க்கையில் எவ்வாறு இயேசுக்கு முதலிடம் கொடுக்கலாம்? |
| **வாழ்ந்துகாட்டுங்கள்** | 1. சுவரில் காட்சிக்காக ஒரு சர்ச்சின் தோற்றத்தை வரைந்து, அதின் உள்ளே உள்ள ஒரு குடும்பமாய் இருப்பதினால் விளையும் நன்மைகளை எழுதுக.<br>2. நீங்கள் சாட்சி சொல்லப்போகும் ஒரு நபரைக் குறித்துவைத்து அதை உங்களின் நிரந்தர ஜெபத்தில் நினைவுகூருக. | 1. இயேசுக்கு முதலிடம் கொடுப்பதிலிருந்து நம்மை திசைத்திருப்புகிற காரியங்களின் ஒரு பட்டியலைத் தயாரிக்கவும்.<br>2. **5ம் வசனம்** 'அவருக்குச் செவிகொடுங்கள்' என்று கூறுகிறது. தேவன் உங்களிடம் பேசுவதைக் கேட்பதற்காக நேரத்தை இந்த வாரம் ஒதுக்கிவையுங்கள். |

| | A4 - நிலை 3<br>பாடம் 1 - பேதுருவின் வாழ்க்கை<br>தலைப்பு - அன்பிறகோர் உதாரணம் | A4 - நிலை 4<br>ஆராய்ச்சி 1 - பேதுருவின் வாழ்க்கை<br>தலைப்பு - தாழ்மையின் பாடங்கள் |
|---|---|---|
| | **வேதப்பகுதி: யோவான் 13:1-17**<br>**முக்கிய வசனம்: யோவான் 13:15**<br>**நாம் கற்றுக்கொள்வது:**<br>1. இயேசு ஒரு உண்மையான ஊழியர்.<br>2. நாமும் மற்றவர்களுக்கு ஊழியம் செய்ய வேண்டும். | **வேதப்பகுதி: யோவான் 13:1-17**<br>**முக்கிய வசனம்: யோவான் 13:15**<br>**நாம் கற்றுக்கொள்வது:**<br>1. இயேசு ஒரு தாழ்மையான ஊழியனாக இருந்தார், தேவனுடைய சித்தத்திற்குக் கீழ்ப்படிந்தார்.<br>2. கிறிஸ்தவ ஊழியத்தில் மனத்தாழ்மையே மையமாய் விளங்குகிறது. |
| அறிமுகப்படுத்துங்கள் | இயேசு வாழ்ந்த நாடு வெப்பமான மற்றும் வறண்ட நாடாக இருந்தது. (மாணவர்கள் வாழும் நாடுகளோடு இதனை ஒப்பிடுக) மக்கள் தூசி நிறைந்த சாலைகளில் நடைந்தார்கள். மேலும் அவர்கள் ஒரு வீட்டிற்கு வரும்போது, அவர்கள் சாப்பிடுவதற்கு முன்பு தங்கள் கால்களை கழுவிவிட்டார்களா என்பதை வீட்டின் உரிமையாளர் உறுதிசெய்துகொள்வார். (மாணவர்கள் வசிக்கும் நாட்டில் ஒருவேளை ஒரு வீட்டிற்குள் நுழையும்போது ஏற்படும் கலாச்சார பிரச்சினைகள் பற்றி சிந்தித்துப்பாருங்கள்) | கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவ வாழ்க்கையின் முக்கியமான சத்தியங்களை பெரும்பாலும் உவமைகள் மூலம் விளக்கினார். இந்த சந்தர்ப்பத்தில் அவர் தனது போதனைகளுக்கு செயல் வடிவம் கொடுக்கும் விதத்தில் செயல்படுவதைத் தேர்ந்தெடுத்தால் இது<br>"நடைமுறை உவமை" என்று அழைக்கப்படுகிறது. |
| முடியுங்கள் | **பைபிள் கதையைக் கூறுங்கள்**<br>**கருத்துப்பரிமாறிக்கொண்டு விளக்குங்கள்:**<br>1. இயேசு சிலுவையில் அறையப்படுவதற்கு முந்தின தினம் தன்னுடைய சீடர்களோடு கடைசி உணவை அருந்தினார்.<br>2. வழக்கமான பழக்கத்தின்படி விருந்துக்குமுன் கால்களை கழுவவேண்டும், ஆனால் சீஷர்கள் யாரும் அதைப்பற்றி கவலைப்படவில்லை. இயேசு அதை செய்கிறார். **(வசனம் 4-5)**<br>3. இயேசு தமது கால்களை கழுவக் கூடாது என பேதுரு சொன்னார்.<br>4. தான் அப்படி செய்ய வேண்டி இருக்கிறது, இல்லாவிட்டால் தன்னோடு பேதுருவுக்கு எந்தப் பங்கும் இல்லை என்று இயேசு விளக்கிக் கூறினார். **(வசனம் 8)**<br>5. நாம் எல்லோரும் பாவத்தினால் கறைப்பட்டு இருக்கிறோம். நாம் கழுவப்பட வேண்டியது அல்லது பாவத்திலிருந்து சுத்திகரிக்கப்பட வேண்டியது அவசியம் என்றும், அதை அவர் மட்டுமே செய்ய முடியும். ஏனென்றால் அவர் நமக்காக சிலுவையில் மரித்தார். இதைத்தான் கால்களைக் கழுவும் இந்த நிகழ்ச்சியிலிருந்து இயேசு நமக்கு எடுத்துக் காண்பிக்கிறார்.<br>6. மற்றவர்களுக்காக நாம் எப்படிப்பட்ட தாழ்ந்த வேலையையும் செய்யத் தயாராக இருக்க வேண்டும் என்பதை இயேசு இதன்மூலம் எடுத்துக்காட்டுகிறார்.<br>7. ஒருவருக்கொருவர் கால்களைக் கழுவுவதன் முக்கியத்துவத்தை விளக்குங்கள்.<br>**முக்கியமான வசனத்தை விளக்கிக்காட்டி, மாணவர்கள் அவற்றை கற்றுக்கொள்ள ஊக்குவியுங்கள்.**<br>**பாடம் 1ஐ முடியுங்கள்.**<br>**காண்பியுங்கள்: FBI - இயேசு சீடர்களின் பாதங்களைக் கழுவுகிறார் (றி)** | **பைபிள் கதையைக் கூறுங்கள்**<br>**கருத்துப்பரிமாறிக்கொண்டு விளக்குங்கள்:**<br>1. இயேசு தமது சீடர்களோடு பஸ்காவை கொண்டாடி முடித்துவிட்டு, இஸ்ரவேலர் எகிப்தைவிட்டுப் புறப்பட்டபோது சம்பவித்ததையெல்லாம் நினைவுகூருகிறார்.<br>2. இந்த உணவு வேளைகளில் தான் இயேசு இரண்டு முக்கியமான படிப்பினைகளை தானே செய்துகாட்டிக் கற்றுத்தந்தார்.<br>3. முதலாவது ஒரு அடிமையின் இடத்தை தான் எடுத்துக்கொண்டு அவர்களுடைய பாதங்களைக் கழுவினார். எவ்வளவு தாழ்ந்த வேலையையும் செய்ய தான் ஆயத்தம் என்பதை காண்பிக்கவும் அவர்களுக்கு ஒரு முன்னுதாரணத்தை காண்பிக்கவும் இதைச் செய்தார். (முக்கியமான வசனத்தை கவனிக்க)<br>4. மேலும் நாம் எல்லோரும் பாவத்திலிருந்து கழுவப்பட வேண்டியதன் அவசியத்தை அவர் காண்பித்தார். (குளிப்பதை ஒரு உதாரணமாகக் காண்பிக்கிறார் **(வசனம் 10)**. ஆனால் நாம் கிறிஸ்தவர் ஆகிவிட்டால் தினந்தோறும் நம்முடைய பாதங்களை கழுவ வேண்டும், ஏனெனில் நாம் அனுதினமும் பாவம் செய்வதால் அவருடைய மன்னிப்பு நமக்குத் தேவை.<br>5. பேதுருவுக்குக் கர்த்தர் என்ன சொன்னார் என்பதை கவனிப்பது மாணவர்களுக்கு இதை புரிந்துகொள்ளவதில் உதவியாய் அமையும்.<br>6. இரண்டாவதாக அவர் அப்பத்தையும் திராட்சரசத்தையும் எடுத்து, அப்பம் சிலுவையில் அறையப்படும் தமது சரீரத்தையும், திராட்சைரசம் சிலுவையில் சிந்தப்படப்போகிற தமது இரத்தத்தையும் குறிக்கிறது என விளக்கினார். **(லூக்கா 22:19-20ஐ பார்க்க)**<br>**முக்கியமான வசனத்தை விளக்கிக்காட்டி, மாணவர்கள் அவற்றை கற்றுக்கொள்ள ஊக்குவியுங்கள்.**<br>**வேத ஆராய்ச்சி 1ஐ முடியுங்கள்.**<br>**காண்பியுங்கள்: FBI - இயேசு சீடர்களின் பாதங்களைக் கழுவுகிறார் (றி)** |
| மீள்பார்வை | 1. அடுத்த வாரத்தில், நடைமுறையில் எந்தெந்த வழிகளில் கிறிஸ்தவர்கள் ஒருவருக்கொருவர் எவ்வாறு ஊழியம் செய்ய முடியும் என்பதனை கலந்தாலோசியுங்கள்.<br>2. அடுத்த வருடத்தில், சபைக்கு வெளியே இருக்கும் ஒரு குழுவிற்கு நீங்கள் எவ்வாறு நடைமுறையில் ஊழியம்செய்ய முடியும் என்பதை பற்றி யோசியுங்கள். | 1. இன்று நாம் மனத்தாழ்மையை நடைமுறையில் காண்பிக்க இருக்கும் வழிகளைக் குறித்து கலந்தாலோசியுங்கள்.<br>2. நம்முடைய வாழ்க்கையில் தேவனுக்கு முதலிடம் கொடுப்பதற்கான வழிகளைக் குறித்து யோசியுங்கள்.<br>3. தாழ்மையோடு ஊழியம் செய்ததில் பெயர்பெற்ற ஒரு கிறிஸ்தவரின் வாழ்க்கையை ஆராய்ந்து பாருங்கள். |
| வாழ்ந்துகாட்டுங்கள் | **இந்தப் பாடம் நமக்குவிடும் சவால் என்ன?**<br>1. இயேசு இந்த பூமியில் இருந்தபோது எவ்வாறு மற்றவர்களுக்கு சேவை செய்தார்?<br>2. நாம் கிறிஸ்தவர்களாக இருந்தபோதிலும் நாம் பாவம் செய்கிறோம் என்றும், அனுதினமும் அவரால் சுத்திகரிக்கப்படவும் அவரின் மன்னிப்பைப் பெற்றுக்கொள்ளவும் நாட வேண்டும் என்றும் இயேசு போதித்தார். | **இந்தப் பாடம் நமக்குவிடும் சவால் என்ன?**<br>1. இந்த சம்பவத்திலிருந்து பேதுரு என்ன பாடங்களைக் கற்றுக்கொண்டார்?<br>2. நமது பாவங்களிலிருந்து நாம் கழுவப்பட வேண்டும் என்பதின் அர்த்தம் என்ன? ஒவ்வொரு நாளும் கர்த்தரோடு நெருங்கி இருக்கவும் அவருடைய சித்தத்தை நமது வாழ்க்கையில் பின்பற்றவும் நாம் என்ன செய்ய வேண்டும்? |

| | A 4 – நிலை 3<br>பாடம் 2 – பேதுருவின் வாழ்க்கை<br>தலைப்பு – அவன் தனது கர்த்தரை மறுதலித்தல் | A 4 – நிலை 4<br>ஆராய்ச்சி 2 – பேதுருவின் வாழ்க்கை<br>தலைப்பு – உண்மையாயிருத்தலின் பாடம் |
|---|---|---|
| | **வேதப்பகுதி: லூக்கா 22:31-34, 54-62**<br>**முக்கிய வசனம்: லூக்கா 22:31-32**<br>**நாம் கற்றுக்கொள்வது:**<br>1. நாம் இயேசுவுக்கு சொந்தமானவர்கள் என சொல்வது கடினம்.<br>2. நாம் எப்பொழுதும் உண்மையைச் சொல்வதற்கு முயற்சி செய்ய வேண்டும். | **வேதப்பகுதி: லூக்கா 22:31-34, 39-62**<br>**முக்கிய வசனம்: லூக்கா 22:31-32**<br>**நாம் கற்றுக்கொள்வது:**<br>1. நாம் சுய நம்பிக்கையை தவிர்க்க வேண்டும், மாறாக இயேசுவை நம்பவேண்டும்.<br>2. பேதுருவைப் போலவே நாமும் நமது பாவத்திற்காக உண்மையில் மனம்வருந்த வேண்டும். |
| **அறிமுகப்படுத்துங்கள்** | மாணவர்கள் பொய்களைக் கூற விரும்பும் சூழ்நிலைகளைப் பற்றி,<br>அல்லது உண்மையை முழுவதும் சொல்லாத சூழ்நிலைகளைப் பற்றி, சிந்தித்துப் பாருங்கள். ஏன் சில நேரங்களில் நாம் உண்மையை சொல்ல மிகவும் பயப்படுகிறோம் என்பதை ஆராய்ந்து பாருங்கள். இதைப்போன்ற ஒரு சூழ்நிலையில் பேதுரு தன்னை தானே அகப்படுத்திக்கொண்டதை விளக்குங்கள். | சிறைச்சாலைக்குச் செல்லவேண்டிய சூழ்நிலை வந்தாலும் அல்லது மரிக்க வேண்டி வந்தாளும் தான் இயேசுவை ஒருபோதும் கைவிடுவதில்லை என்று பேதுரு பெருமை பாராட்டினார்.<br>**(லூக்கா 22:33)** வீழ்ச்சிக்கு முன்னால் பெருமை வரும் என்று நமக்குத் தெரியும்.<br>**(நீதிமொழிகள் 16:18)** பேதுருவுக்கோ, ஒரு பெரும் வீழ்ச்சிக்கு முன்னர் பெருமை வந்தது. |
| **முடியுங்கள்** | **பைபிள் கதையைக் கூறுங்கள்**<br>**கருத்துப்பரிமாறிக்கொண்டு விளக்குங்கள்:**<br>1. பேதுரு பிரதான ஆசாரியனுடைய வீடு வரைக்கும் இயேசுவைக் கைதுசெய்த கூட்டத்தைப் பின்தொடர்கிறார்<br>2 அந்த வீட்டின் முற்றத்தில் சிலரோடு சேர்ந்து அவர்கள் மத்தியில் அமர்ந்திருந்தார்.<br>3 அவர்களில் சிலர், நீ இயேசுவின் நண்பனா அல்லது இயேசுவைப் பின்பற்றியவர்களில் ஒருவனா என்று பேதுருவைக் கேட்டார்கள். அப்பொழுது பேதுரு நான் இயேசுவை அறியேன் என்று மூன்று தரம் பொய்யைச் சொன்னார்.<br>4. இயேசு பேதுருவை நோக்கினார் கோழி கூவியது, அப்பொழுது பேதுரு தான் செய்ததை உணர்ந்துகொண்டார். இயேசுவை தேவையான நேரத்தில் கைவிட்டதற்காகவும் தான் ஒரு வீரனாக இல்லாமல் கோழையாக மாறி விட்டேனே என்று சொல்லி அவர் வெளியே சென்று மிகவும் மனங்கசந்து அழுதார்.<br>**முக்கியமான வசனத்தை விளக்கிக்காட்டி, மாணவர்கள் அவற்றை கற்றுக்கொள்ள ஊக்குவியுங்கள்.**<br>**பாடம் 2ஐ முடியுங்கள்.**<br>**காண்பியுங்கள்: FBI – பேதுரு இயேசுவை மறுதலித்தல் (றி & மி)** | **பைபிள் கதையைக் கூறுங்கள்**<br>**கருத்துப்பரிமாறிக்கொண்டு விளக்குங்கள்:**<br>1. பேதுரு குழம்பமடைந்திருக்க வேண்டும். தனது மறுதலித்தலைப் பற்றி இயேசு ஏற்கெனவே சொல்லியிருந்தது பேதுருக்குத் தெரியும். **(வசனம் 22:34).**<br>ஆனால் இயேசுவுக்கு உதவி செய்யும் அளவுக்கு தான் மிகவும் பலசாலி என்று பேதுரு நினைத்தார்.<br>2. கஷ்டம் வந்தபோது உண்மையை சொல்வதற்கு அவர் மிகவும் பாடுபட்டார். உண்மையில் இயேசு சொல்லியிருந்தது போலவே அவரைப் பேதுரு மூன்று முறை மறுதலித்தார்.<br>3. தான் இயேசுவைக் கைவிட்டதினால் பேதுரு என்ன உணர்ந்திருப்பார் என்று சிந்தித்துப்பாருங்கள்.<br>4. பேதுருவினுடைய சோதனையின் தன்மையை கலந்தாலோசியுங்கள்.<br>5. நாம் எங்கு செல்கிறோம், யாருடன் கலந்திருக்கிறோம் எப்படி சிந்திக்கிறோம் என்பதின் முக்கியத்துவத்தை கலந்தாலோசியுங்கள்.<br>**முக்கியமான வசனத்தை விளக்கிக்காட்டி, மாணவர்கள் அவற்றை கற்றுக்கொள்ள ஊக்குவியுங்கள்.**<br>**வேத ஆராய்ச்சி 2ஐ முடியுங்கள்.**<br>**காண்பியுங்கள்: FBI – பேதுரு இயேசுவை மறுதலித்தல் (றி & மி)** |
| **மீள்பார்வை** | 1. நாம் இயேசுவுக்கு சொந்தமானவர்களாக ஆவதற்கு நமக்குத் கடினமாகத் தெரிகிற காரணங்களை பட்டியலிடுங்கள். பிறகு, அவைகளின்மீது ஒரு பைபிள் வாக்குத்தத்தை எழுதிவையுங்கள்.<br>2. பேதுரு இயேசுவை மறுதலித்துவிட்டார்; அவர் எப்போதாவது மன்னிக்கப்பட முடியுமா?<br>3. தாவீது தான் பத்சேபாளுடன் **(2 சாமுவேல்:11)** செய்த பாவத்தை **சங்கீதம் 51**ல் எவ்வாறு அறிக்கைசெய்தார், எவ்வாறு மீண்டும் பழைய நிலைக்கு கொண்டுவரப்பட்டார் என்று பாருங்கள். | 1. நல்ல நண்பர்களிடத்தில் நாம் எதிர்பார்க்கக்கூடிய நற்குணங்களைப் பட்டியலிடுக.<br>2. இந்த வாரத்தில் நீங்கள் இயேசுவுக்கு உண்மையாக நடந்துகொள்ளும் ஒரு வழியைக் குறிப்பிடுக.<br>3. என்ன நடக்கும் என்று பேதுருவை முன்னெச்சரிக்கை செய்தபோது, இயேசு சொன்னதின் அர்த்தம் என்ன என்று சிந்தித்துப் பாருங்கள். **(லூக்கா 22:32)** |
| **வாழ்ந்துகாட்டுங்கள்** | **இந்தப் பாடம் நமக்குவிடும் சவால் என்ன?**<br>1. தாங்கள் இயேசுவுக்குரியர்வர்கள் என்று சொல்வதற்கு சில நேரங்களில் கிறிஸ்தவர்களுக்கு கஷ்டமாக இருக்கிறது, ஏன்?<br>2. சத்தியத்தை சொல்லாதபடி நம்மைத் தடுப்பது எது? | **இந்தப் பாடம் நமக்குவிடும் சவால் என்ன?**<br>1. நாம் நமது பாவங்களுக்காக உண்மையில் மனஸ்தாபப்படுகிறோம் என்பதை எவ்வாறு வெளியில் காட்டுவது?<br>2. நிரந்தரமாக எப்படிப்பட்ட நண்பர்களோடு கூடியிருக்க வேண்டும் என்பதை நாம் எப்படித் தீர்மானிப்பது? |

| | A 4 - நிலை 3<br>பாடம் 3 - பேதுருவின் வாழ்க்கை<br>தலைப்பு - கர்த்தராகிய இயேசு மரிக்கிறார் | A 4 - நிலை 4<br>ஆராய்ச்சி 3 - பேதுருவின் வாழ்க்கை<br>தலைப்பு - துக்கத்திலும் சந்தோஷத்திலுமுள்ள பாடங்கள் |
|---|---|---|
| | **வேதப்பகுதி:** மாற்கு 15:22-40<br>**முக்கிய வசனம்:** கலாத்தியர் 2:20<br>**நாம் கற்றுக்கொள்வது:**<br>1. இயேசு பாவமற்றவராகவும் பரிபூரணராகவும் இருந்தார்.<br>2. நமக்காக இயேசு சிலுவையில் மரணத்திற்காக நாம் நன்றியுள்ளவர்களாய் இருக்க வேண்டும். | **வேதப்பகுதி:** லூக்கா 24:1-12 & 33-49<br>**முக்கிய வசனம்:** லூக்கா 24: 46-47<br>**நாம் கற்றுக்கொள்வது:**<br>1. நாம் இரட்சிக்கப்படும்படி இயேசு நம் பாவங்களுக்கான தண்டனையை ஏற்றுக்கொண்டார்.<br>2. இயேசு நமக்கு பாவமன்னிப்பையும் நித்திய ஜீவனையும் தருகிறார். |
| அறிமுகப்படுத்துங்கள் | பேதுருவைப் போல, யாரையாவது கைவிட்டால், நீங்கள் என்ன செய்வீர்கள் என்று மாணவர்களிடம் கேளுங்கள். பேதுரு என்ன செய்ய முயன்றிருப்பார், அது எவ்வாறு சாத்தியற்றதாய் இருந்தது என்பதை யோசித்துப் பாருங்கள். | இயேசு சிலுவையில் இருந்தபோது பேதுரு என்ன செய்தாரென்று நமக்கு உண்மையில் தெரியாது, ஆனால் ஈஸ்டர் ஞாயிறு காலை அவர் கல்லறைக்கு சென்றார் என்று நமக்குத் தெரியும். அங்கே அவர் உண்மையில் இயேசுவை சந்தித்தார் என்று பைபிள் கூறுகிறது **(34ம் வசனத்தைக் காண்க)** என்பதை விளக்குங்கள் |
| முடியுங்கள் | **பைபிள் கதையைக் கூறுங்கள்**<br>**கருத்துப்பரிமாறிக்கொண்டு விளக்குங்கள்:**<br>1. சிலுவையில் அறையப்படும்படிக்கு இயேசு நகரத்திற்கு எவ்வாறு வெளியே கொண்டு செல்லப்பட்டார் எனபதை விவரிக்கவும்.<br>2. அவர் எவ்வாறு நடத்தப்பட்டார், அவரை சுற்றிலும் இருந்தவர்கள் அவரை எவ்வாறு நிந்தித்துக் கேலிசெய்தனர் என்பதை விவரியுங்கள்.<br>3. மூன்று மணி நேரம் காரிருள் ஏற்பட்டது அதிசயமானது. தமது குமாரன் நமது பாவங்களுக்காகத் தண்டிக்கப்படுவதை தேவனால் கண்டு சகிக்க முடியவில்லை என்பதை எடுத்துக் காட்டுகிறது என்பதை விளக்குங்கள்.<br>4. அந்த நேரத்தில் இயேசு நமக்கு வரவேண்டிய பாவத்தின் தண்டனையை அவர் ஏற்று சுமந்தார்.<br>5. இயேசு உண்மையில் மரித்தபோது என்ன சம்பவித்தது என்பதை விவரியுங்கள். **(வசனங்கள் 38-39)**<br>6. சிலுவையின் அருகே நின்று கொண்டிருந்த நூற்றுக்கு அதிபதி சொன்ன பதிலை விவரியுங்கள்.<br>**முக்கியமான வசனத்தை விளக்கிக்காட்டி, மாணவர்கள் அவற்றை கற்றுக்கொள்ள ஊக்குவியுங்கள்.**<br>**பாடம் 3ஐ முடியுங்கள்.**<br>**காண்பியுங்கள்: FBI - இயேசு சிலுவையில் அறையப்பட்டு மரிக்கிறார் (றி & மி)** | **பைபிள் கதையைக் கூறுங்கள்**<br>**கருத்துப்பரிமாறிக்கொண்டு விளக்குங்கள்:**<br>1. ஈஸ்டர் காலை அந்தப் பெண் எப்படி கல்லறைக்குச் சென்றார் என்பதை விவரியுங்கள் 2. அவர்கள் என்ன கண்டார்கள் அவர்களுக்கு சொல்லப்பட்ட செய்தி என்ன என்பதை விவரியுங்கள்.<br>3. பேதுரு அந்தச் செய்தியை கேட்டபோது என்ன செய்தார் என்பதை விவரியுங்கள். **(வசனம் 12)**<br>4. இயேசு உயிரோடு இருப்பதை நம்புவது சிலருக்கு மிகவும் கஷ்டமாக இருந்தது ஏன் என்பதை கலந்தாலோசியுங்கள்.<br>5. இயேசு அவர்களுக்கு தரிசனமானபோது என்ன நடந்தது என்பதை விவரியுங்கள்.<br>6. தங்களுடைய உயிர்த்தெழுந்த கர்த்தரைக் கண்டபோது பேதுருவும் அவருடைய நண்பர்களும் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார்கள்.<br>7. இயேசு தமது பாடுகளை எவ்வாறு விவரித்தார்? **(வசனங்கள் 45-47)**<br>**முக்கியமான வசனத்தை விளக்கிக்காட்டி, மாணவர்கள் அவற்றை கற்றுக்கொள்ள ஊக்குவியுங்கள்.**<br>**வேத ஆராய்ச்சி 3ஐ முடியுங்கள்.**<br>**காண்பியுங்கள்: FBI - இயேசு மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்து உயிரோடிருக்கிறார் (றி & மி)** |
| மீள்பார்வை | 1. இயேசு சிலுவையில் மரித்ததின் முக்கியத்துவம், முக்கிய வசனத்தின் அர்த்தம், இயேசு ஒவ்வொரு தனிநபருக்காகவும் மரித்தார் என்ற உண்மை - இவற்றை சிந்தித்துப் பாருங்கள்.<br>2. இயேசு சிலுவையில் மரித்ததினால் விளைந்த நன்மைகளை ஆராய கலந்துபேசுங்கள். இயேசுவின் பலியை ஞாபகப்படுத்தும் விதத்தில் எங்கே ஒரு சிலுவையை வைக்கலாம் என்று யோசித்துப்பாருங்கள். | 1. நமது பாவங்களுக்காக நாம் மனம்வருந்துகிறோம் என்பதனை நடைமுறையில் வெளிப்படுத்தும் வழிகளைப் பற்றி கலந்தாலோசியுங்கள்.<br>2. மரணத்தின்மேல் இயேசுவின் வெற்றி, அவரின் உயிர்த்தெழுதல் ஆகியவற்றைக் கொண்டாடும் விதத்தில் ஏற்ற வார்த்தைகளை பயன்படுத்தி ஒரு பாட்டு எழுதுங்கள். |
| வாழ்ந்துகாட்டுங்கள் | **இந்தப் பாடம் நமக்குவிடும் சவால் என்ன?**<br>1. இயேசு சிலுவையில் ஏன் மரித்தார் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?<br>2. இயேசு சிலுவையில் மரித்ததற்கு நாம் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம் என்பதை எவ்வாறு காண்பிக்கலாம்? | **இந்தப் பாடம் நமக்குவிடும் சவால் என்ன?**<br>1. இயேசு உயிரோடிருக்கிறார் என்று நாம் எவ்வாறு நிச்சயத்தோடு இருக்கலாம்?<br>2. நித்திய ஜீவனை உடையவர்களாய் இருப்பது என்றால் என்ன அர்த்தம்?<br>3. நாம் உண்மையில் மன்னிக்கப்பட்டிருக்கிறோம் என்பதை எவ்வாறு அறிந்துகொள்ள முடியும்? |

| | A 4 - நிலை 3<br>பாடம்4 - பேதுருவின் வாழ்க்கை<br>தலைப்பு - நீ என்னில் அன்பாயிருக்கிறாயா? | A 4 - நிலை 4<br>ஆராய்ச்சி 4 - பேதுருவின் வாழ்க்கை<br>தலைப்பு - அன்பின் பாடங்கள் |
|---|---|---|
| | **வேதப்பகுதி:** யோவான் 21:1-17<br>**முக்கிய வசனம்:** யோவான் 21:17<br>**நாம் கற்றுக்கொள்வது:**<br>1. பேதுருவைப் போல நாமும் இயேசுவை கைவிட்டாலும், நம்மையும் மன்னிப்பார்.<br>2. நாம் மற்றவர்களுக்கு போதிக்க வேண்டும் என்றும், ஒரு மேய்ப்பன் தனது ஆடுகளை கவனித்துக்கொள்கிறதுபோல அவர்களை கவனிக்கவேண்டும் இயேசு விரும்புகிறார். | **வேதப்பகுதி:** யோவான் 21:1-20<br>**முக்கிய வசனம்:**யோவான் 21:15<br>**நாம் கற்றுக்கொள்வது:**<br>1. நமக்கு ஒரு புதிய ஆரம்பத்தைக் கொடுக்க இயேசு ஆயத்தமாக இருக்கிறார்.<br>2. நம் வாழ்வில் தோல்விகள் இருந்தபோதிலும், இயேசு நம்மை குறைவில்லாமல் நேசிக்கிறார். |
| அறிமுகப்படுத்துங்கள் | இயேசு மரித்த பிறகு பேதுரு மறுபடியும் தனது வாழ்க்கையை மீண்டும் தொடங்க முயற்சிக்கிறார். அவர் தனது சொந்த இடத்திற்கு சென்று அவரது பழைய வேலைக்கு திரும்புகிறார், கலிலேயாக் கடலில் மீன்பிடிக்க செல்கிறார். | கர்த்தராகிய இயேசு தான் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்த பிறகு, தமது சீடர்களுக்குப் பல சந்தர்ப்பங்களில் காட்சியளித்து, தான் உயிரோடிருப்பதை நிரூபித்தார்.<br>**(1கொரிந்தியர் 15: 3-8)** |
| முடியுங்கள் | **பைபிள் கதையைக் கூறுங்கள்**<br>**கருத்துப்பரிமாறிக்கொண்டு விளக்குங்கள்:**<br>1. இரவு முழுவதும் மீன்பிடிக்கச் சென்றும் சீஷர்களுக்கு ஒன்றும் அகப்படவில்லை. அவர்கள் பசியோடும் சோர்வோடும் ஏமாற்றத்தோடும் கரைக்குத் திரும்பினார்கள்.<br>2. கர்த்தராகிய இயேசு கரையில் நின்று அவர்களை அழைத்தார், ஆனால் அவர்கள் அவரை அடையாளம் கண்டுகொள்ளவில்லை. அவர்களிடத்தில் ஏதாவது மீன் இருக்கிறதா என்று கேட்டார்.<br>3. அவர்கள் அவருடைய கட்டளைக்குக் கீழ்ப்படிந்து படகின் மறுபக்கத்தில் வலையை வீசிபோது பெருந்திரளான மீன்களைப் பிடித்தார்கள்.<br>4. அவர் இயேசு என்பதை யோவான் அறிந்துகொள்கிறார். பேதுரு நீந்திப்போய் அவரை சந்திக்கிறார்.<br>5. இயேசு அவர்கள் அனைவரையும் காலை உணவுக்காக அழைக்கிறார். அவர் பேதுருவை நோக்கி, நீ என் மீது அன்பாய் இருக்கிறாயா என்று கேட்கிறார்.<br>6. ஆம் என்று பேதுரு பதில் சொல்கிறார். இயேசு தன்னைப் பின்பற்றுகிறவர்களை கவனித்துக்கொள்ளும் பொறுப்பை பேதுருவுக்குக் கொடுக்கிறார். (ஆடுகள்)<br>7. இயேசு ஏன் ஒரே கேள்வியை மூன்று முறை பேதுருவினிடத்தில் கேட்கிறார் என்பதை விவரியுங்கள்.<br>8. கர்த்தர் எவ்வாறு பேதுருவை மன்னித்து, மாபெரும் பொறுப்பை வழங்கியிருக்க வேண்டும் என்பதை சிந்தியுங்கள்.<br>**முக்கியமான வசனத்தை விளக்கிக்காட்டி, மாணவர்கள் அவற்றை கற்றுக்கொள்ள ஊக்குவியுங்கள்.**<br>**பாடம் 4ஐ முடியுங்கள்.**<br>**காண்பியுங்கள்: FBI - இயேசு கலிலேயாவில் சீடர்களுக்கு தரிசனமாகிறார், மேலும் இயேசு பேதுருவைக் கேள்வி கேட்கிறார் (றி)** | **பைபிள் கதையைக் கூறுங்கள்**<br>**கருத்துப்பரிமாறிக்கொண்டு விளக்குங்கள்:**<br>1. கலிலேயா கடலில் மீன்பிடிக்கச் சென்றிருந்த ஏழு சீஷர்களுக்கு இயேசு காட்சி கொடுத்தது, அவர் உயிர்த்தெழுந்தப்பின் காட்சி கொடுத்த சம்பவங்களில் ஒன்றாகும்.<br>2. அவர்களைப் பெரிய அளவில் மீன்பிடிக்கச் செய்து தாம் யார் என்பதை நிரூபிக்கிறார்.<br>3. சீஷர்கள் கரையிலே கர்த்தரோடு கூட காலையுணவை பகிர்ந்துகொண்டார்கள்.<br>4. தன்னுடைய வாழ்க்கையின் முக்கியமான நேரங்களில் பேதுரு தன்னை பலமுறை கைவிட்டபடியால் உண்மையாகவே அவர் மனம்திரும்பிவிட்டாரா என்பதை உறுதிசெய்துகொள்ள கர்த்தராகிய இயேசு கிறிஸ்து விரும்பினார்.<br>5. கர்த்தர் மீது வைத்திருக்கும் அன்பை பேதுரு மூன்று முறை மற்றவர்களுக்கு முன்பாக அறிக்கைசெய்கிறார்.<br>6. புதிய சபையில் கர்த்தரைப் பின்பற்றுபவர்களைக் கவனித்துக் கொள்வதற்காக பேதுருவை ஒரு மேய்ப்பனாக ஆகப் போகிறார். கர்த்தரை சேவிக்கும்படி அவருக்கு இரண்டாவதாக ஒரு வாய்ப்பு வழங்கப்பட்டது<br>7. நம்முடைய தோல்விகளையும் பொருட்படுத்தாமல், தேவன் எவ்வாறு நம்மை குறைவில்லாமல் நேசிக்கிறார் என்பதையும், மேலும் நாம் அவரை எவ்வாறு நேசிக்க வேண்டும் என்று விரும்புகிறார் என்பதையும் விவரியுங்கள்.<br>8 நாம் பல வேளைகளிலும் தேவனைக் கைவிட்டாலும், அவர் நம்மை ஒருபோதும் கைவிடுவதில்லை என்பதை மாணவர்களுக்கு நினைவூட்டுங்கள்.<br>**முக்கியமான வசனத்தை விளக்கிக்காட்டி, மாணவர்கள் அவற்றை கற்றுக்கொள்ள ஊக்குவியுங்கள்.**<br>**வேத ஆராய்ச்சி 4ஐ முடியுங்கள்.**<br>**காண்பியுங்கள்: FBI - இயேசு கலிலேயாவில் சீடர்களுக்கு தரிசனமாகிறார், மேலும் இயேசு பேதுருவைக் கேள்வி கேட்கிறார் (றி)** |
| மீள்பார்வை | 1. இந்த வாரத்தில், இயேசு சொல்வதை கவனிக்க நீங்கள் நேரத்தை ஒதுக்க இருக்கும் நடைமுறை வழிகளைப் பற்றி கலந்தாலோசியுங்கள்.<br>2. இயேசு சொல்வதைக் கேட்கவும் அவருடைய சித்தத்தைச் செய்யவும் கற்றுக்கொண்ட ஒரு பிரபலமான கிறிஸ்தவரை கண்டுபிடியுங்கள். | 1. தேவனுடைய அன்பும் மன்னிப்பும் நம்மை எவ்வாறு உற்சாகப்படுத்துகின்றன என்பதை கலந்தாலோசியுங்கள்.<br>2. இயேசு ஒரு புதிய தொடக்கத்தை கொடுத்த ஒரு பிரபலமான கிறிஸ்தவரின் வாழ்க்கையை ஆராய்ச்சி செய்யுங்கள். |
| வாழ்ந்துகாட்டுங்கள் | **இந்தப் பாடம் நமக்குவிடும் சவால் என்ன?**<br>1. கர்த்தர் நமக்குச் செய்த எல்லாவற்றிற்காகவும் நாம் அவருக்கு நமது அன்பை வெளிப்படுத்துவது எவ்வளவு முக்கியமானது என்பதை மனதில் வையுங்கள்.<br>2. நாம் கர்த்தரை கைவிட்ட நேரத்தில், உண்மையாக மனந்திரும்பினால், அவர் நமக்கு ஒன்றுக்கு மேற்பட்ட வாய்ப்புகளை தர ஆயத்தமாக உள்ளார் என்று அறிந்துகொள்ளுங்கள். | **இந்தப் பாடம் நமக்குவிடும் சவால் என்ன?**<br>1. தேவன் நம்மீது கொண்டிருக்கும் அன்பை நாம் எவ்வாறு போற்றலாம்?<br>2. தேவன் நம்மேல் வைத்திருக்கும் அன்பை நமது செயல்கள் மூலம் எவ்வாறு நிரூபிக்கலாம்? |

| | A5 - நிலை 3<br>பாடம் 1 - பேதுருவின் வாழ்க்கை<br>தலைப்பு - பேதுரு பிரசங்கிக்கிறார் | A5 - நிலை 4<br>ஆராய்ச்சி 1 - பேதுருவின் வாழ்க்கை<br>தலைப்பு - பெந்தெகொஸ்தே |
|---|---|---|
| | **வேதப்பகுதி:** **அப்போஸ்தலர் 2:1-43**<br>**முக்கிய வசனம்:** **அப்போஸ்தலர் 1:8**<br>**நாம் கற்றுக்கொள்வது:**<br>1. இயேசுவைப் பின்பற்றுகிறவர்களுக்கு பரிசுத்த ஆவியானவர் தானமாய் கொடுக்கப்பட்டுள்ளார்.<br>2. நாம் மனந்திரும்பி தேவனுடைய மன்னிப்பைப் பெற்றுக்கொள்ளவேண்டும் என்பதே சீடர்களின் செய்தியாய் இருந்தது. | **வேதப்பகுதி:** **அப்போஸ்தலர் 2:1-42**<br>**முக்கிய வசனம்:அப்போஸ்தலர் 2:38**<br>**நாம் கற்றுக்கொள்வது:**<br>1. பெந்தெகொஸ்தே என்பது பஸ்காவிற்கு பிறகு ஐந்து நாட்கள் கழித்து கொண்டாடப்படுகிற ஒரு யூத பண்டிகையாகும்.<br>2. பேதுருவின் பிரசங்கத்திற்குப் பிறகு சபை உருவானது. |
| அறிமுகப்படுத்துங்கள் | தங்கள் வாழ்வில் பெரிய மாற்றங்கள் இருந்தால் மாணவர்கள் எப்படி உணருவார்கள் என்று சிந்தியுங்கள். புதிய பள்ளி, புதிய வீடு, குடும்ப சூழ்நிலையில் மாற்றங்கள். இப்பொழுது கர்த்தராகிய இயேசு பரலோகத்திற்கு ஏறிச் சென்றுவிட்டதால், சீடர்கள் அவருடைய வேலையைச் செய்ய வேண்டியிருந்தது, பெரிய மாற்றங்கள் வந்தன என்பதை விளக்குங்கள். | பிறந்தநாட்கள், ஆண்டுவிழா, சமய பண்டிகைகள் ஆகியவை எல்லாக் குடும்பங்களிலும் முக்கியமானவை என்ற உண்மையை யோசித்துப்பாருங்கள்.<br>வரவிருக்கும் மாதங்களில் சில சிறப்பு நாட்களைப்பற்றி யோசித்துப் பாருங்கள்.<br>தாங்கள் எகிப்திலிருந்து புறப்பட்ட, மோசே நியாயப்பிரமாணத்தை சீனாய் மலையில் பெற்ற, பஸ்கா தினத்திற்கு பின்பு ஐம்பது நாட்கள் கழித்து, மோசே நியாயப்பிரமாணத்தை சீனாய் மலையில் பெற்ற தினத்தில், யூத தேசத்தார் பெந்தெகொஸ்தே பண்டிகையைக் கொண்டாடினார்கள். |
| முடியுங்கள் | **பைபிள் கதையைக் கூறுங்கள்**<br>**கருத்துப்பரிமாறிக்கொண்டு விளக்குங்கள்:**<br>1. இயேசு வாக்குத்தத்தம் பண்ணியிருந்த பரிசுத்த ஆவியானவர் வருவதற்காக சீஷர்கள் காத்துக்கொண்டிருந்தார்கள். **(அப்.1:8)**<br>2. **வசனங்கள் 2-3**ல் விவரித்தது போலவே பெந்தேகோஸ்தே நாளில் பரிசுத்த ஆவியானவர் வந்தார்.<br>3. எருசலேமில் சிறப்புப் பண்டிகையை கொண்டாட பல தேசங்களிலிருந்து வந்திருந்த மக்கள் சீஷர்கள் பேசுவதை அவரவர் மொழிகளில் புரிந்துகொள்ள முடிந்தது.<br>4. சீஷர்கள் மதுபானம் குடித்து வெறித்திருக்கிறார்கள் என்று சிலர் எண்ணினார்கள்.<br>5. பேதுரு எழுந்து நின்று என்ன சம்பவித்தது என்பதை மக்கள் கூட்டத்தில் எடுத்துரைக்கிறார். யோவேல் தீர்க்கதரிசி சொன்ன தீர்க்கதரிசனம் நிறைவேறி பரிசுத்தாவியானவர் வந்திருக்கிறார் என்பதை அவர்களுக்கு எடுத்துரைக்கிறார். **(யோவேல் 2:28-32)**<br>6. இயேசுவின் மரணத்திற்கு அவர்கள்தான் பொறுப்பானவர்கள் என்றும், ஆனால் தேவன் அவரை மரித்தோரிலிருந்து உயிர்த்தெழும்படி செய்தார் என்றும் மிக தைரியத்தோடு அவர்களிடத்தில் சொல்கிறார்.<br>7. மக்கள் கலக்கமுற்று தாங்கள் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டார்கள்.<br>8. மனந்திரும்பி ஞானஸ்நானம் எடுத்துக்கொள்ளுங்கள் என்று பேதுரு அவர்களுக்கு சொல்கிறார். அன்று 3000 பேர் விசுவாசித்து இயேசுவைப் பின்பற்றுகிறவர்கள் ஆனார்கள்.<br>**முக்கியமான வசனத்தை விளக்கிக்காட்டி, மாணவர்கள் அவற்றை கற்றுக்கொள்ள ஊக்குவியுங்கள்.**<br>**பாடம் 1ஐ முடியுங்கள்.**<br>**காண்பியுங்கள்: FBI - பெந்தெகோஸ்தே நாள். (மி)** | **பைபிள் கதையைக் கூறுங்கள்**<br>**கருத்துப்பரிமாறிக்கொண்டு விளக்குங்கள்:**<br>1. பெந்தேகோஸ்தே நாளில் அதிசயமான முறையில் சீஷர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றபோது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து அளித்த வாக்குத்தத்தம் நிறைவேறிற்று.<br>2. பரிசுத்த ஆவியானவர் வந்தபோது என்ன சம்பவித்தது என்பதை விவரியுங்கள்.<br>3 இயேசு கிறிஸ்துவின் மரணத்திற்கு யூத ஜனங்கள்தான் காரணம் என்றும் ஆனால் தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பிப் பரலோகத்திற்கு எடுத்துக்கொண்டார் என்றும் அவர் பரிசுத்த ஆவியானவரை அனுப்பியிருக்கிறார் என்றும் பேதுரு சொன்னார்.<br>4. அந்த நாளில் விசுவாசித்தவர்கள்தான் சபையின் முதல் அங்கத்தினர்கள் ஆவர். அது அன்று ஆரம்பித்து இந்நாள்வரை தொடர்கிறது.<br>5. விசுவாசித்த மக்களுக்கு உண்மையில் என்ன சம்பவித்தது என்பதை விவரியுங்கள். **(வசனங்கள் 38-39 பார்க்க)**<br>6. தங்களுடைய வாழ்க்கையில் மாற்றம் ஏற்பட்டதை அவர்கள் காண்பிக்க என்ன செய்தார்கள் என்பதை கவனியுங்கள். **(வசனம் 42 பார்க்க)**<br>**முக்கியமான வசனத்தை விளக்கிக்காட்டி, மாணவர்கள் அவற்றை கற்றுக்கொள்ள ஊக்குவியுங்கள்.**<br>**வேத ஆராய்ச்சி 1ஐ முடியுங்கள்.**<br>**காண்பியுங்கள்: FBI - பெந்தெகோஸ்தே நாள். (மி)** |
| மீள்பார்வை | 1. சாட்சி கூற பரிசுத்த ஆவியானவர் நமக்கு எவ்வாறு வல்லமையைத் தருகிறார் என்பதை யோசித்துப் பாருங்கள்.<br>2. உலகம் முழுவதும் சுவிசேஷம் பரப்பப்படவேண்டியதின் முக்கியத்துவத்தைப் பற்றி கலந்தாலோசியுங்கள்.<br>3. ஒரு குழுவாக இருந்து, இந்த வாரம் ஒரு சாட்சியாக இருப்பதற்கான வழிகளை கலந்தாலோசியுங்கள்.<br>4. பல ஆண்டுகளுக்கு முன்பு எப்படிப்பட்ட தவம் அல்லது மனந்திரும்புதல் இருந்தது என்பதை கண்டறியுங்கள். | 1. பரிசுத்த ஆவியானவரின் செயல்பாடு எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை விவாதியுங்கள்.<br>2. நெருங்கிய ஐக்கியத்தோடு சபையாக ஒன்றுகூடி வருவது எவ்வளவு நன்மையானது என்பதை கலந்தாலோசியுங்கள்.<br>3. வேகமாக வளர்ந்துவரும் ஒரு சபையின் பெயரைக் குறிப்பிடுங்கள், மேலும் அதன் நற்குணங்களை கூறுங்கள். |
| வாழ்ந்துகாட்டுங்கள் | **இந்தப் பாடம் நமக்குவிடும் சவால் என்ன?**<br>1. ஒரு சாட்சியாக இருத்தல் என்றால் என்ன அர்த்தம்?<br>2. மனந்திரும்புதல் என்றால் என்ன? | **இந்தப் பாடம் நமக்குவிடும் சவால் என்ன?**<br>1. இன்றைக்கு சபைக்கு பெந்தெகொஸ்தே மிகவும் முக்கியமானது, ஏன்?<br>2. வெறுமனே சபைக்கு சென்றுவருதலுக்கும் சபையின் ஐக்கியத்தில் ஒரு பங்காக இருப்பதற்கும் உள்ள வித்தியாசத்தைப்பற்றி கருத்துப்பரிமாறிக்கொள்ளுங்கள். |

| | A5 - நிலை 3<br>பாடம் 2பேதுருவின் வாழ்க்கை<br>தலைப்பு - பேதுரு சௌக்கியமாக்குதல் | A5 - நிலை 4<br>ஆராய்ச்சி 2பேதுருவின் வாழ்க்கை<br>தலைப்பு - ஒரு முடவனை சௌக்கியமாக்குதல் |
|---|---|---|
| | **வேதப்பகுதி: அப்போஸ்தலர் 3:1-16**<br>**முக்கிய வசனம்: அப்போஸ்தலர் 3:6**<br>**நாம் கற்றுக்கொள்வது:**<br>1. கர்த்தராகிய இயேசு வியாதியையும் நோயையும் குணப்படுத்த வல்லவர்.<br>2. நாம் அவரை நம்புவோமானால், அவர் நம் வாழ்க்கையை மாற்ற முடியும். | **வேதப்பகுதி: அப்போஸ்தலர் 3:1-26**<br>**முக்கிய வசனம்: அப்போஸ்தலர் 4:10**<br>**நாம் கற்றுக்கொள்வது:**<br>1. சரியான நேரத்தில் சரியான இடத்தில் தேவன் நம்மை வைத்தார்.<br>2. சீடர்களுடைய வல்லமை அல்ல, தேவனுடைய வல்லமையே முடவனை குணமாக்கினது. |
| **அறிமுகப்படுத்துங்கள்** | 'தங்கள் அயலாரை நேசிக்க' வேண்டும் என்று இயேசு அவர்களுக்குப் போதித்தபோது சொன்ன நல்ல சமாரியனையும் இந்த உவமையையும் பேதுருவும் மற்ற சீஷர்களும் ஒருபோதும் மறக்க மாட்டார்கள் **(லூக்கா 10: 25-37)** அவர்கள் இந்த மனிதனைப் பார்த்தபோது, இயேசு என்ன செய்திருப்பாரோ அதைத் தாங்கள் செய்திருக்க வேண்டும் என்று அவர்கள் அறிந்துகொண்டார்கள். | மற்றவர்களிடம் அக்கறை செலுத்தவேண்டும் என்பது கர்த்தராகிய இயேசுவின் மாபெரும் போதனைகளில் ஒன்று. எல்லோர்மீதும், குறிப்பாக தேவையில் இருப்போர்மீது தமக்கிருக்கும் அன்பை அவர் தொடர்ந்து சீஷர்களிடம் காட்டினார். தாம் சென்ற பிறகு, அவர்கள் தாம் செய்ததைவிட பெரிய காரியங்களைச் செய்வார்கள் என்று சொன்னார். **(யோவான்14:12)** |
| **முடியுங்கள்** | **பைபிள் கதையைக் கூறுங்கள்**<br>**கருத்துப்பரிமாறிக்கொண்டு விளக்குங்கள்:**<br>1 பேதுருவும் யோவானும் ஜெபிப்பதற்காக ஆலயத்திற்கு செல்கிறார்கள் .<br>2. 40 வருடங்களாகப் பிறவியிலேயே முடவனாயிருந்த, நடக்க முடியாத ஒரு மனிதனை சந்திக்கிறார்கள்.<br>3. அவன் பணத்தை கேட்கிறான், ஆனால் பேதுரு அதைவிட மேலானது தன்னிடத்தில் இருக்கிறது என்று சொல்லி நீ குணமடைய முடியும் என்று சொல்கிறார்.<br>4 பேதுரு அந்த மனிதனைக் கைதூக்கி விடுகிறார். உடனே அவன் குதித்தெழுந்து தேவாலயத்திற்கு நடந்துபோய் தேவனை துதிக்கின்றான். ஆதி சபையில் நடந்த முதல் அற்புதம் இதுவாகும்.<br>5 ஒரு பெரிய கூட்டம் கூடிவந்தபோது அந்த மனிதன் குணமடைந்தது பேதுருவின் சக்தியினால் அல்ல, அவர்கள் சிலுவையில் அறைந்த இயேசு கிறிஸ்துவினுடைய நாமத்தின் வல்லமையினாலேயே நடந்தது என்பதை பேதுரு கூட்டத்தினருக்கு விவரிக்கிறார். **(வசனம் 16 பார்க்கவும்).**<br>6. அந்த மனிதனுடைய விசுவாசத்தை **16 ஆம் வசனத்தில்** வலியுறுத்துவதை கவனியுங்கள்.<br>**முக்கியமான வசனத்தை விளக்கிக்காட்டி, மாணவர்கள் அவற்றை கற்றுக்கொள்ள ஊக்குவியுங்கள்.**<br>**பாடம் 2ஐ முடியுங்கள்.**<br>**காண்பியுங்கள்: FBI - ஒரு முடவனான பிச்சைக்காரன் சௌக்கியமாக்கப்பட்டான். (மி)** | **பைபிள் கதையைக் கூறுங்கள்**<br>**கருத்துப்பரிமாறிக்கொண்டு விளக்குங்கள்:**<br>1. பெந்தேகோஸ்தே நாளுக்குப்பின் பேதுருவும் யோவானும் ஜெபிப்பதற்காக ஆலயத்திற்குச் செல்கிறார்கள்.<br>2. முடவனான மனிதனை அவர்கள் கண்டபோது, கர்த்தர் என்ன செய்யப்போகிறார் என்பதை அவர்கள் அறிந்தார்கள்.<br>3. பேதுரு விசுவாசத்தோடு அந்த மனிதன் எழுந்து நிற்க உதவி செய்தார். அவன் உடனடியாக குணமாக்கப்பட்டான். அவன் குணமானதை நிரூபிக்கும் வகையில் துள்ளி நடந்து, தேவனைத் துதித்துக்கொண்டு ஆலயத்திற்குப் போனான்.<br>4. அவன் உடனடியாக முற்றிலும் குணமாக்கப்பட்டான். இதைப்போன்ற அநேக அற்புதங்களை இயேசு செய்திருக்கிறார்.<br>5. பரிசுத்த ஆவியானவர் வந்ததினால் சீஷர்கள் மூலமாக கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வல்லமை வெளிப்பட்டது.<br>6. இயேசு யார் என்பதையும் அவர் இன்றும் என்ன செய்ய முடியும் என்பதையும் பேதுரு விவரித்துக் கூறினார். பிரசங்கத்தின் முக்கிய கருத்துக்களை சிந்தித்துப்பாருங்கள்.<br>7. தேவன் தமது சீடர்களை சுகமளிக்கும் வல்லமையால் எப்படி ஆதரிக்கிறார் என்பதை சிந்தித்துப்பாருங்கள்.<br>**முக்கியமான வசனத்தை விளக்கிக்காட்டி, மாணவர்கள் அவற்றை கற்றுக்கொள்ள ஊக்குவியுங்கள்.**<br>**வேத ஆராய்ச்சி 2ஐ முடியுங்கள்.**<br>**காண்பியுங்கள்: FBI - ஒரு முடவனான பிச்சைக்காரன் சௌக்கியமாக்கப்பட்டான். (மி)** |
| **மீள்பார்வை** | 1. அற்புத சுகம்பெறுதல், மற்றும் எல்லோரும் அற்புத சுகம்பெறுவதல்லை என்ற உண்மையையும் யோசித்துப் பாருங்கள்.<br>2. உலகத்தின் கடைமுனைக்கு செல்வதற்கு முன்னால், கிறிஸ்தவர்கள் எவ்வாறு வீட்டில் (எருசலேமில்) சாட்சியாக இருக்கவேண்டும் என்பதைக் குறித்து கலந்தாலோசியுங்கள்.<br>3. இந்த நவீன காலத்தில் அற்புத சுகம்பெற்ற ஒரு கிறிஸ்தவரை கண்டுபிடியுங்கள்.<br>4. நாம் இயேசுவை நம்பும்போது, அவர் நம்முடைய வாழ்க்கையில் ஏற்படுத்து மாற்றத்தைப் பற்றி கலந்தாலோசியுங்கள். | 1. இயேசுவோடிருக்க நேரத்தை செலவிடுவது எவ்வாறு நமது அன்றாட வேலைகளிலும் சாட்சியிலும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை கலந்தாலோசியுங்கள்.<br>2. மற்ற கிறிஸ்தவர்களோடு சேர்ந்து ஜெபிக்க நேரம் ஒதுக்குங்கள், அவ்வேளையில் தேவன் தமது வல்லமையினால் உங்களை நிரப்பவும், ஊழியம்செய்ய வாய்ப்பளிக்கவும் வேண்டி மன்றாடுங்கள்.<br>3. பேதுரு கர்த்தரை மறுதலித்ததுமுதல் எவ்வளவு பெரிய மாற்றம் பெற்றார் என்பதற்கான காரணங்களை கலந்தாலோசியுங்கள். |
| **வாழ்ந்துகாட்டுங்கள்** | **இந்தப் பாடம் நமக்குவிடும் சவால் என்ன?**<br>1.தேவன் எல்லாரையும் குணப்படுத்துவதில்லை என்று நீங்கள் நினைக்க காரணம் என்ன?<br>2. ஒவ்வொரு நாளும் நாம் தேவனை எப்படி நம்பலாம்? | **இந்தப் பாடம் நமக்குவிடும் சவால் என்ன?**<br>1. தேவன் உங்களை எந்த இடத்தில் இருக்க விரும்புகிறாரோ அந்த இடத்தில்தான் இருக்கிறீர்கள் என்று உங்களுக்கு எப்படித் தெரியும்?<br>2. நம்முடைய பாவங்களை மன்னித்து நமது வாழ்வை மாற்றுகிற தேவனை நாம் எப்படித் துதிக்கலாம்? |

| | A 5 நிலை 3<br>பாடம் 3 - பேதுருவின் வாழ்க்கை<br>தலைப்பு - பேதுரு சாட்சிசொல்லுதல் | A 5 - நிலை 4<br>ஆராய்ச்சி - 3பேதுருவின் வாழ்க்கை<br>தலைப்பு - சனகெரிப் நியாயசங்கத்தின் முன் |
|---|---|---|
| | **வேதப்பகுதி: அப்போஸ்தலர் 4:1-22**<br>**முக்கிய வசனம்: அப்போஸ்தலர் 4:12**<br>**நாம் கற்றுக்கொள்வது:**<br>1. பேதுருவின் வாழ்க்கையில் பரிசுத்த ஆவியானவர் ஒரு பெரிய மாற்றத்தை ஏற்படுத்தினார்.<br>2. கிறிஸ்தவர்கள் கர்த்தருக்காக ஒரு உறுதியான நிலைப்பாட்டை எடுக்க வேண்டும். | **வேதப்பகுதி: அப்போஸ்தலர் 4:1-31**<br>**முக்கிய வசனம்: அப்போஸ்தலர் 4:13**<br>**நாம் கற்றுக்கொள்வது:**<br>1. மத அதிகாரிகளுக்கு சாட்சி சொல்ல பேதுருவுக்கு தைரியத்தையும் பலத்தையும் தேவன் கொடுத்தார்.<br>2. என்ன வந்தாலும், விசுவாசிகள் மற்றவர்களுக்கு இயேசுவைப் பற்றி சொல்ல தயாராக இருக்க வேண்டும். |
| **அறிமுகப்படுத்துங்கள்** | முந்தைய பாடத்தில் என்ன நடந்தது என்பதைத் மீண்டும் திருப்பிப்பாருங்கள். சில நாடுகளில், நீங்கள் கர்த்தராகிய இயேசுக்காக ஒரு நிலைப்பாட்டை எடுத்தால் துன்புறுத்தப்படலாம் அல்லது சிறையில் அடைக்கப்படலாம் என்பதை மாணவர்களுக்கு நினைவூட்டுங்கள். இந்த சந்தர்ப்பத்தில் பேதுருவும் யோவானும் மத அதிகாரிகளிலிடமிருந்து உபத்திரவங்களை சந்தித்தார்கள். | பேதுரு மற்றொரு பெரிய பிரசங்கத்தை செய்தார். **(அத்தியாயம் 3)** விசுவாசிகள் எண்ணிக்கை ஏறக்குறைய 5,000 ஆக இருந்தது. **(வசனம் 4)** கர்த்தரை சிலுவையில் அறைந்தபோது, அவரைப் பின்பற்றுவது முடிவுக்கு வந்துவிட்டது என மத அதிகாரிகள் நினைத்தார்கள். இப்போதோ அவரைப் பின்பற்றுவது இன்னும் அதிகமாக வளர்ந்தது! |
| **முடியுங்கள்** | **பைபிள் கதையைக் கூறுங்கள்**<br>**கருத்துப்பரிமாறிக்கொண்டு விளக்குங்கள்:**<br>1. பேதுருவின் செய்தியை கேட்ட மத அதிகாரிகள் கலக்கம் அடைந்தனர். ஏனென்றால் மக்களுக்கு பிரசங்கிப்பது தான் அவர்களுடைய வேலையாயிருந்தது. மேலும் இயேசு கர்த்தராகிய இயேசு உயிரோடு இருக்கிறார் என்று பேதுரு பிரசவித்ததும் அதற்கு ஒரு காரணமாகும்.<br>2. பேதுருவும் யோவானும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.<br>3. மறுநாள் அவர்களும் மத நீதிமன்றமாகிய சனகெரிப் நியாயசங்கத்தில் இயேசு கிறிஸ்துவைப் போலவே நிற்க வேண்டியதாயிற்று.<br>4. அந்த மனிதனை நடக்கும்படி செய்ய பேதுரு எப்படிப்பட்ட வல்லமையை உபயோகித்தார் என்பதை அவர்கள் அறிய விரும்பினார்கள்.<br>5. அது இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உள்ள வல்லமை என்று பேதுரு அவர்களுக்கு சொன்னார். **(வசனம் 10)**<br>6. பேதுரு மற்றும் யோவானுடைய தைரியத்தைக் கண்டு மதத்தலைவர்கள் ஆச்சரியப்பட்டனர்.<br>7. இயேசு கிறிஸ்துவை குறித்து பிரசங்கிப்பதை நிறுத்த வேண்டும் என்று அவர்கள் கேட்டுக்கொண்டனர்.<br>8. அவர்களுக்குக் கீழ்ப்படிவதை விட தேவனுக்குக் கீழ்ப்படிவதே முக்கியம் முக்கியம் என்று பேதுரு பதில் சொன்னார்.<br>**முக்கியமான வசனத்தை விளக்கிக்காட்டி, மாணவர்கள் அவற்றை கற்றுக்கொள்ள ஊக்குவியுங்கள்.**<br>**பாடம் 3ஐ முடியுங்கள்.**<br>**காண்பியுங்கள்: FBI - பேதுருவும் யோவானும் கைதுசெய்யப்படுகிறார்கள். (மி)** | **பைபிள் கதையைக் கூறுங்கள்**<br>**கருத்துப்பரிமாறிக்கொண்டு விளக்குங்கள்:**<br>1. பேதுருவும் யோவானும் கைது செய்யப்பட்டார்கள்.<br>2. சனகெரிப் நியாயசங்கத்தின் முக்கியத்துவத்தை கவனியுங்கள். (யூதர்களின் ஆலோசனைச் சங்கம்)<br>3. இயேசுவின் வல்லமை தான் அந்த மனிதனை குணமாக்கியது என்றும், இயேசு தான் ஒரே இரட்சகர் என்றும் சனகெரிப் நியாயசங்கத்திற்கு பேதுரு தைரியமாக பதிலளித்தார். **(வசனம் 12)**<br>4. சனகெரிப் சங்கத்தார் பேதுருவும் யோவானும் பேசுகிற தைரியத்தைக் கண்டு ஆச்சரியப்பட்டார்கள், அவர்கள் இயேசுவோடு இருந்ததே அந்த தைரியத்திற்குக் காரணம் என்று அறிந்து கொண்டார்கள்.<br>5. இயேசுவின் நாமத்தில் பிரசங்கிக்கக் கூடாது என்று அவர்கள் எச்சரித்தார்கள். ஆனால் சனகெரிப் நியாயசங்கத்திற்கு கீழ்ப்படிவதைவிட தேவனுக்குக் கீழ்ப்படிவதே முக்கியமானது என்று பேதுரு பதில் சொன்னார்.<br>6. பேதுருவும் யோவானும் தங்களுடைய சொந்த ஜனங்களிடத்திற்கு சென்று, தாங்கள் செய்தியை தைரியமாய் பேசும்படிக்கு ஒன்றாக ஜெபித்தனர். அவர்களுடைய ஜெபங்களுக்கு எவ்வாறு வல்லமையான வழியில் பதில் கிடைத்து என்பதை கவனியுங்கள்.<br>**முக்கியமான வசனத்தை விளக்கிக்காட்டி, மாணவர்கள் அவற்றை கற்றுக்கொள்ள ஊக்குவியுங்கள்.**<br>**வேத ஆராய்ச்சி 3ஐ முடியுங்கள்.**<br>**காண்பியுங்கள்: FBI - பேதுருவும் யோவானும் கைதுசெய்யப்படுகிறார்கள். (மி)** |
| **மீள்பார்வை** | 1. கிறிஸ்தவ விசுவாசத்திற்கு அஸ்திவாரமாகத் திகழக்கூடிய காரியங்களை சுருங்கமாகக் கூறவும். விசுவாசிகளின் விசுவாசத்திற்கு இயேசுதான் அஸ்திவாரம் என்பதை நினைத்துக்கொள்ளுங்கள். **(வசனம் 12ஐ மனதில்வைக்கவும்)**<br>2. தனது விசுவாசத்திற்காக உறுதியான நிலைப்பாட்டை எடுத்த ஒரு கிறிஸ்தவரை கண்டுபிடிக்க. எ.கா. எரிக் லிடெல். | 1. உங்களுடைய விசுவாசத்திலும் சாட்சியிலும் நீங்கள் எவ்வாறு தைரியமாய் விளங்கமுடியும் என்பதைக் குறித்து கலந்தாலோசியுங்கள்.<br>2. ஓபன் டோர்ஸ் அல்லது பர்னபாஸ் ட்ரஸ்ட் - உபத்திரம் உள்ள இடங்களிலும் கிறிஸ்தவர்கள் எவ்வாறு வெற்றியுள்ளவர்களாய் இருக்கமுடியும் என்பதற்கான வழிகளை கண்டறியும் இந்த இயக்கங்களின் ஊழியத்தை ஆராய்ச்சி செய்யுங்கள். |
| **வாழ்ந்துகாட்டுங்கள்** | **இந்தப் பாடம் நமக்குவிடும் சவால் என்ன?**<br>1. இயேசுவைப் பற்றி மற்றவர்களிடம் பேசாதபடி எது நம்மைத் தடுக்கிறது?<br>2. விசுவாசி ஒரு 'ஜீவனுள்ள கல்' என்று சொல்வதின் அர்த்தம் என்ன? **(1பேதுரு 2:4& 5)** | **இந்தப் பாடம் நமக்குவிடும் சவால் என்ன?**<br>1. சாட்சிகூறுவதில் பரிசுத்த ஆவியானவர் நமக்கு உதவிசெய்யும்படி நாம் எப்படி சார்ந்திருக்கலாம்?<br>2. சுவிசேஷத்திற்கான எதிர்ப்பு எவ்வாறு நமது விசுவாச வளர்ச்சிக்கு உதவுகிறது? |

| | | |
|---|---|---|
| | A5 – நிலை 3<br>**பாடம் 4பேதுருவின் வாழ்க்கை**<br>**தலைப்பு – சிறையில் பேதுரு** | A5 – நிலை 4<br>**ஆராய்ச்சி 4பேதுருவின் வாழ்க்கை**<br>**தலைப்பு – சிறையில்** |
| | **வேதப்பகுதி:** அப்போஸ்தலர் 12:1-9<br><br>**முக்கிய வசனம்:** 1 யோவான் 5:14<br><br>**நாம் கற்றுக்கொள்வது:**<br><br>1. உபத்திரவம் என்பது கடவுளுடைய மக்களை பாதிக்கக்கூடிய ஒன்று.<br>2. தேவன் நம்மை நேசிக்கிறார், நமக்கு எது சிறந்ததாயிருக்கும் என்பதை அவர் அறிவார் என்று பைபிள் நமக்கு கற்பிக்கிறது. | **வேதப்பகுதி:** அப்போஸ்தலர் 12:1-19<br><br>**முக்கிய வசனம்:**1 யோவான் 5:5<br><br>**நாம் கற்றுக்கொள்வது:**<br><br>1. மிகவும் கடினமான சூழ்நிலைகளில் கூட நாம் பேதுருவைப் போல தேவனை நம்புவது முக்கியம்.<br>2. தேவன் நம்மால் சாத்தியமற்றதை செய்வார், ஆனால் மீதியை அவர் நாம் செய்வற்கு விட்டுவிடுவார். |
| **அறிமுகப்படுத்துங்கள்** | உலகம் தன்னை வெறுத்ததைப் போலவே, அப்போஸ்தலர்களையும் தேவனுடைய மக்களையும் வெறுக்கும் என்று கர்த்தராகிய இயேசு சொன்னார். **(யோவான் 15:18).** ஆரம்பகால வாழ்க்கையில் இயேசு கிட்டத்தட்ட ஏரோது ராஜாவால் கொல்லப்பட்டார் என்ற நிலை காணப்பட்டது. இப்போது அவனுடைய பேரன், இன்னொரு ஏரோது பேதுருவை கொல்ல முயற்சிக்கிறான். | தன்னுடைய விசுவாசம் மற்றும் பிரசங்கத்தின் காரணமாக மீண்டும் ஒருமுறை பேதுரு சிறையில் இருக்கிறார். தான் விசாரிக்கப்படும் நாளுக்கு முந்திய இரவில் அவர் சிறையில் அயர்ந்து தூங்கினார் என்று சொன்னால், அவருக்கு மாபெரும் நம்பிக்கை இருந்திருக்க வேண்டும். பின்னாளில் தான் எழுதிய வார்த்தைகளின் சத்தியத்தை பேதுரு அறிந்திருந்தாரா? **(1 பேதுரு 5: 7)** |
| **முடியுங்கள்** | **பைபிள் கதையைக் கூறுங்கள்**<br>**கருத்துப்பரிமாறிக்கொண்டு விளக்குங்கள்:**<br>1. ஏரோது ராஜா யாக்கோபை கொலைசெய்தான். அது யூதருக்குப் பிரியமாய் இருந்தது என்று கண்டு, பேதுருவையும் கைதுசெய்தான்.<br>2. பேதுரு இப்போது சிறையில் பொது விசாரணைக்காகக் காத்திருக்கிறார்.<br>3. ஜெபிப்பதற்காக சபை ஒன்று கூடியது.<br>4. விசாரணைக்கு முந்தின இரவில் ஒரு தேவதூதன் பேதுருவை சிறைச்சாலையிலிருந்து தப்பித்துவித்துக்கொண்டு போகிறார்.<br>5. அவர் தன்னுடைய நண்பர்கள் ஜெபித்துக்கொண்டிருந்த வீட்டிற்குச் செல்கிறார்.<br>6. கதவைத் திறந்த வேலைக்காரப் பெண், அங்கே வந்திருப்பது பேதுருதான் என்று சொல்கிறாள். ஆனால் யாரும் அவள் சொல்வதை நம்பவேயில்லை.<br>7. தங்களுடைய ஜெபங்களுக்கு தேவன் பதிலளித்திருந்தார் என்பதை போகப்போகப் புரிந்துகொண்டனர்.<br>8. விசுவாசிகள் மத்தியில் இருக்கும் உண்மையான ஐக்கியத்தின் முக்கியத்துவத்தைப் பற்றி யோசியுங்கள்.<br>9. தேவன் நம்முடைய ஜெபங்களுக்கு பதில் அளிப்பார் என்ற எதிர்பார்ப்புடன் நாம் எவ்வாறு தொடர்ந்து ஜெபிக்க வேண்டும் என்பதையும், நம்முடைய வாழ்க்கையைக் குறித்து தேவன் வைத்திருக்கிற சித்தத்தை ஏற்றுக்கொள்வதும் எவ்வளவு முக்கியம் என்பதை சிந்தித்துப் பாருங்கள்.<br>**முக்கியமான வசனத்தை விளக்கிக்காட்டி, மாணவர்கள் அவற்றை கற்றுக்கொள்ள ஊக்குவியுங்கள்.**<br>**பாடம் 4ஐ முடியுங்கள்.**<br>**காண்பியுங்கள்: FBI – அற்புதமாக பேதுரு சிறைச்சாலையிலிருந்து தப்புகிறார். (மி)** | **பைபிள் கதையைக் கூறுங்கள்**<br>**கருத்துப்பரிமாறிக்கொண்டு விளக்குங்கள்:**<br>1. சபை பேதுருவுக்காக கவலைப்பட்டது, சபையார் அவருக்காக பாரத்தோடு ஜெபித்தனர். 2 பேதுருவைச் சுற்றிலும் 16 வீரர்கள் காவலிருந்தனர். அவர்களில் இரண்டு பேரை சங்கிலியால் பேதுருவோடு பிணைத்து இருந்தனர்.<br>3. ஒரு தேவதூதன் தோன்றி பேதுருவைத் தட்டியெழுப்பி அவரை கைவிலங்குகலிருந்து விடுதலையாக்கி சிறைச்சாலைக்கு வெளியே கொண்டு போனான். அற்புதமாக பேதுரு விடுவிக்கப்பட்டார்.<br>4. கர்த்தரே தன்னை விடுதலையாக்கி இருக்கிறார் என்று பேதுரு உணர்ந்துகொண்டார். 5. சபையார் தனக்காக ஜெபித்துகொண்டிருந்தார்கள். ஆனால், அசாத்தியமான காரியங்களை தேவன் செய்ய வல்லவர் என்பதை அவர்கள் விசுவாசிக்கவில்லை என்று பேதுரு அறிந்துகொண்டார்.<br>6. பேதுரு செய்யும்படி தேவன் அதிகமான ஊழியத்தை அவருக்கு வைத்திருந்தார் என்பது தெளிவாகத் தெரிகிறது. அதனால் பேதுரு மரிக்க வேண்டிய சமயம் இன்னும் வராததால் தேவன் அதை ஒத்திப்போட்டார்.<br>**முக்கியமான வசனத்தை விளக்கிக்காட்டி, மாணவர்கள் அவற்றை கற்றுக்கொள்ள ஊக்குவியுங்கள்.**<br>**வேத ஆராய்ச்சி 4ஐ முடியுங்கள்.**<br>**காண்பியுங்கள்: FBI – அற்புதமாக பேதுரு சிறைச்சாலையிலிருந்து தப்புகிறார். (மி)** |
| **மீள்பார்வை** | 1. தவறாமல் முறையாக ஜெபிப்பது கிறிஸ்தவர்களுக்கு மிகவும் கடினமாகத் தோன்றக் காரணம் என்ன என்பதை கலந்தாலோசியுங்கள்.<br>2. தேவனுடைய சித்தத்தின்படி நான் இருக்கவில்லையே என்று உங்களுக்குத் தெரிந்த சந்தர்ப்பங்களைப்பற்றி கலந்தாலோசியுங்கள்.<br>3. தேவனுடைய வழிநடத்துதல் சம்பந்தமான இரண்டு வசனங்களைக் கண்டுபிடித்து அவற்றை குழுவில் உள்ள மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ளுங்கள். | 1. கடின காலக்கட்டங்களில் தேவனிடத்தில் ஜெபிப்பது எவ்வளவு முக்கியமானது என்பதை சிந்தித்துப் பாருங்கள்.<br>2. தேவன் பதிலளிப்பார் என்று நம்பி எவ்வாறு நாம் எதிர்பார்ப்போடு ஜெபிக்கவேண்டும் என்பதை சிந்தித்துப்பாருங்கள்.<br>3. உங்களுடைய நெருங்கிய நண்பர்/உறவினர் ஒருவரிடம் அவருக்கு தேவன் எவ்வாறு குறிப்பிட்ட விஷயத்தில் ஜெபத்திற்கு பதிலளித்தார் என்பதைக் கேட்டறிந்து, அதை மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ளுங்கள். |
| **வாழ்ந்துகாட்டுங்கள்** | **இந்தப் பாடம் நமக்குவிடும் சவால் என்ன?**<br>1. தேவனுடைய வழிகள் சில நேரங்களில் புரிந்துகொள்ள முடியாத இரகசியமாக இருக்கிறது (சிலர் குணமடைகிறார்கள், வேறு சிலரோ இல்லை)?<br>2. நமது வாழ்க்கையைப் பற்றிய தேவனுடைய சித்தம் என்ன என்பதை நாம் எவ்வாறு கண்டுபிடிப்பது? | **இந்தப் பாடம் நமக்குவிடும் சவால் என்ன?**<br>1. நாம் கேட்டுக்கொள்ளும் விதத்தில் தேவன் நமது ஜெபங்களுக்கு பதிலளிப்பார் என்பதை நாம் ஏன் அடிக்கடி சந்தேகப்படுகிறோம்?<br>2. நமது பெலத்தைவிட தேவனுடைய வல்லமை எவ்வளவு பெரியது என்பதை நாம் எந்தெந்த வழிகளில் அறிகிறோம்? |

| | A 6 – நிலை 3<br>**பாடம் 1 – ஆபிரகாமின் பயணங்கள்**<br>**தலைப்பு – தேவன்மீது நம்பிக்கைவைத்தல்** | A 6 – நிலை 4<br>**ஆராய்ச்சி 1 – ஆபிரகாமின் பயணங்கள்**<br>**தலைப்பு – ஆபிரகாமின் அழைப்பு** |
|---|---|---|
| | **வேதப்பகுதி: ஆதியாகமம்12:1-9**<br>**முக்கிய வசனம்: எபிரேயர் 11:8**<br>**நாம் கற்றுக்கொள்வது:**<br>1. ஆபிராம் விசுவாசமுள்ளவனாயிருந்தார்; தேவன் தன்னை எங்கு நடத்திச் செல்கிறார் என்பதை அறியாதபோதிலும், அவர் தேவனை நம்பினார்.<br>2. ஆபிரகாமைப்போல தேவன் நம்மை அழைக்கும்போது, நாம் அவரை நம்ப வேண்டும் அவரைப் பின்பற்ற வேண்டும், அவருக்குக் கீழ்ப்படிய வேண்டும். உண்மையில், நாம் அவரிடம் நம் வாழ்க்கையை ஒப்படைக்க வேண்டும். | **வேதப்பகுதி: ஆதியாகமம் 11:27-32; ஆதியாகமம் 12:1-9;**<br>**முக்கிய வசனம்: அப்போஸ்தலர் 7:2-4**<br>**நாம் கற்றுக்கொள்வது:**<br>1. ஆபிராம் விசுவாசமுள்ளவனாயிருந்தார்; அவர் தேவனை நம்பினார், தேவன் தன்னை எங்கே அழைத்துச் செல்கிறார் என்று தெரியாதுபோதும்கூட அவரை நம்பினார்.<br>2. ஆபிராமைப் போலவே தேவன் நம்மை அழைக்கும்போது, நாம் அவரை நம்புவதும், அவரைப் பின்பற்றுவதும், அவருக்குக் கீழ்ப்படிவதும் அவசியமாகும். உண்மையில், நாம் நம்முடைய வாழ்க்கையை அவரிடம் ஒப்படைக்க வேண்டும். |
| **அறிமுகப்படுத்துங்கள்** | • ஒரு புதிய பள்ளிக்கு அவர்கள் எப்போதுமே சென்றிருக்கிறார்களா என்று குழுவை கேளுங்கள். இதில் சம்பந்தப்பட்டிருக்கும் சவால்கள் என்ன? (உங்களால் முடியும் புதிய அன்றாட வழக்கங்களைத் தொடங்குதல், வெவ்வேறு பயணங்களை ஏற்பாடுசெய்தல், புதிய நண்பர்களை உருவாக்குதல் மற்றும் புதிய ஆசிரியர்களை சந்தித்தல் போன்றவற்றைக் குறித்து நீங்கள் கலந்துரையாடலாம்).<br>• குழுவில் உள்ள யாராவது வேறு வீட்டிற்கு மாறியிருக்கிறார்களா எனக் கேளுங்கள். அதில் என்ன சவால்கள் இருந்தது? ஆபிராமுக்கும் அவருடைய குடும்பத்திற்கும் வேறு மொழி, உணவு, காலநிலை மற்றும் பழக்கவழக்கங்கள், அதே போல் வீட்டிலுள்ள நண்பர்களிடம் இருந்து தூரத்தில் இருத்தல் போன்ற புதிய சவால்கள் இருந்திருக்கும். | **நடந்துசெல்லும் விவாதம்.** இதற்கு முன்னர் போயிராத ஒரு நாட்டிற்கு நீண்ட பயணத்தை மேற்கொண்டு அங்கே ஒரு புதிய வீடு அமைக்க திட்டமிடுவதைப் போன்று கற்பனை செய்துபார்க்கும்படி குழுவை கேளுங்கள். இதில் என்ன சவால்கள் வரலாம்?<br>(ஆபிராமுக்கும் அவருடைய குடும்பத்திற்கும் வேறு மொழி, உணவு, காலநிலை மற்றும் பழக்கவழக்கங்கள், அதே போல் வீட்டிலுள்ள நண்பர்களிடம் இருந்து தூரத்தில் இருத்தல் போன்ற புதிய சவால்கள் இருந்திருக்கும்). கி4 தாளில் பின்வரும் வார்த்தைகளை தனித்தனியாக எழுதுங்கள்: நிச்ச யமில்லாமல்; கவலையோடு; உற்சாகமாக; மனஅழுத்தத்தோடு ; பயம்நிறைந்து. உள்ளே அறையின் தனித்தனி இடங்களில் சுவரில் தாள்களை ஒட்டவும். தாங்கள் மிக நன்றாக உணரும் மனநிலையை விவரிக்கும் வார்த்தைக்கு நேராக போய் நிற்கும்படி மாணவர்களிடம் கூறுங்கள். பின்னர் அவர்கள் தெரிவுசெய்த வார்த்தைகளைப் பற்றியும், அவர்கள் அவ்வாறு உணரக் காரணம் என்ன என்பதைப் பற்றியும் விவாதியுங்கள். |
| **முடியுங்கள்** | **பைபிள் கதையைக் கூறுங்கள்**<br>**கருத்துப்பரிமாறிக்கொண்டு விளக்குங்கள்:**<br>1. தான் காண்பிக்கப்போகும் வேறொரு தேசத்திற்கு குடும்பத்தோடு புறப்பட்டு போகும்படி தேவன் ஆபிராமிடம் கூறினார். அது அவ்வளவு எளிதான காரியமாக இருக்கவில்லை. ஆபிராமின் காலக்கட்டத்தில் பயணம் செய்வது என்பது கடினமானதாக இருந்தது மெதுவாகத்தான் போக முடியும். சிலரைத் தன்னோடு கூட்டிச் செல்லவேண்டும், மேலும் நிறைய காரியங்களை ஏற்பாடு செய்ய வேண்யிருந்தது. 2. தேவன் ஆபிராமுக்கு விசேஷமான வாக்குறுதியை கொடுத்தார். ஆபிராமை ஆசீர்வதித்து அவருடைய குடும்பத்தை ஒரு பெரிய நாடாக்குவேன் என்றார். இந்த தேசத்தின் மூலம் பூமியில் உள்ள மற்ற எல்லா மக்களுங்கூட ஆசீர்வதிக்கப்படுவார்கள். 3. ஆபிரகாம் தனது மனைவியாகிய சாராளோடும் மருமகனாகிய லோத்தோடும் புறப்பட்டு சென்றார். அவர்கள் தங்களுடைய உடைமைகளையெல்லாம் எடுத்துச் சென்றார்கள். அப்பொழுது ஆபிரகாமுக்கு 75 வயது. 4. அவர்கள் சிறிது காலம் பயணம்செய்த பிறகு, கர்த்தர் ஆபிராமுக்கு சீகேம் என்று சொல்லப்படுகிற இடத்திலே தரிசனமானார். அந்த தேசத்தை ஆபிராமுடைய குடும்பத்துக்குக் கொடுக்கப்போவதாக கூறினார். 5. ஆபிரகாம் ஒரு பலிபீடத்தைக் கட்டி கர்த்தரைப் பணிந்துகொண்டார். பிறகு புறப்பட்டுப்போய் பெத்தேல் மற்றும் ஆயி மலைகளுக்கு இடையே ஒரு கூடாரத்தை போட்டார். மீண்டும் கர்த்தரை பணிந்துகொள்வதற்காக ஒரு பலிபீடத்தை கட்டினார். பின்னர் அங்கிருந்து நெகேவ் பாலைவனத்தை நோக்கி பயணத்தைத் தொடர்ந்தார்.<br>**முக்கியமான வசனத்தை விளக்கிக்காட்டி, மாணவர்கள் அவற்றை கற்றுக்கொள்ள ஊக்குவியுங்கள்.**<br>**பாடம் 1ஐ முடியுங்கள். காண்பியுங்கள்: FBI – ஆபிரகாம் கானானுக்கு செல்லுதல். (மி)** | **பைபிள் கதையைக் கூறுங்கள்**<br>**கருத்துப்பரிமாறிக்கொண்டு விளக்குங்கள்:**<br>1. தான் காண்பிக்கப்போகும் வேறொரு தேசத்திற்கு குடும்பத்தோடு புறப்பட்டு போகும்படி தேவன் ஆபிராமிடம் கூறினார். அது அவ்வளவு எளிதான காரியமாக இருக்கவில்லை. ஆபிராமின் காலக்கட்டத்தில் பயணம் செய்வது என்பது கடினமானதாக இருந்தது மெதுவாகத்தான் போக முடியும். சிலரைத் தன்னோடு கூட்டிச் செல்லவேண்டும், மேலும் நிறைய காரியங்களை ஏற்பாடு செய்ய வேண்யிருந்தது.<br>2. தேவன் ஆபிராமுக்கு விசேஷமான வாக்குறுதியை கொடுத்தார். ஆபிராமை ஆசீர்வதித்து அவருடைய குடும்பத்தை ஒரு பெரிய நாடாக்குவேன் என்றார். இந்த தேசத்தின் மூலம் பூமியில் உள்ள மற்ற எல்லா மக்களுங்கூட ஆசீர்வதிக்கப்படுவார்கள்.<br>3. ஆபிரகாம் தனது மனைவியாகிய சாராளோடும் மருமகனாகிய லோத்தோடும் புறப்பட்டு சென்றார். அவர்கள் தங்களுடைய உடைமைகளையெல்லாம் எடுத்துச் சென்றார்கள். அப்பொழுது ஆபிரகாமுக்கு 75 வயது. 4. அவர்கள் சிறிது காலம் பயணம்செய்த பிறகு, கர்த்தர் ஆபிராமுக்கு சீகேம் என்று சொல்லப்படுகிற இடத்திலே தரிசனமானார். அந்த தேசத்தை ஆபிராமுடைய குடும்பத்துக்குக் கொடுக்கப்போவதாக கூறினார்.<br>5. ஆபிரகாம் ஒரு பலிபீடத்தைக் கட்டி கர்த்தரைப் பணிந்துகொண்டார். பிறகு புறப்பட்டுப்போய் பெத்தேல் மற்றும் ஆயி மலைகளுக்கு இடையே ஒரு கூடாரத்தை போட்டார். மீண்டும் கர்த்தரை பணிந்துகொள்வதற்காக ஒரு பலிபீடத்தை கட்டினார். பின்னர் அங்கிருந்து நெகேவ் பாலைவனத்தை நோக்கி பயணத்தைத் தொடர்ந்தார்.<br>**முக்கியமான வசனத்தை விளக்கிக்காட்டி, மாணவர்கள் அவற்றை கற்றுக்கொள்ள ஊக்குவியுங்கள்.**<br>**வேத ஆராய்ச்சி 1ஐ முடியுங்கள்.**<br>**காண்பியுங்கள்: FBI – ஆபிரகாம் கானானுக்கு செல்லுதல். (மி)** |
| **மீள்பார்வை** | ஆரான் முதல் பெத்தேல் வரை ஆபிரகாம் பயணம் செய்த விவரத்தை ஒரு மேப்பாக வரைக. இந்த கதையில் வரும் இடங்களின் பெயர்களை அதில் குறிப்பிடுக. மோரியாவின் பெரிய மரத்தையும், ஆராதனை செய்வதற்காக ஆபிரகாம் கட்டிய இரண்டு பலிபீடங்களையும் அதில் சேர்த்திருக்கிறீர்களா என்பதை உறுதிசெய்துகொள்ளுங்கள். | பைபிளின் அடிப்படையில் இன்று நாம் படித்ததை வைத்து, வேறொரு தேசத்திற்கு தேவன் போகும்படி அழைத்தபோது, ஆபிரகாமின் மனப்பான்மை எப்படியிருந்தது என்பதை விவரிக்கும் வார்த்தைகளை ஒரு பட்டியலிடுக. |
| **வாழ்ந்துகாட்டுங்கள்** | **இந்தப் பாடம் நமக்குவிடும் சவால் என்ன?**<br>1. புறப்பட்டு பயணம்செய்யும்படி தேவன் ஆபிரகாமைக் கேட்டுக்கொண்டபோது, அது எளிதான காரியமாக இல்லாதபோதிலும், ஆபிரகாம் தேவனுக்குக் கீழ்ப்படிந்தார். ஆபிகாமின் குணாதிசயத்தைப் பற்றி இது நமக்கு என்ன காண்பிக்கிறது?<br>2. நமக்கு முழுவதும் புரிந்துகொள்ள முடியாத சூழ்நிலைகளிலுங்கூட, தேவன்மீதுள்ள நாம் வைத்துள்ள விசுவாசம், ஒவ்வொரு நாளும் நாம் நடந்துகொள்ளும் விதத்தை எவ்வகையில் பாதிக்க வேண்டும்? | **இந்தப் பாடம் நமக்குவிடும் சவால் என்ன?**<br>1. இருவர் இருவராக அல்லது மூவராக குழுவாக இருந்து கலந்துபேசுங்கள்: ஆபிரகாம் தேவனுக்குக் கீழ்ப்படிந்தார். இதிலிருந்து தேவனைப்பற்றி ஆபிரகாம் கொண்டிருந்த பார்வையைப் பற்றி என்ன கற்றுக்கொள்கிறோம்?<br>2. தேவனுக்குக் கீழ்ப்படிவதில் சவாலாக இருக்கக்கூடிய சூழ்நிலையைக் குறித்து யோசித்துப் பாருங்கள். நநிச்சயமற்ற, அச்சப்படக்கூடிய அல்லது கவலையளிக்கும் வேளையிலும்கூட, நாம் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்று ஆபிரகாமின் சரித்திரம் நமக்குக் கற்றுத்தருகிறது? |

| | A6 - நிலை 3<br>பாடம் 2 - ஆபிரகாமின் பயணங்கள்<br>தலைப்பு - தெரிந்தெடுப்புகள் | A6 - நிலை 4<br>ஆராய்ச்சி 2 - ஆபிரகாமின் பயணங்கள்<br>தலைப்பு - ஆபிரகாமின் தெரிந்தெடுப்பு |
|---|---|---|
| | **வேதப்பகுதி: ஆதியாகமம் 13:1-18;**<br>**முக்கிய வசனம்: நீதிமொழிகள் 3:5&6**<br>**நாம் கற்றுக்கொள்வது:**<br>1. நம் வாழ்வில் நல்ல முடிவுகளை எடுக்கவேண்டியது முக்கியமானதாகும்.<br>2. நல்ல தீர்மானங்களை எடுக்க உதவும்படி நாம் தேவனிடம் கேட்க வேண்டும்.<br>அவருடைய வழிநடத்துதலை நாம் கேட்க வேண்டும். நாம் தேவனுக்கு நன்றிசெலுத்தி அவரை ஆராதிக்க வேண்டும் என்பதை நினைவில் வைக்கவேண்டும். | **வேதப்பகுதி: ஆதியாகமம் 13:1-18; ஆதியாகமம் 14:1-16**<br>**முக்கிய வசனம்: யோசுவா 24:15**<br>**நாம் கற்றுக்கொள்வது:**<br>1. ஆபிராம் தேவனுடைய வழிநடத்துதலையும் உதவியையும் நாடினார்,<br>அவர் தேவனுக்கு நன்றிசெலுத்தினார்.<br>2. நாம் செய்யும் எல்லாவற்றிலும் தேவனை அங்கீகரித்து, அவருடைய உதவி மற்றும் வழிகாட்டலை நாடி, நம் வாழ்வில் பெற்ற ஆசீர்வாதங்களுக்காக நாம் அவருக்குத் துதியையும் மகிமையையும் செலுத்த வேண்டும். |
| அறிமுகப்படுத்துங்கள் | • ஒவ்வொரு நாளும் நாம் தெரிவுசெய்கிறோம் மற்றும் முடிவுகளை எடுக்கிறோம். தினசரி எடுக்கும் முடிவுகளுக்கும், மற்றும் சில பெரிய வாழ்க்கையை மாற்றும் முடிவுகளுக்கும் உதாரணங்களை சொல்லும்படி குழுவினரிடம் கேளுங்கள். ஒப்பீடு செய்ய இந்த பட்டியலை பிலிப் சார்ட்டாக ஆக்குங்கள். • ஒவ்வொரு நபரிடமும் ஒரு துண்டு காகித்தைக் கொடுக்கவும். ஒரு பக்கத்தில் அவர்கள் சமீபத்தில் எடுத்த ஒரு சிறிய முடிவை குறிக்கும் ஒரு படத்தை வரைய வேண்டும். செய்துள்ளோன். மறுபுறத்தில் எதிர்காலத்தைப் பற்றி அவர்களின் நம்பிக்கை, கனவு அல்லது குறிக்கோளை குறிக்கும் ஒரு படம் வரைய வேண்டும். சிறிய குழுக்களில் அவர்கள் அவற்றைப் பகிர்ந்து கொள்ளலாம் மேலும் விவாதிக்கலாம். நாம் எல்லோரும் தீர்மானங்கள் மற்றும் தெரிவுகள் செய்ய வேண்டியவர்களாய் இருக்கிறோம் என்பதை விளக்குங்கள். மேலும் இவைகளில் நமக்கு உதவியும் வழிகாட்டுதலும் தேவை என்று விளக்குங்கள். நமது முடிவுகள் மற்றும் தேர்வுகள் அனைத்திற்கும் தேவன் நல்ல வழிகாட்டுதல் தருவார் என்று அவரை நம்பலாம். | கடவுளைச் சேவிப்பது ஒரு தெரிவு ஆகும். தேவனை சேவிப்பதை தெரிவுசெய்த மக்களுடைய வாழ்க்கையில் நாம் என்ன வேறுபாடுகளை காணலாம்? இதனை ஒரு பிலிப் சார்ட்டாக பட்டியலிடவும். இந்த பாடத்தில் நாம் ஆபிராமின் வாழ்க்கையை படம்பிடித்ததுபோல கற்போம் என்பதை நினைவில் வைக்கும்படி மாணவர்களிடம் சொல்லுங்கள். |
| முடியுங்கள் | **பைபிள் கதையைக் கூறுங்கள்**<br>**கருத்துப்பரிமாறிக்கொண்டு விளக்குங்கள்:**<br>1. ஆபிரகாம் இதற்கு முன்பு பெத்தேலுக்கும் ஆயிக்கும் இடையே பாளையமிறங்கின இடத்திற்கு திரும்பி போனார். அங்கே கர்த்தருக்காக ஒரு பலிபீடத்தைக் கட்டி இருந்தார். கர்த்தருடைய நாமத்தை சொல்லி ஆராதிப்பதற்காக அங்கே போனார். 2. ஆபிரகாம் ஒரு தீர்மானம் எடுக்க வேண்டியதாயிற்று. மிகவும் அதிகமான மக்கள் அந்த தேசத்தில் வாழ்ந்துகொண்டிருந்தபடியால், அந்த தேசத்தை உரிமைபாராட்டி அவர்கள் சண்டை போட்டுக் கொண்டிருந்தார்கள். எல்லோரும் வசிப்பதற்கு போதிய இடம் அங்கே இல்லாதபடியால், ஆபிரகாம் தன்னுடைய மருமகனாகிய லோத்தைப் பிரிந்து வேறு இடத்தில் வசிப்பதற்காக செல்லவேண்டிய நேரம் வந்தது. 3. லோத்து தனக்குப் பிரியமான இடத்தை தேர்ந்தெடுத்து அங்கு போய் வசிக்க ஆபிரகாம் அவருக்கு ஒரு வாய்ப்பைக் கொடுத்தார்.<br>4. யோர்தான் நதி பாயும் நீர்வளம் மிக்க செழிப்பான இடத்தை லோத்து தெரிந்தெடுத்து அங்கே பட்டணங்களின் அருகே வசிக்க தீர்மானித்தார். 5. ஆபிரகாம் கானான் தேசத்திலே வாழ்ந்தார்.<br>6. லோத்து தன் வழியே போனபிறகு, கர்த்தர் ஆபிரகாமோடே பேசி, வடக்கு தெற்கு கிழக்கு மேற்கு ஆகிய நான்கு திசைகளிலும் காணக்கூடிய எல்லா நிலத்தையும் ஆபிரகாமுக்கு கொடுப்பதாக வாக்குறுதி கொடுத்தார்.7. ஆபிரகாம் அநேகம் அநேகம் பிள்ளைகளை பெறுவார் என்றும் அந்த தேசம் அவர்களுக்கு சொந்தமானது ஆகும் என்றும் தேவன் வாக்குறுதி அளித்தார்.<br>8 ஆபிராம் எபிரோனில் மம்ரேக்கு அருகிலிருந்த பெரிய மரங்கள் அருகில் வசிக்கும்படி குடியேறினார். அங்கே கர்த்தரை ஆராதனை செய்வதற்காக அவர் ஒரு பலிபீடத்தை கட்டினார்.<br>**முக்கியமான வசனத்தை விளக்கிக்காட்டி, மாணவர்கள் அவற்றை கற்றுக்கொள்ள ஊக்குவியுங்கள்.பாடம் 2ஐ முடியுங்கள்.**<br>**காண்பியுங்கள்:**<br>**FBI - ஆபிரகாமும் லோத்தும் பிரிகிறார்கள். (மி)** | **பைபிள் கதையைக் கூறுங்கள்**<br>**கருத்துப்பரிமாறிக்கொண்டு விளக்குங்கள்:**<br>1. ஆபிரகாம் ஒரு தீர்மானம் எடுக்க வேண்டியதாயிற்று. மிகவும் அதிகமான மக்கள் அந்த தேசத்தில் வாழ்ந்துகொண்டிருந்தபடியால், அங்கு தங்களுடைய கால்நடைகளுக்கான மேய்ச்சல் நிலங்களுக்காக அவர்கள் சண்டையிட்டுக் கொண்டிருந்தார்கள். எல்லோரும் வசிப்பதற்கு போதிய இடம் அங்கே இல்லாதபடியால், ஆபிரகாம் தன்னுடைய மருமகனாகிய லோத்தைப் பிரிந்து வேறு இடத்தில் வசிப்பதற்காக செல்லவேண்டிய நேரம் வந்தது.<br>2. லோத்து தனக்குப் பிரியமான இடத்தை தேர்ந்தெடுத்து அங்கு போய் வசிக்க ஆபிரகாம் அவருக்கு ஒரு வாய்ப்பைக் கொடுத்தார்.<br>3. யோர்தான் நதி பாயும் நீர்வளம் மிக்க செழிப்பான இடத்தை லோத்து தெரிந்தெடுத்து அங்கே பட்டணங்களின் அருகே வசிக்க தீர்மானித்தார். 4. ஆபிரகாம் கானான் தேசத்திலே வாழ்ந்தார். 5. லோத்து தன் வழியே போனபிறகு, கர்த்தர் ஆபிரகாமோடே பேசி, வடக்கு தெற்கு கிழக்கு மேற்கு ஆகிய நான்கு திசைகளிலும் காணக்கூடிய எல்லா நிலத்தையும் ஆபிரகாமுக்கு கொடுப்பதாக வாக்குறுதி கொடுத்தார்.<br>6. ஆபிராம் எபிரோனில் மம்ரேக்கு அருகிலிருந்த பெரிய மரங்கள் அருகில் வசிக்கும்படி குடியேறினார். அங்கே கர்த்தரை ஆராதனை செய்வதற்காக அவர் ஒரு பலிபீடத்தை கட்டினார்.<br>7. ஒரு போராட்டமான காலகட்டத்தில் ஆபிரகாம் வாழ்ந்து கொண்டிருந்தார். லோத்து குடியிருந்த பட்டணத்தின் எதிரிகள் அதைத் தாக்கி கைப்பற்றி, லோத்தையும் அவரோடுகூட வேறுசிலரையும் பிடித்துச் சென்றார்கள். அவர்களுடைய உடைமைகளையும் கொண்டு போனார்கள்.<br>8. ஆபிராம் இதைக் கேட்டபொழுது, எதிரிகளைத் தாக்கி பணயக் கைதிகளை மீட்பதற்காக தன்னுடன் ஒரு படையைக் கொண்டுபோனார். ஆபிராம் எதிரிகளைத் தோற்கடித்தார். அவர் சோதோம் ராஜா கொடுத்த எதையும் ஏற்றுக்கொள்ளவில்லை, ஏனெனில், தேவனே எதிரிகள்மீது தனக்கு வெற்றியைத் தந்தார் என்றார்.<br>**முக்கியமான வசனத்தை விளக்கிக்காட்டி, மாணவர்கள் அவற்றை கற்றுக்கொள்ள ஊக்குவியுங்கள். வேத ஆராய்ச்சி 2ஐ முடியுங்கள். காண்பியுங்கள்: FBI - ஆபிரகாமும் லோத்தும் பிரிகிறார்கள். (மி)** |
| மீள்பார்வை | இன்று படித்த பாடத்தில் வந்த கதையை ஒரு செய்தித்தாளாக தயாரித்து அதற்குத் தலைப்பு கொடுத்து, சுருக்கமான செய்தியாக எழுதுங்கள். கதையில் வரும் எல்லா முக்கிய அம்சங்களும் அச்செய்தியில் இருக்கும்படி பார்த்துக்கொள்ளுங்கள். இரண்டிரண்டு பேராக அல்லது சிறு குழுக்களாக பிரிந்து இதை செய்து முடிக்கலாம். செய்திக் குறிப்புகளை காண்பித்து அவற்றைக் குறித்து விவாதிக்கலாம். | முக்கிய வசனமாகிய யோசுவா 24:15ஐ வாசியுங்கள். நீங்கள் இந்தக் கதையில் படித்ததின் அடிப்படையில், தான் தேவனுடைய ஒரு ஊழியக்காரன் என்பதை ஆபிரகாம் எவ்வாறு செய்கையில் வெளிப்படுத்துகிறார்? இந்தப் பாடத்தின் ஆரம்பத்தில், தேவனுடைய ஊழியக்காரர்களுக்கு இருக்கவேண்டிய குணாதிசயங்களின் பட்டியல கொடுக்கப்பட்டிருக்கிறதல்லவா, அதை மறுபடியும் பாருங்கள். நீங்கள் எதையாது சேர்க்க அல்லது மாற்ற விரும்புகிறீர்களா? தேவனை சேவிப்பது இன்று எப்படிப்பட்ட வேறுபாட்டை நம்முடைய வாழ்வில் கொண்டுவரவேண்டும்? |
| வாழ்ந்துகாட்டுங்கள் | **இந்தப் பாடம் நமக்குவிடும் சவால் என்ன?**<br>தான் தெரிந்துகொள்ளும் காரியங்களிலும் தீர்மானங்களிலும் ஆபிரகாம் தேவனை உட்படுத்தியிருந்தார், ஆதலால் தேவன் அவரை ஆசீர்வதித்தார். உங்கள் வாழ்க்கையில் முக்கியமான தீர்மானங்களை எடுக்கும்பொழுது உங்களை வழிநடத்தும்படி தேவனிடத்தில் கேட்பதைப்பற்றி சிந்தியுங்கள். | **இந்தப் பாடம் நமக்குவிடும் சவால் என்ன?**<br>ஒவ்வொரு மாணவருக்கும் ஒரு வெறும் தபால் அட்டையைக் கொடுங்கள். தேவனை இன்னும் உண்மையாக சேவிக்கக்கூடிய ஒரு வழியைக் குறித்து சிந்திக்கும்படி அவர்களுக்கு அறைகூவல் விடுங்கள். இந்தப் பாடத்தை நினைகூர்வதற்காக அவர்கள் ஒரு தனிப்பட்ட ஜெபத்தை எழுதி அதை வீட்டிற்குக் கொண்டுசெல்லலாம். |

| | A 6 - நிலை 3<br>பாடம் 3 - ஆபிரகாமின் பயணங்கள்<br>தலைப்பு - தேவனுடைய வாக்குத்தத்தங்கள் | A 6 - நிலை 4<br>ஆராய்ச்சி 3 - ஆபிரகாமின் பயணங்கள்<br>தலைப்பு - ஆபிரகாமின் நம்பிக்கை |
|---|---|---|
| | **வேதப்பகுதி: ஆதியாகமம் 17:1-8; ஆதியாகமம் 18:1-15; ஆதியாகமம் 21:1-5**<br>**முக்கிய வசனம்: மத்தேயு 1:21**<br>**நாம் கற்றுக்கொள்வது:**<br>1. ஆபிரகாம் காரியங்களைத் தீர்ப்பதற்கு தன்னிச்சையாக சொந்த வழியில் முயற்சி செய்தபோதிலும், தேவன் அவரை விட்டுவிடவில்லை.<br>2. ஆபிராம் திரளான மக்களினங்களுக்குப் பிதாவாயிருப்பார் என்று தாம் சொன்ன வாக்குத்தத்தத்தை தேவன் உறுதிப்படுத்தினார். இந்த ஆசீர்வாதம் ஆபிராமுக்கு மாத்திரமல்ல, சரித்திரத்தில் வரும் அனைத்து மககளுக்கும் உரியதாகும்.<br>3. சில சமயங்களில் தேவனுடைய வாக்குறுதிகளை நாம் சந்தேகிக்கக் கூடும், காரணம் அவை நடக்கும் என்று நம்பமுடியாத அளவுக்கு கடினமானதாக தோன்றும். நம சொந்த வழியில் விஷயங்களை கையாள முயற்சிக்கக் கூடும். தேவனுடைய வாக்குத்தத்தங்களை விசுவாசித்து அவை நிறைவேறுவறகாக காத்திருக்க வேண்டும் என இந்தப் பாடம் நமக்கு அறைகூவல் விடுக்கிறது. | **வேதப்பகுதி: ஆதியாகமம் 15:1-7; ஆதியாகமம் 17:1-19; ஆதியாகமம் 18:1-15**<br>**முக்கிய வசனம்: ஆதியாகமம் 18:14**<br>**நாம் கற்றுக்கொள்வது:**<br>1. ஆபிராமுக்கு வாரிசாக இருக்கப்போகும் ஒரு குழந்தையை கொடுக்கப்போவதாக தேவன் ஆபிரகாமுக்கு வாக்குத்தத்தம் கொடுத்திருந்தார். ஆபிராம் தேவனை விசுவாசித்தார், ஆனால் அவரும் அவரது மனைவியும் வயதானவர்களாய் இருந்தார்கள், இன்னும் எந்த குழந்தையும் இல்லாமல் இருந்தனர். அவர்கள் காரியங்களைத் தீர்ப்பதற்கு தன்னிச்சையாக சொந்த வழியில் முயற்சி செய்தனர்.<br>2. தேவன் ஆபிரகாம் மற்றும் சாராயை விட்டுவிடவில்லை. ஆபிரகாம் திரளான மக்களினங்களுக்கு பிதாவாயிருப்பார் என்ற தமது வாக்குத்தத்தை தேவன் ஆபிராமுக்கு உறுதிப்படுத்தினார். இந்த ஆசீர்வாதம் ஆபிராமுக்கு மாத்திரமல்ல, சரித்திரத்தில் வரும் அனைத்து மக்களுக்கும் உரியதாகும்.<br>3. சில சமயங்களில் தேவனுடைய வாக்குறுதிகளை நாம் சந்தேகிக்கக் கூடும், காரணம் அவை நடக்கும் என்று நம்பமுடியாத அளவுக்கு கடினமானதாக தோன்றும். நம சொந்த வழியில் விஷயங்களை கையாள முயற்சி செய்யக் கூடும். தேவனுடைய வாக்குத்தத்தங்களை விசுவாசித்து அவை நிறைவேறுவறகாக காத்திருக்க வேண்டும் என இந்தப் பாடம் நமக்கு அறைகூவல் விடுககிறது. |
| அறிமுகப்படுத்துங்கள் | அவர்கள் எப்பொழுதுதாவது ஒரு வாக்குறுதியை செய்திருந்தார்களா எனக்குழுவிடம் கேளுங்கள். குழுவிலுள்ள யாருக்காவதுஎவரேனும் ஒரு வாக்குறுதி அளித்ததுண்டா? ஒரு பிளிப் சார்ட்டில் இதனைப் பட்டியலாக எழுதுங்கள். சில நேரங்களில் மக்கள் தங்கள் வாக்குறுதிகளை காப்பதில்லை. இதற்கான காரணங்கள் என்ன? (குழுவினருடன் கலந்துரையாடுங்கள்). தேவன் தமது வாக்குறுதிகளை நிறைவேற்ற மாட்டார் எனத் தோன்றும் வேளைகளில் கூட தேவன் தமது வாக்குறுதிகளைக் காப்பாற்றுகிறார் என்பதை இந்த பாடம் கற்றுத்தருகிறது. | ஒரு அட்டையில் அல்லது ஃப்ளிப்சார்டில், இன்று மக்கள் அளிக்கும் வாக்குறுதிகளை (திருமணம் சபதம், இராணுவ உறுதிமொழி, சட்ட ஒப்பந்தங்கள், பணம் பரிமாற்ற ஒப்பந்தங்கள், முதலியன) பட்டியலாக உருவாக்கவும்.<br>எந்த அளவிற்கு வாக்குறுதிகளை காக்கிறார்கள் அல்லது காக்கத் தவறுகிறார்கள் என்பதை விவாதிக்கவும். தேவன் தமது வாக்குறுதிகளை காக்கிறார் என்று இன்றைய ஆய்வு கற்பிக்கிறது. |
| முடியுங்கள் | **பைபிள் கதையைக் கூறுங்கள்**<br>**கருத்துப்பரிமாறிக்கொண்டு விளக்குங்கள்:**<br>1. ஆபிரகாமுக்கு நிறைய பிள்ளைகள் இருப்பார்கள் என்று தேவன் வாக்குறுதி அளித்தார். 2. ஆபிராம் அவருடைய மனைவி சாராய் வயதானவர்களாக இருந்தார்கள். தங்களுடைய சொந்த வழியில் காரியங்களை செய்ய அவர்கள் முயற்சித்தார்கள். 3. எனினும் தேவன் தனது வாக்குத்தத்தத்தை மீறவில்லை. உண்மையில் அவர் ஆபிராம் மற்றும் சாராயுடன் தமது வாக்குறுதியை மீண்டும் உறுதிப்படுத்தினார். அந்த வாக்குறுதிக்கு அடையாளமாக அவர்களுக்கு புதிய பெயர்களை சூட்டினார் - அவர்கள் ஆபிரகாம் என்றும் சாராள் என்றும் அழைக்கப்படுவார்கள் என்றார். 4. ஆபிரகாம் திரளான தேசங்களுக்கு பிதாவாயிருப்பார் என்று தேவன் கூறினார். அந்த தேசத்தை ஆபிரகாமுக்கும் அவருடைய சந்ததியாருக்கும் கொடுப்பதாகவும், தான் அவர்களுடைய தேவனாக இருப்பார் என்றும் வாக்களித்தார். 5. அவரை சந்திக்க மூன்று பேர் வந்தார்கள். ஆபிரகாம் அவர்களிடத்தில் மிகவும் கனிவோடு நடந்து கொண்டார். 6. அடுத்த ஒரு வருடத்தில் ஆபிரகாமுக்கும் சாராருக்கும் ஒரு மகன் பிறப்பான் என்று கர்த்தர் சொன்னார். இதைச் சாராள் கேட்டபோது சிரித்தாள், ஏனென்றால் பிள்ளை பெற கூடாதபடிக்கு ஆபிரகாமும் சாராளும் மிகவும் வயதானவர்களாக இருந்தார்கள். 7. தேவன் தமது வாக்குறுதியைக் காப்பாற்றினார், சாராளுக்கு ஒரு மகன் பிறந்தான். 8. ஆபிரகாமும் சாராளும் தங்கள் குமாரனுக்கு ஈசாக்கு என்று பெயர் வைத்தார்கள், அதற்கு சிரிப்பு என்று அர்த்தம். தேவன் ஒரு நம்பமுடியாத வாக்குத்தத்தத்தை அவர்களுக்கு நிறைவேற்றி வயதான காலத்தில் அவர்களுக்கு மிகுந்த சந்தோஷத்தை ஏற்படுத்தினார்.<br>**முக்கியமான வசனத்தை விளக்கிக்காட்டி, மாணவர்கள் அவற்றை கற்றுக்கொள்ள ஊக்குவியுங்கள்.**<br>**பாடம் 3ஐ முடியுங்கள்.**<br>**காண்பியுங்கள்: FBI - ஆபிரகாமும் மூன்று புதிய நபர்களும் . (மி)** | **பைபிள் கதையைக் கூறுங்கள்**<br>**கருத்துப்பரிமாறிக்கொண்டு விளக்குங்கள்:**<br>1. ஆபிரகாமுக்கு நிறைய பிள்ளைகள் இருப்பார்கள் என்று தேவன் வாக்குறுதி அளித்தார்.<br>2. ஆபிராம் அவருடைய மனைவி சாராய் வயதானவர்களாக இருந்தார்கள். தங்களுடைய சொந்த வழியில் காரியங்களை செய்ய அவர்கள் முயற்சித்தார்கள்.<br>3. எனினும் தேவன் அவர்களைக் கைவிடவில்லை. அவர் தமது வாக்குறுதியை மீண்டும் உறுதிப்படுத்தினார். அவர்களுக்கு புதிய பெயர்களை சூட்டினார் - அந்த வாக்குறுதிக்குயை நினைவுகூரும்விதத்தில் அவர்கள் ஆபிரகாம் என்றும் சாராள் என்றும் அழைக்கப்படுவார்கள் என்றார்.<br>4. ஆபிரகாம் திரளான தேசங்களுக்கு பிதாவாயிருப்பார் என்று தேவன் கூறினார். அந்த தேசத்தை ஆபிரகாமுக்கும் அவருடைய சந்ததியாருக்கும் கொடுப்பதாகவும், தான் அவர்களுடைய தேவனாக இருப்பார் என்றும் வாக்களித்தார்.<br>5. அவரை சந்திக்க மூன்று பேர் வந்தார்கள். ஆபிரகாம் அவர்களிடத்தில் மிகவும் கனிவோடு நடந்து கொண்டார்.<br>6. அடுத்த ஒரு வருடத்தில் ஆபிரகாமுக்கும் சாராருக்கும் ஒரு மகன் பிறப்பான் என்று கர்த்தர் சொன்னார். இதைச் சாராள் கேட்டபோது சிரித்தாள், ஏனென்றால் பிள்ளை பெற கூடாதபடிக்கு ஆபிரகாமும் சாராளும் மிகவும் வயதானவர்களாக இருந்தார்கள்.<br>7. தேவன் தமது வாக்குறுதியைக் காப்பாற்றினார், சாராளுக்கு ஒரு மகன் பிறந்தான்.<br>8. ஆபிரகாமும் சாராளும் தங்கள் குமாரனுக்கு ஈசாக்கு என்று பெயர் வைத்தார்கள், அதற்கு சிரிப்பு என்று அர்த்தம். தேவன் ஒரு நம்பமுடியாத வாக்குத்தத்தத்தை அவர்களுக்கு நிறைவேற்றி வயதான காலத்தில் அவர்களுக்கு மிகுந்த சந்தோஷத்தை ஏற்படுத்தினார்.<br>**முக்கியமான வசனத்தை விளக்கிக்காட்டி, மாணவர்கள் அவற்றை கற்றுக்கொள்ள ஊக்குவியுங்கள்.**<br>**வேத ஆராய்ச்சி 3ஐ முடியுங்கள்.**<br>**காண்பியுங்கள்: FBI - ஆபிரகாமும் மூன்று புதிய நபர்களும் . (மி)** |
| மீள்பார்வை | முக்கிய வசனத்தை வாசிக்கவும். அதில் அடங்கியுள்ள கேள்வியை ஒரு புக்மார்க்காக உருவாக்கவும். இதை ஒவ்வொரு முறை பார்க்கும்போதும், நடக்குமா என்று நமக்குத் தோன்றினாலுங்கூட, தேவன் தமது வாக்குத்தங்களை நிறைவேற்றுவார் என்பதை நினைவுகூருங்கள். | சிறு குழுக்களில்: இந்தப் பாடத்தில் தேவனுடைய குணாதிசயத்தைப் பற்றியும், ஆபிரகாம் மற்றும் சாராளின் குணாதிசயத்தைப் பற்றியும் நாம் என்ன அறிந்துகொள்கிறோம்? மாணவர்களின் தங்களுடைய கருத்தை ஒரு துண்டு பேப்பரில் எழுதிவைத்து, பின்னர் அவைகளை ஒரே குழுவாகச் சேர்ந்து கலந்தாலோசிக்க வேண்டும். |
| வாழ்ந்துகாட்டுங்கள் | **இந்தப் பாடம் நமக்குவிடும் சவால் என்ன?**<br>1. நீங்கள் தேவனை நம்புகிறீர்களா?<br>2. தமது வசனமாகிய வேதத்தில் தேவன் சொல்லும் வாக்குத்தத்தங்களை நீங்கள் விசுவாசிக்கிறீர்களா?<br>3. இந்தப் பாடம் தேவன்மீதுள்ள உங்கள் விசுவாசத்தை எவ்வாறு பலப்படுத்தும்? | **இந்தப் பாடம் நமக்குவிடும் சவால் என்ன?**<br>1. உங்களுடைய வாழக்கையிலுள்ள இந்தக் காரியங்கள் தேவனுக்கு மிகவும் கடினமானவை என்று நீங்கள் நினைக்கிறீர்களா? 2. உங்கள் வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியிலும் தேவனை நம்புவதில் உற்சாகப்படுத்துவதாக இந்த ஆய்வில் நீங்கள் என்ன கற்றுக்கொண்டீர்கள்? |

| | A6 - நிலை 3<br>**பாடம் 4 - ஆபிரகாமின் பயணங்கள்**<br>**தலைப்பு - அன்பு சோதிக்கப்படுதல்** | A6 - நிலை 4<br>**ஆராய்ச்சி 4 - ஆபிரகாமின் பயணங்கள்**<br>**தலைப்பு - சவால்** |
|---|---|---|
| | **வேதப்பகுதி: ஆதியாகமம் 22:1-14**<br>**முக்கிய வசனம்: யோவான் 1:29**<br>**நாம் கற்றுக்கொள்வது:**<br>1. தேவன் ஆபிரகாமை சோதித்தார். ஆபிரகாம் தனது ஒரே மகனை பலியாக செலுத்தவேண்டும் என்று தேவன் கேட்டார். ஆபிரகாம் தேவனுக்குக் கீழ்ப்படிந்து அவரை முற்றிலும் நம்பினார்.<br>2. தேவன் எல்லாம் ஏற்பாடுசெய்பவர்: அவர் ஈசாக்கின் இடத்தில் ஈசாக்குக்கு பதிலாக வேறொரு பலியை ஏற்பாடுசெய்தார்.<br>3. நமக்குப் பதிலாக நாம் மரிக்கவேண்டிய இடத்தில், இயேசு நமது பாவங்களைப் போக்குவதற்காக பலியாகும்படி தேவன் ஏற்பாடு செய்தார். | **வேதப்பகுதி: ஆதியாகமம் 22:1-19**<br>**முக்கிய வசனம்: எபிரேயர் 11:17-19**<br>**நாம் கற்றுக்கொள்வது:**<br>1. தேவன் ஆபிரகாமை சோதித்தார். ஆபிரகாம் தனது ஒரே மகனை பலியாக செலுத்தவேண்டும் என்று தேவன் கேட்டார். ஆபிரகாம் தேவனுக்குக் கீழ்ப்படிந்து அவரை முற்றிலும் நம்பினார்.<br>2. தேவன் எல்லாம் ஏற்பாடுசெய்பவர்: அவர் ஈசாக்கின் இடத்தில் ஈசாக்குக்கு பதிலாக வேறொரு பலியை ஏற்பாடுசெய்தார்.<br>3. ஆபிரகாம் தனக்குக் கீழ்ப்படிந்தார், எதையும் தனக்குக் கொடுக்கத் தயாரானார் என்று தேவன் அறிந்தார், எனவே தேவன் தமது வாக்குத்தத்தை மீண்டும் உறுதிப்படுத்தினார்.<br>4. நமக்குப் பதிலாக நாம் மரிக்கவேண்டிய இடத்தில், இயேசு நமது பாவங்களைப் போக்குவதற்காக பலியாகும்படி தேவன் ஏற்பாடு செய்தார். |
| **அறிமுகப்படுத்துங்கள்** | மக்கள் அறிந்திருக்கும் விஷயங்களைப் பற்றி அறிவதற்காக நாம் சில நேரங்களில் சோதனைகளை பயன்படுத்துகிறோம். மக்கள் செய்ய வேண்டிய பரீட்சைகளை (ஓட்டுநர் தேர்வுகள், பள்ளித் தேர்வுகள், இசைத் தேர்வுகள், கேட்டல் மற்றும் பார்வை<br>சோதனைகள், முதலியன) இந்த பரீட்சைகள் மக்களின் அறிவு, புரிந்துகொள்ளும் தன்மை, உடல் திறன் மற்றும் நடத்தை ஆகியவற்றைப் பற்றி எதையாவது எடுத்துக் காட்டுகின்றன. இந்தக் கதையில், ஆபிரகாம் உண்மையிலேயே தன்னை நம்பியிருந்தாரா என்பதை தேவன் சோதித்துப் பார்க்கிறார். | இவர் இல்லாமல் அல்லது இது இல்லாமல் என்னால் வாழ முடியாது என்று சொல்லுமளவுக்கு உங்களுடைய வாழ்க்கையில் யாராவது இருக்கிறார்களா அல்லது எதாவது இருக்கிறதா?<br>ஆபிரகாமுக்கு, அந்த வகையில் அவருடைய மகன் ஈசாக்கு இருந்திருக்க வேண்டும். ஆபிரகாம் ஈசாக்கைப் பெற நீண்ட காலம் காத்திருந்தார். ஈசாக்கை இழந்திருந்தால் ஆபிரகாம் எப்படி உணர்ந்திருப்பார்? |
| **முடியுங்கள்** | **பைபிள் கதையைக் கூறுங்கள்**<br>**கருத்துப்பரிமாறிக்கொண்டு விளக்குங்கள்:**<br>1. வாக்குத்தத்தத்தின்படி தாம் ஆபிரகாமுக்கு கொடுத்த ஒரே பிள்ளையாகிய ஈசாக்கை தமக்குத் தகனபலியாக செலுத்தவேண்டும் என்று தேவன் ஆபிரகாமிடம் சொன்னார்.<br>2. ஆபிரகாம் தேவனுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்தார். தேவன் போக சொன்ன இடத்தை சென்றடைய மூன்று நாட்கள் பயணம் செய்தார்.<br>3. செலுத்துவதற்கான பலி எங்கே என்று ஈசாக்கு ஆபிரகாமைக் கேட்டபொழுது, அதை தேவன் தருவார் என்று ஆபிரகாம் பதிலளித்தார். இது தேவன்மீது ஆபிரகாம் வைத்திருந்த மிகுந்த விசுவாசத்தை காண்பிக்கிறது.<br>4. ஆபிரகாம் தேவனுக்கு முற்றிலும் கீழ்ப்படிந்தார், அவர் தேவனுக்காக எதையும் துறக்கத் தயாராக இருந்தார், தன்னுடைய அருமையான மகனையே பலிகொடுக்க தயாரானார்.<br>5. தேவன் ஆபிரகாமை கூப்பிட்டு உன் குமாரனாகிய ஈசாக்குக்கு எந்தத் தீங்கும் செய்ய வேண்டாம் என்று சொன்னார்.<br>6. மெய்யாகவே தேவன் ஈசாக்குக்கு பதிலாக பலி செலுத்துவதற்காக ஒரு ஆட்டுக்கடாவை ஏற்பாடு செய்தார்.<br>7. எண்ணிமுடியாத திரளான சந்ததியார் ஆபிரகாமுக்கு பிறப்பார்கள் என்றும் தேவன் வாக்குறுதி அளித்தார், அவர்கள் மூலமாக பூமியிலுள்ள மற்ற எல்லாம் தேசங்களும் ஆசீர்வதிக்கப்படும் என்றார்.<br>8. தேவன் தம்முடைய ஒரேபேரான குமாரனை நமக்கு பதிலாக தேவ ஆட்டுக்குட்டி ஆக அனுப்பினார் நாம் அவரை விசுவாசித்தால் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலம் நம்மை இரட்சிப்பினால் ஆசீர்வதிப்பார்.<br>**முக்கியமான வசனத்தை விளக்கிக்காட்டி, மாணவர்கள் அவற்றை கற்றுக்கொள்ள ஊக்குவியுங்கள்.**<br>**பாடம் 4ஐ முடியுங்கள்.**<br>**காண்பியுங்கள்: FBI - ஆபிரகாமும் ஈசாக்கும் (மி)** | **பைபிள் கதையைக் கூறுங்கள்**<br>**கருத்துப்பரிமாறிக்கொண்டு விளக்குங்கள்:**<br>1. வாக்குத்தத்தத்தின்படி தாம் ஆபிரகாமுக்கு கொடுத்த ஒரே பிள்ளையாகிய ஈசாக்கை தமக்குத் தகனபலியாக செலுத்தவேண்டும் என்று தேவன் ஆபிரகாமிடம் சொன்னார்.<br>2. ஆபிரகாம் தேவனுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்தார். தேவன் போக சொன்ன இடத்தை சென்றடைய மூன்று நாட்கள் பயணம் செய்தார்.<br>3. செலுத்துவதற்கான பலி எங்கே என்று ஈசாக்கு ஆபிரகாமைக் கேட்டபொழுது, அதை தேவன் தருவார் என்று ஆபிரகாம் பதிலளித்தார். இது தேவன்மீது ஆபிரகாம் வைத்திருந்த மிகுந்த விசுவாசத்தை காண்பிக்கிறது.<br>4. ஆபிரகாம் தேவனுக்கு முற்றிலும் கீழ்ப்படிந்தார், அவர் தேவனுக்காக எதையும் துறக்கத் தயாராக இருந்தார், தன்னுடைய அருமையான மகனையே பலிகொடுக்க தயாரானார்.<br>5. தேவன் ஆபிரகாமை கூப்பிட்டு உன் குமாரனாகிய ஈசாக்குக்கு எந்தத் தீங்கும் செய்ய வேண்டாம் என்று சொன்னார்.<br>6. மெய்யாகவே தேவன் ஈசாக்குக்கு பதிலாக பலி செலுத்துவதற்காக ஒரு ஆட்டுக்கடாவை ஏற்பாடு செய்தார்.<br>7. எண்ணிமுடியாத திரளான சந்ததியார் ஆபிரகாமுக்கு பிறப்பார்கள் என்றும் தேவன் வாக்குறுதி அளித்தார்,<br>8. தேவன் தம்முடைய ஒரேபேரான குமாரனை நமக்கு பதிலாக தேவ ஆட்டுக்குட்டி ஆக அனுப்பினார் நாம் அவரை விசுவாசித்தால் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலம் நம்மை இரட்சிப்பினால் ஆசீர்வதிப்பார்.<br>**முக்கியமான வசனத்தை விளக்கிக்காட்டி, மாணவர்கள் அவற்றை கற்றுக்கொள்ள ஊக்குவியுங்கள்.**<br>**வேத ஆராய்ச்சி 4ஐ முடியுங்கள்.**<br>**காண்பியுங்கள்: FBI - ஆபிரகாமும் ஈசாக்கும் (மி)** |
| **மீள்பார்வை** | இயேசு கிறிஸ்துதான் பரிபூரணமான பலி என்றும், உலகத்தின் பாவத்தை சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி என்றும் இன்றைய முக்கிய வசனம் கற்றுத்தருகிறது. தேவனை விசுவாசித்து உங்களுடைய சொந்த இரட்சகராக கர்த்தராகிய இயேசுவை ஏற்றுக்கொண்டிருக்கிறீர்களா? | இன்று படித்த பாடத்தில் வரும் சம்பவங்கள் நடைபெற்ற இடத்தை, ஆபிரகாம் 'தேவன் பார்த்துக்கொள்ளும் இடம்' என்று அழைத்தார். தேவன் நமக்காக எவ்வாறு எல்லாம் ஏற்பாடு செய்திருக்கிறார்? |
| **வாழ்ந்துகாட்டுங்கள்** | **இந்தப் பாடம் நமக்குவிடும் சவால் என்ன?**<br>ஆபிரகாம் தேவனை முற்றிலும் விசுவாசித்து அவருக்குக் கீழ்ப்படிந்தார், இதனால் தேவன் அவரை மிகவும் ஆசீர்வதித்தார். நாம் எவ்வாறு ஆபிரகாமின் முன்மாதிரியைப் பின்பற்றக் கூடும்? | **இந்தப் பாடம் நமக்குவிடும் சவால் என்ன?**<br>தேவன் ஆபிரகாமின் விசுவாசத்தை சோதித்துப்பார்த்தார், என்றாலும் ஆபிரகாம் தேவனை விசுவாசித்து அவருக்குக் கீழ்ப்படிந்தார். அவருடைய முன்மாதிரியை நாம் எவ்வாறு பின்பற்றக் கூடும்? |

## ஆசிரியர்கள் பாடங்களை குறித்துவைப்பதைப்பற்றிய வழிமுறைகள்

**நிலை 3 பாடங்கள்**

- மாணவர்கள் பைபிளை பார்க்காமல் இந்தப் பாடங்களை முடிக்க முடியாது, சில நேரங்களில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வேதப்பகுதிகளை பார்க்கவேண்டியதாகும்.
- குறுக்குநெடுக்கு வார்த்தைகள், வார்த்தை கட்டங்கள், விடுபட்ட வார்த்தைகள் போன்று பலதரப்பட்ட கேள்விகள் உண்டு.
- பல வகையான பைபிளை பயன்படுத்தி பதிலெழுதும் வகையில் கேள்விகள் அமைக்கப்பட்டுள்ளன.
- நமது நோக்கம், எந்தவகையான பைபிள் வைத்திருந்தாலும், மாணவர்கள் பதிலெழுதக்கூடியவர்களாகத் திகழவேண்டும் என்பதே.
- எல்லாப் பாடங்களும் சரியாக இருக்கும் பட்சத்தில், வாரத்திற்கு 20 மதிப்பெண்கள் என்ற வகையில் மாதத்திற்கு 80 மதிப்பெண்கள் கொடுக்கப்படுகிறது.
- நிலை 3 – குறிப்பிட்டதுபோல, ஒரு பதிலுக்கு 1 மதிப்பெண் வழங்கவேண்டும்.

**நிலை 4 ஆராய்ச்சிகள்**

- நிலை 3ல் உள்ள மாணவர்களுக்கு இவை கடினமான பாடங்களாகும்.
- சிக்கலான கேள்விகளும் பதில்களும் தேவைப்படுகின்றன.
- எல்லாப் பாடங்களும் சரியாக இருக்கும் பட்சத்திலும் பதில்கள் முழுமையானவைகளாக இருக்கும் பட்சித்திலும், வாரத்திற்கு 20 மதிப்பெண்கள் என்ற வகையில் மாதத்திற்கு 80 மதிப்பெண்கள் கொடுக்கப்படுகிறது.

**மார்க்கிங் குறிப்புகள்**

ஆசிரியர்கள் முதலில் இதைச் செய்யவேண்டும் எனக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்:

- ஒவ்வொரு பாடத்தையும் சரிபார்த்துவிட்டு, சரியான அல்லது சரியல்லாத பதிலை அடையாளம் செய்யுங்கள்.
- சொல்லியிருக்கிறபடி தேவையான கருத்துக்களை தாருங்கள்.
- கான்ட்ராஸ்ட் கலரை பயன்படுத்தி, ஒவ்வொரு பதிலையும் டிக் செய்யுங்கள்.
- தேவையான இடங்களில் சரியான பதிலை எழுதுங்கள், எழுத்துப்பிழை இருந்தால் திருத்துங்கள், இதனால் மதிப்பெண் குறைக்கப்படுவதில்லை.
- அரைகுறையான பதிலுக்கு குறைவான மதிப்பெண் அளிக்கவேண்டும்.
- மாதத்தில் எடுக்கும் மொத்த மதிப்பெண்களைக் கூட்டி பின்பக்கத்தில் அதற்கென்று கொடுக்கப்பட்டுள்ள இடத்தில் எழுதுக.

மாணவர்களுக்கு அவர்களுடைய வேதஆராய்ச்சியில் இயன்றவரை எல்லாவகையிலும் தாராள மனத்தோடு ஊக்குவிப்பது உண்மையில் அவசியமானது. ஒவ்வொரு மாதமும் ஆசிரியர் மாணவர்களை ஊக்குவிக்கும் வார்த்தைகளை பாடப்பகுதியில் அதற்கென்று தரப்பட்டுள்ள இடத்தில் எழுதுவது உதவியாய் அமையும். நல்ல வர்ணம்தீட்டுதல், சுத்தம், பெற்ற மதிப்பெண்கள், மாணவர் பாடத்தைப் புரிந்துகொண்டவிதம் போன்றவற்றைப்பற்றி ஆசிரியரின் கருத்தை எழுதிவைக்கலாம்.

கருத்துக்கள் பலதரப்பட்டதாக இருக்கும்படி முயற்சிக்கிறோம். கேள்விகள், கூற்றுகள், கண்டறிந்தவை, ஊக்குவிக்கும் வாசகங்கள் போன்றவையும் பலதரப்பட்டதாக இருக்கும்படி பார்த்துக்கொள்ளவேண்டும். சிந்தனை செய்வது இதற்கு அவசியம், ஆனால் அதே நேரத்தில் மாணவர்களின் உற்சாகம் களைகட்டியிரும்படி பார்த்துக்கொள்ள வேண்டும். ஒவ்வொரு மாதமும் ஒரேவிதமான வாசகமும் ஒரேவிதமான கேள்வியும் மீண்டும் மீண்டும் வருமானால் அது தாக்கம் குறைந்து பலனற்றதாகிவிடும்.

**நிலை 3**

**பொதுவான கருத்துக்கள்**

'நல்ல வேலை! நீ கேள்வியை கவனமாக வாசித்திருக்கிறாய் என்பது வெளிப்படையாகத் தெரிகிறது. குறிப்பாக கடைசி கேள்விக்கு நீ அளித்திருக்கும் பதிலில் நல்ல வார்த்தைகளை பயன்படுத்தியிருப்பது எனக்கு பிடித்திருக்கிறது'.

'யோவான்' நீ நல்ல முறையில் கடினமாக உழைத்திருக்கிறாய். நீ எல்லா கேள்விகளுக்கும் பதிலளிக்க முயன்றிருப்பது பெருக காரியம். விடுபட்டவற்றை நான் உனக்காகப் பூர்த்திசெய்திருக்கிறேன்'.

**ஆவிக்குரிய அபிப்பிராயங்கள்**

'மோசேயுக்கு இஸ்ரவேல் ஜனங்களோடு கடினமான சமயங்கள் சிறிது காலம் உண்டாயிருந்தது, ஆனால் மோசேயே எல்லாப் பிரச்சனைகளையும் கையாள தேவன் அனுமதிக்கவில்லை'.

'தேவனை நேசிக்கவேண்டும் என்று தன்னுடைய தகப்பன் தன்னிடம் போதித்ததை யோசேப்பு ஒருபோதும் மறக்கவில்லை. வீட்டைவிட்டு வெகு தூரத்தில் இருந்தபோதும்கூட அவன் அதை மறக்கவில்லை'.

'கர்த்தராகிய இயேசுவின் அருகில் செல்லவேண்டும் என்று பர்த்திமேயு தீர்மானித்திருந்தான். அவன் ஏமாற்றமடையவில்லை, ஏனென்றால் அவனால் இப்பொழுது பார்க்கமுடிகிறது, மேலும் இயேசு உண்மையில் விசேஷமானவர் என்று அறிந்துகொண்டான்.'

**நிலை 4**

**பொதுவான அபிப்பிராயங்கள்**

'மீண்டும் நல்ல பாடங்கள். நீ இந்த பைபிள் கதைகளைப்பற்றி நன்றாக புரிந்துகொண்டிருக்கிறாய், அவைகளை ரசித்திருக்கிறாய் என்று நினைக்கிறேன். இந்தப் பாடங்களைப் படித்துமுடிக்க நன்றாக நேரம் செலவிட்டதற்காக நன்றி. இவைகளை வேகமாக வாசித்துமுடிப்பது எளிதாயிருக்கும், எனவே உனது முயற்சியைப் பாராட்டுகிறேன்'.

'ராகேல் இது நல்ல முயற்சி. நீ கதையை நன்றாகப் புரிந்துகொள்ளவில்லை என்று நீ எழுதிய பதிலிருந்து அறிகிறேன். மீண்டும் நீ இதை வாசிக்க முயற்சித்தால் நல்லது'.

**ஆவிக்குரிய அபிப்பிராயங்கள்**

'பரலோகத்துக்குரிய அல்லது ஆழமான கருத்துக்களை உள்ளடக்கியிருக்கும் பூலோகக் கதைகளே உவமைகள் என்று சிலவேளைகளில் அழைக்கப்படுகின்றன. ஆராய்ச்சி 3ல் உள்ள உவமையில் அடங்கியுள்ள ஆழமான அர்த்தம் என்ன என்று நினைக்கிறாய்?'

'ஸ்தேவான் மிகவும் கொடூரமான முறையில் மரணமடைந்தார், ஆனாலும் அவர் மரிக்க பயப்படவில்லை, ஏனென்றால் எல்லாம் தேவனுடைய கட்டுப்பாட்டில்தான் உள்ளது என்றும், தான் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவோடு பரலோகத்தில் இருப்பார் என்றும் அறிந்திருந்தார்'.

© Bible Educational Services 2015

www.besweb.com